




கல்முனை NET
kalmunainet.com
உண்மையின் முகம்
பரிமாணம்
Parimanam
e-Paper
# பரிமாணம்
தமிழ் மொழியினருக்கான தகவல் தளம்

இதழ்: 17 | சுபகிருது வருடம் மார்கழி 16 | 2022 டிசம்பர் 31 சனிக்கிழமை | 21 பக்கங்கள் | விலை 70/-







## திருகோணமலை
நல்லிணக்கத்தின் அழகிய அடையாளம்

09

### இலங்கை நாணய வீழ்ச்சி
## மீண்டெழுமா இலங்கை?

04

# ஒற்றுமைக்கு குந்தகம்: சுமந்திரனின் கருத்துக்கு மாவை எச்சரிக்கை

## ஒன்றுபட முன் வரும் தமிழ் கட்சிகள் அதிருப்தி

03



### மொட்டு – யானை கூட்டு:
## அதிகார இலக்கை அடைவது சாத்தியம் இல்லை

06



## கோரத்தாண்டவமாடிய சுனாமிக்கு வயது 18

11




## முதன்முறையாக வெளிநாட்டு லீக்கில் வியாஸ்காந்த்!

20

## பாதுகாப்புக்கு பாதிப்பு ஏற்படாமல் காணிகளை விடுவியுங்கள்

03





### சினிமா காதலில் மூழ்கிய நடிகை
## நயோமி

13

# உரசிப் பார்க்கும் குட்டி தேர்தல்: திண்டாடும் அரசு

✍ குணா

நாடும் மக்களும் எக்கேடு கெட்டாலும் பரவாயில்லை அரசியலை நாம் செய்தே ஆக வேண்டும் என்ற நிலையில் அரசியல் கட்சிகள் களமிறங்கியிருக்கின்றன.

உண்பதற்கு உணவு இல்லை. உடல் உறுப்புகளை விற்று உணவு தேடும் பரிதாப நிலைக்கு இலங்கை மக்கள் தள்ளப்பட்டு இருக்கும் நிலையில், தேர்தலுக்கு வடம் பிடித்திருக்கின்றன அரசியல் கட்சிகள்.

பிறக்கின்ற ஆண்டு தேர்தல் ஆண்டு என்ற நிலைக்கு இலங்கை இப்போது தள்ளப்பட்டு இருக்கிறது. சகல கட்சிகளுமே தேர்தலுக்கு தயாராகிக் கொண்டிருக்கின்றன.

பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி, ஊர் ஊராக தேர்தல் பிரச்சாரங்களை ஆரம்பித்துள்ளது. அதனுடைய தலைவராக இருக்கின்ற சஜித் பிரேமதாச, பிரசார மேடைகளிலே மக்களுடைய, பொருளாதார நெருக்கடி தொடர்பாக அப்பட்டமாக எடுத்துக் கூறுகிறார். ஆட்சிக்கு வந்தால், பிரச்சனைகளுக்கு உரிய தீர்வு காணப்படும் என்று அடித்து கூறுகிறார்.

ஜனாதிபதி தலைமையிலான ஐக்கிய தேசியக் கட்சி, ஆசனம் எதுவும் பெற முடியாமல் படு தோல்வி அடைந்த கட்சி ஆகும். அந்தக் கட்சி பெற்ற தேசிய பட்டியல் மூலம், ஓர் ஆசனத்தை பெற்று பாராளுமன்றத்துக்குள் நுழைந்த, ரணில் விக்கிரமசிங்க, அதிர்ஷ்டவசமாக ஜனாதிபதியாகிவிட்டார்.

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, 65 லட்சம் மேலதிக வாக்குகளால் ஜனாதிபதியாக தேர்வு செய்யப்பட்ட பொழுதிலும், அந்த மக்களாலேயே துரத்தி அடிக்க பட்டார். சரியான திட்டமிடலும் முகாமைத்துவமும் இல்லாமல் நாட்டை நடுத்தெருவில் சீரழித்த கோட்டாபய ராஜபக்ஷ நாட்டை விட்டு தப்பி ஓடியதை அடுத்து, ஜனாதிபதியானவர், தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க.

இவர் பதவியேற்றதன் பின்பு, வரிசையில் மக்கள் காத்திருந்த யுகத்துக்கு முற்றுப்புள்ளி வைத்தாலும், நாடு இன்னும் ஸ்திர நிலையை அடையவில்லை. இந்த நிலையிலும் நாட்டை ஸ்திரப் படுத்துவதாக இருந்தால், தேர்தல் நடத்த வேண்டும் என்ற உறுதிப்பாட்டுடன் ஜனாதிபதி செயல்படுகிறார்.

ஆசனங்கள் எதுவுமே இல்லாத நிலையில் இருக்கின்ற தனது ஐக்கிய தேசியக் கட்சியை எவ்வாறு களத்தில் இறக்குவது என்ற வியூகம் வகுப்பதிலும், அரசியல் கட்சிகளுடன் கூட்டணி அமைக்கும் பேச்சு வார்த்தையிலும் ஜனாதிபதி நேரடியாகவே இப்பொழுது ஈடுபட்டு வருகிறார்.

மாவட்ட அபிவிருத்திகள் தொடர்பாக, ஆராய்வதற்காக, மாவட்டம் மாவட்டமாக அவர், அதிகாரிகளோடும் அமைச்சர்களோடும் படைபட்டாளங்களோடும் செல்லும் அவர், அதிகாரிகள் மட்டத்தில் அறிவுறுத்தல்களை வழங்கினாலும், தனது ஐக்கிய தேசியக் கட்சியின் நலனை முன்னிலைப்படுத்தி செயல்படுவதை நாம் அவதானிக்கவே முடிகிறது.

இதேபோல, மக்கள் மத்தியில் செல்வாக்கு இழந்து கிடக்கின்ற ஆளும் கட்சியான பொது சன பெரமுன (SLPP), தேர்தல் கூட்டணிகளை யாருடன் அமைப்பது என்பது தொடர்பில் தடுமாறிய நிலையில் , வியூகங்களை அமைப்பதற்கு பசில் ராஜபக்ச தலைமையில் செயல்படுகின்றார்கள்.

மக்களின் பிரச்சினைகளையும் நெருக்கடிகளையும் ஓரம் தள்ளிவிட்டு, அரசியல் கட்சிகள் தேர்தலுக்கு தயாராகிக் கொண்டிருக்கும் நிலை தான் இது. ஆனால் இன்றைய நிலையில், எந்தத் தேர்தலை நடத்த வேண்டும் என்பதில், எந்தக் கட்சியும் உறுதியான நிலைப்பாட்டில் இல்லை.

உள்ளூராட்சி சபை தேர்தல்கள், மாகாண சபை தேர்தல்கள், பொதுத் தேர்தல், ஜனாதிபதி தேர்தல்- இவை நான்கு தேர்தல்களையும் இந்த ஆண்டு நடத்தியே ஆக வேண்டும்.

இலங்கையில் ஒரு ஸ்திரமான நிலையை உருவாக்க வேண்டும் என்பது சர்வதேசத்தின் எதிர்பார்ப்பு ஒரு ஸ்திரமான நிலை இருந்தால் தான், நாட்டின் பொருளாதாரத்தை கட்டி எழுப்ப முடியும் என்பது யதார்த்தமான உண்மையாகும்.

உறுதியான ஓர் அரசாங்கம் இலங்கையில் இருந்தால் தான், உதவிகளையும் ஒத்தாசைகளையும் வழங்க முடியும் என்பது, சர்வதேச நாணய நிதியத்தினதும், கடன் வழங்கும் நாடுகளினதும் எதிர்பார்ப்பாகும்.

நிலைமை இவ்வாறு இருக்கும் போது, உறுதியான பொருளாதார நிலையை இலங்கையில் ஏற்படுத்துவதாக இருந்தால், எந்தத் தேர்தலை நடத்த வேண்டும் என்பது மக்கள் மத்தியிலே இப்பொழுது எழுந்திருக்கின்ற பெரும் கேள்வி ஆகும்.

உள்ளூர் ஆட்சி சபை தேர்தல்களை நடத்த வேண்டும் என்பதில், எதிரணி கட்சிகள் வரிந்து கட்டிக் கொண்டிருக்கின்றன. அதற்காக உச்ச நீதிமன்றம் வரை இந்த கட்சிகள் சென்று இருக்கின்றன.

உண்மையில்,உள்ளூராட்சி சபை தேர்தலை நடத்துவதன் மூலம், நாட்டின் பொருளாதாரத்தில் ஒரு ஸ்திர நிலையை ஏற்படுத்த முடியுமா? என பொருளியல் நிபுணர்கள் கேள்வி எழுப்புகின்றார்கள். எதிர்க்கட்சியினதும், ஏனைய சிறுபான்மை கட்சிகளினதும் இந்த அடம் பிடிப்பு, நாட்டில் ஒரு தளர்வு போக்கை காட்டுகின்றது.

நிலை குலைந்து போய் இருக்கின்ற இந்த அரசியல் கட்சிகள், தங்களை பலப்படுத்துவதற்காகவே, உள்ளூராட்சி தேர்தலை நடத்த வேண்டும் என்று பிடியாக நிற்கிறார்கள் என்பது தெளிவாக தெரிகிறது என அரசியல் ஆய்வாளர்கள் சுட்டிக் காட்டுகின்றார்கள்.

அதாவது, நாட்டில் ஸ்திர நிலை ஏற்படுகிறதோ இல்லையோ...? கட்சிகள் தங்களை பலப்படுத்திக் கொள்ள வேண்டும் என்பதில் இந்த அடம் பிடிப்பு தெட்டத் தெளிவாகின்றது.

பொதுத் தேர்தல் அல்லது ஜனாதிபதி தேர்தலை நடத்துவது தான், உலகுக்கு ஒரு ஸ்திர நிலையை காட்டுவதற்கு வழி ஏற்படுத்தும்.

உள்ளூராட்சி தேர்தலைதான் முதலில் நடத்துவதற்கான ஏற்பாடுகளை தேர்தல் திணைக்களமும் செய்கிறது போல் தெரிகிறது. இதற்கு கட்சிகளின் அழுத்தங்களும் ஒரு காரணம். இந்த மாதம் முடிவுக்குள் தேர்தலுக்கான தகுதி அறிவிக்கப்படும் என்பது தேர்தல் ஆணைக்குழுவின் கருத்தாக இருக்கிறது.

உள்ளூராட்சி சபைகள் என்பது, அரசாங்கத்தின் நிர்வாக அலகுகளை கீழ் மட்டத்துக்கு கொண்டு செல்லும் ஜனநாயக வழிமுறையாகும். உள்ளூர் ஆட்சி சபைகளுக்கும் தேர்தல் நடத்த வேண்டும் என்பதில் மாற்றுக் கருத்து இல்லை. ஆனால் நாடு இருக்கின்ற நிலையில் இஸ்திரி நிலையை ஏற்படுத்துவதாக இருந்தால், பொதுத் தேர்தல் அல்லது ஜனாதிபதி தேர்தலை நடத்த வேண்டும். மாறாக, கட்சிகளின் பலத்தை காட்டுவதற்கான ஒரு களமாகவே உள்ளூராட்சித் தேர்தல் இருக்கப் போகிறது.

இன்றைய நெருக்கடி நிலையில், நாட்டையும் மக்களையும் பற்றி சிந்திப்பவர்கள், உள்ளூராட்சி தேர்தல் நடத்துவதை முழு மனதுடன் ஏற்க மாட்டார்கள் என்பதே யதார்த்தமான உண்மை.

பரிமாணம் கல்முனை NET Parimanam
பரிமாணம்
தமிழ் மொழியினருக்கான தகவல் தளம்
கல்முனைநெற் ஊடக வலையமைப்பு
எல்லை வீதி, கல்முனை 01.
kalmunainet@gmail.com | +94762933026 | +94773457915

## வெட்கக்கேடு..!

“காத்துக் கிடப்பதில் இன்பம் உண்டு; காக்க வைப்பதில் சுகம் உண்டு” இது தமிழ் சினிமா பாடல் ஒன்றின் வரி.

நம் நாட்டின் தற்போதைய நிலையில் இது நமக்கு வெகுவாகவே பொருந்துகிறது.

தென்கொரியாவில் இருந்து வந்த நிர்வாக அதிகாரி ஒருவர் தெரிவித்த கருத்துக்கள், இலங்கையில் இன்னும் விமர்சன அலைகளை தட்டி எழுப்பி இருக்கின்றன.

கொழும்பில் நடந்த நிகழ்வு ஒன்றுக்கு வருகை தந்த தென்கொரிய அனர்த்த நிவாரண அமைப்பின் தலைவர் (*South korea disaster relief foundation*) சூ சங் லீ, இலங்கை அமைச்சர் ஒருவரையும் இலங்கையையும் மிகவும் கண்டிப்போடு விமர்சித்தார்.

இந்த நிகழ்வுக்கு வருகை தரவேண்டிய அமைச்சர் ஒருவர் அரை மணி நேரம் தாமதமாக வந்தார். அவரைக் கண்டதும் மிகவும் ஆவேசம் அடைந்த அவர், கடுமையான வார்த்தை பிரயோகங்களோடு பொரிந்துதள்ளினார்.

**“பொறுப்புக்கு கூறும் தன்மையும் நேர முகாமைத்துவமும் இல்லாதவர்களுடன் பேசுவதில் பலன் இல்லை”** என கடுந்தொனியில் சொன்னார்.

இவரது இந்த வார்த்தை வெட்கி தலை குனிய வைக்கிறது.

இலங்கையை பொறுத்த வரைக்கும் 30 நிமிட தாமதம் என்பது சகஜமான ஒன்று. காத்து கிடப்பதும் காக்க வைப்பதும் இலங்கையின் கலாச்சாரங்களில் ஒன்று என்று கூட சொல்லலாம்.

நாடு இன்று பாரிய நெருக்கடியில் தள்ளப்பட்டு இருப்பதற்கு நிர்வாக சீர்கேடும் வினைத்திறனுடன் செயல்படாத அரச இயந்திரமும் முக்கிய காரணம் என்பதை யாரும் அலட்டிக் கொண்டதாக இல்லை.

அரசு இயந்திரத்தை உயிர்ப்புடன் செயல்பட வைப்பவர்கள் அமைச்சர்களும் பாராளுமன்ற உறுப்பினர்களும் மறந்து செயல்படுகின்ற நிலை ஊறிப்போன ஒன்றாகி விட்டது.

அமைச்சராக நியமிக்கப்படும் ஒருவரும் பாராளுமன்ற உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்படும் ஒருவரும் தன் நிலை மறந்து செயல்படுகிறார்கள் என்பது மறுக்க முடியாத ஒன்று. மகத்தான வரவேற்பையும் மாலைகள் பொன்னாடைகளையும் எதிர்பார்த்த நிலையில் தான் இவர்கள் செயல்படுவதை நாம் அவதானிக்கிறோம்.

வீதிக்கு இறங்கினால் சொகுசு காரும், வெள்ளை உடையும் கறுப்பு கண்ணாடியும் இவர்களது அடையாளமாக இலங்கையிலே பார்க்க முடிகின்றது.

எதற்கெடுத்தாலும் ஐரோப்பிய கலாச்சாரத்தையும் நாகரிகத்தையும் பின்பற்ற விளையும் இவர்கள், அந்தந்த நாடுகளில், எளிமையுடன் தலைமைத்துவம் வழங்கி உலகிற்கு ஆளுமையை வெளிப்படுத்தியவர்கள் தொடர்பில் கண்டு கொள்வதும் இல்லை; முன்னுதாரணமாக கொள்வதுமில்லை.

அமெரிக்க முன்னாள் ஜனாதிபதி ஒபாமா, கனடாவின் தற்போதைய பிரதமர், பிரான்ஸ் ஜனாதிபதி.. இவ்வாறு பல உலகத் தலைவர்களை நாம் எளிமையின் அடையாளங்களாக பின்பற்ற முடியும்.

கொரிய நாட்டுப் பிரதிநிதி இந்த நாட்டையும் அரசியல் தலைமைத்துவத்தையும் கடுமையாக விமர்சித்து பொரிந்து தள்ளினார். அவர் கூறியது நம் நாட்டில் உள்ள சிலருக்கு பிடிக்கவில்லை. ஆனால், அவரது நிலைப்பாட்டில் தவறு இருப்பதாக தெரியவில்லை.

நேர முகாமைத்துவம் என்பது ஒவ்வொருவரது வாழ்க்கையிலும் வளர்ச்சியிலும் பின்னிப் பிணைந்து இருக்கிறது. இது நாட்டின் கட்டமைப்பிலும் சரியாக பொருந்தும்.

தொடர்ச்சி 3 ஆம் பக்கம்...

# ஒற்றுமைக்கு குந்தகம்: சுமந்திரனின் கருத்துக்கு மாவை எச்சரிக்கை

# ஒன்றுபட முன் வரும் தமிழ் கட்சிகள் அதிருப்தி

நமது நிருபர்

தமிழ் தேசிய கூட்டமைப்பில் உள்ள கட்சிகளில் தமிழரசு கட்சி ஆதிக்கம் செலுத்த முற்படுவது தொடர்பில், கூட்டணிக் கட்சிகளுக்குள் மோதல் ஏற்பட்டுள்ளன.

தமிழரசு கட்சியின் தன்னாதிக்க கொள்கை, தமிழ்த் தேசியத்தை நோக்கி ஒன்றுபட்டு செயல்படுவதற்கு முன் வருகின்ற கட்சிகளை ஓரம் தள்ளுவதனால், அரசாங்கத்தோடு தமிழ் கட்சிகள் நடத்துகின்ற பேச்சு வார்த்தைகளுக்கு குந்தகமாக அமையும் என கூட்டணி கட்சியில் உள்ள அரசியல் தலைவர் ஒருவர் தெரிவித்தார்.

தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் பேச்சாளராக இருக்கின்ற பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ சுமந்திரன் தெரிவித்த கருத்துகளால், ஒன்றுபட்டு செயல்படுவதற்கு முன் வந்திருக்கின்ற தமிழ் தேசியப் பரப்பில் உள்ள கட்சிகளிடையே அதிருப்தி நிலை ஏற்பட்டிருக்கிறது.

இந்த நிலையில், தமிழரசி கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜா, "நாவடக்கமாக பேச வேண்டும்" என்ன பாராளுமன்ற உறுப்பினர் சுமந்தி ரனுக்கு எச்சரிக்கை விடுத்திருக்கிறார்

எதிர்வரும் உள்ளூராட்சி சபைத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிலுள்ள மூன்று கட்சிகளுடன் இணைந்தே போட்டியிடுவது என்று இலங்கைத் தமிழரசுக் கட்சியின் அரசியல் குழுக் கூட்டத்தில் முடிவெடுக்கப்பட்டுள்ளது என நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்த கருத்து தவறானது என்று அந்தக் கட்சியின் தலைவர் மாவைசேனாதிராஜாதெரிவித்துள்ளார்.

**தமிழரசு கட்சியின் ஆதிக்க சிந்தனை பாதிப்பை ஏற்படுத்தும்: பங்காளி கட்சிகள்**

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தற்போதுள்ள நிலையிலேயே உள்ளூராட்சி சபைத் தேர்தலை எதிர்கொள்ளும் என்றும் வெளியில் உள்ள ஏனைய தமிழ்க் கட்சிகளுடன் இணைந்து போட்டியிடுவதில்லை என இலங்கைத் தமிழரசுக் கட்சியின் அரசியல் குழுக் கூட்டத்தில் முடிவெடுக்கப்பட்டதாக நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் கருத்து வெளியிட்டிருந்தார்.

இந்தக் கருத்துத் தொடர்பில் கட்சியின் தலைவர் மாவை.சோ.சேனாதிராஜாவிடம் கேட்டபோது,

"தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் தற்போதுள்ள கட்சிகளைத் (தமிழரசு, ரெலோ, புளொட்) வேறு கட்சிகளுடன் தேர்தல் உடன்பாட்டுக்குச் செல்வதில்லை என்று இலங்கைத் தமிழரசுக் கட்சியின் அரசியல் குழு முடிவு எதுவும் எடுக்கவில்லை.

அந்தக் கூட்டத்தில் தேர்தலில் எவ்வாறு போட்டியிடுவது, இது தொடர்பில் மற்றக் கட்சிகளுடன் எவ்வாறு பேச வேண்டும் என்பது குறித்து கருத்து பரிமாற்றங்கள் மாத்திரமே இடம்பெற்றன.

இணைய வழி ஊடாக நடைபெற்ற இந்தக் கூட்டத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் பங்கேற்றுவிட்டு இடைநடுவில் சென்று விட்டார்.

தேர்தலில் எவ்வாறு போட்டியிடுவது தொடர்பில் எதிர்வரும் 7ஆம் திகதி நடைபெறவுள்ள இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மத்திய செயற்குழுக் கூட்டத்தில்தான் முடிவு எடுப்போம்.

தேர்தலில் இலங்கைத் தமிழரசுக் கட்சியாகத் தனித்துப் போட்டியிடாது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாகவே போட்டியிடும். கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளைத் (தமிழரசு, ரெலோ, புளொட்) தவிர வெளியில் உள்ள ஏனைய மூன்று கட்சிகளையும் (சி.வி.விக்னேஸ்வரன் தலைமையிலான தமிழ் மக்கள் தேசியக் கூட்டணி, சுரேஷ் பிரேமச்சந்திரன் தலைமையிலான ஈ.பி.ஆர்.எல்.எப்., என்.ஸ்ரீகாந்தா தலைமையிலானதமிழ்த் தேசியக்கட்சி) இணைத்துக்கொண்டு தேர்தலைச் சந்திப்பதா என்பது தொடர்பில் தமிழரசுக் கட்சியின் மத்திய செயற்குழுக் கூட்டத்தில்தான் முடிவு எடுப்போம்.

தொடர்ச்சி 7 ஆம் பக்கம்...

## தேசிய பாதுகாப்புக்கு பாதிப்பு ஏற்படாமல் காணிகளை விடுவியுங்கள்



யாழ் மாவட்ட படைகளின் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் சுவர்ணா போதோட்ட, மரியாதை நிமிர்த்தம் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவை இன்று(31.12.2022) சந்தித்துக் கலந்துரையாடினார்.

ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் யாழ். தலைமை அலுவலகத்தில் இடம்பெற்ற இச்சந்திப்பில், அண்மைக்காலமாக அதிகரித்துள்ள மாட்டுத் திருட்டு, போதைப் பொருள் பாவனை, வாள் வெட்டு உட்பட்ட சமூக விரோதச் செயற்பாடுகளை கட்டுப்படுத்துவது தொடர்பாக கலந்துரையாடப்பட்டது.

மேலும், தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தலை ஏற்படுத்தாத வகையில், உயர் பாதுகாப்பு வலயத்தினுள் இருக்கின்ற காணிகளை விடுவித்தல் மற்றும் பாடசாலை மைதானம் போன்ற பொது இடங்களை புனரமைப்பதற்கு இராணுவத்தினரின் ஒத்துழைப்புக்களை பெற்றுக்கொள்வது தொடர்பாகவும் இச்சந்திப்பில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவினால் பிரஸ்தாபிக்கப்பட்டது.

## 2023 ஆம் ஆண்டிலாவது பிச்சை எடுப்பதை நிறுத்துங்கள்



2023 ஆம் ஆண்டிலாவது உலக நாடுகளிடம் கையேந்தாத நிலைக்கு இலங்கை வளர்ச்சியடைய வேண்டும் என கொழும்பு பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை தெரிவித்துள்ளார்.

அதற்காக நாட்டை முன்னோக்கி கொண்டு செல்வதற்கான புதிய கட்டமைப்பை உருவாக்க வேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டுள்ளார்.

புதிய கட்டமைப்பை உருவாக்கத் தவறினால் நாடு அழிந்துவிடும் என்றும் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை எச்சரித்துள்ளார்.

இலங்கையுடன் சுதந்திரம் பெற்ற பல நாடுகள் முன்னேறியுள்ள போதும் இலங்கை ஒரு ஏழை நாடு என்ற பிம்பத்தைப் பெற்றுள்ளது என்றும் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதற்கு காலங் காலமாக தேசத்தை ஆட்சி செய்தவர்கள் எடுக்கும் தவறான முடிவுகளே காரணம் என்றும் அவர் குற்றம் சாட்டியுள்ளார்.

ஆகவே புதிய ஆண்டில் தேசத்தின் நலனுக்காக அனைத்து பிரஜைகளும் வேறுபாடுகளை மறந்து ஒன்றிணைய வேண்டும் என கொழும்பு பேராயர் கேட்டுக்கொண்டுள்ளார்.

## வெட்கக்கேடு..!

(ஆசிரியர்த் தலைப்பு...)

பொறுப்பு வாய்ந்தவர்கள் பொறுப்புடன் உரிய நேரத்தில் எடுக்கின்ற தீர்மானங்கள் வளர்ச்சிக்கு உறுதுணையாக இருக்கும். இந்த செல்நெறியில் பிறழ்வு ஏற்பட்டதனால் தான் நாடு இன்று நடுத்தெருவில் நிற்கிறது.

தென் கொரியா இன்று இலங்கைக்கு பாடம் புகட்டுகிறது. ஒரு காலத்தில் இலங்கையை பார்த்து தன்னை வளர்த்துக் கொண்ட நாடு தென்கொரியா. சண்டை, சச்சரவு கலகங்கள், எல்லைப் பிரச்சினைகளால் நிலை குலைந்து போய் இருந்த நாடு தென்கொரியா. இன்று உலகில் வளர்ச்சி அடைந்த நாடுகளில் மிகவும் சிறப்பாகசெயல்படும்நாடுஎன்றபெருமையுடன் திகழ்கிறது.

"சரியாக நடந்து கொள்ள முடியாதவர்களுடன் பேசி பிரயோசனம் இல்லை" என்பது கொரிய பிரதிநிதியின் கருத்தாக இருக்கிறது.

தாமதமாக வருவதை நாகரீகமாகக் கொண்டுள்ளவர்கள் நமது அரசியல்வாதிகள். தாமதித்து வந்தால் மதிப்பு மரியாதையும் அதிகம் என்பது அவர்களுடைய நினைப்பு. இது ஒரு பாரிய கலாச்சாரமாகவே இலங்கையில் மாறி இருக்கிறது. ஒப்பீட்டளவில் அரை மணி நேர தாமதம் என்பது நம்மை பொறுத்தவரை பெரிய விடயம் இல்லை. என்றாலும் இந்த கலாசாரம் மாறியே ஆக வேண்டும்.

அரசாங்கமும் அரசு இயந்திரமும் வினைத் திறனுடன் செயல்பட வேண்டுமாக இருந்தால், இந்த கலாசாரத்துக்கு நாம் முற்றுப் புள்ளி வைத்தே ஆக வேண்டும்.

உண்மையைச் சொல்லப்போனால், இலங்கையில் பின்பற்றப்படுகின்ற இந்த தாமத கலாச்சாரம், உலக நாடுகளால் அருவருப்பாகவும் கேவலமாகவும் பார்க்கப்படுகிறது என்பதை புரிந்தும் புரியாமலும் இருக்கின்றோம்.

மிகக் குறுகிய காலத்தில் தன் ஆளுமையை வெளிப்படுத்தி உலகில் வளர்ச்சி அடைந்த நாடாக முன்னணியில் திகழும் தென் கொரியா, இலங்கையை இழிவாகப் பேசும் அளவுக்கு தரக்குறைவாக்கிக் கொண்டோம் என்பது தான் உண்மை. எனவே, பிறக்கின்ற இந்த புத்தாண்டிலாவது தாமதக் கலாசாரம் முடிவுக்கு வரட்டும்.

## கிழக்கின் சம்பியனானது கல்முனை கார்மேல் பற்றிமா கல்லூரி




கிழக்கு மாகாண பாடசாலைகளுக்கிடையிலான 13 வயதுக்குட்பட்டவர்களுக்கான எரிபந்து போட்டி இன்று (31) ஏறாவூரில் நடைபெற்றது. இப்போட்டியிலிருந்து கிழக்கு மாகாண அணிகள் பல பங்குபற்றியிருந்தன.

இப்போட்டியில் கல்முனை கார்மேல் பற்றிமா கல்லூரி (தேசிய பாடசாலை) சார்பில் 13 வயதுக்குட்பட்ட இரு பாலருக்குமான இரு அணிகளும் பங்குபற்றியிருந்தன.

இப்போட்டியில் 13 வயதுக்குட்பட்ட கார்மேல் பற்றிமா கல்லூரி தேசிய பாடசாலை பெண்கள் அணி கிழக்கு மாகாண சம்பினாகிய கோப்பையைக் கைப்பற்றியது.

இப்போட்டிக்காக வீரர்களுக்கு இடைவிடாது பயிற்சி அளித்து சம்பியன் பட்டத்தினை பெற அயராது பாடுபட்ட கல்லூரியின் ஆசிரியர் அருட். சகோதரர் தயா அவர்களுக்கும் விளையாட்டுப் பயிற்றுவிப்பார்களுக்கும் கல்லூரியின் முதல்வர் அருட். சகோதரர் சந்தியாகு அவர்கள் வாழ்த்துக்களையும் பாராட்டுக்களையும் தெரிவித்தார்.









# இலங்கை நாணய வீழ்ச்சி

# மீண்டெழுமா இலங்கை?



கலாநிதி எஸ். செந்தில்நாதன்
பாண்டிருப்பு, கல்முனை.

இந்த ஆண்டில் இடம்பெற்ற உலக அரசியல் பொருளாதார இயக்கங்கள் இலங்கையை பல்வேறு வகையில் புரட்டிப் போட்டு இலங்கை ரூபாவின் பெறுமதியில் கணிசமான அளவிற்கு வீழ்ச்சியை ஏற்படுத்தி பெரும் பொருளாதார நெருக்கடிகளை ஏற்படுத்தி இருக்கிறது. இதை நாம் இன்றும் கண்கூடாகக் காண்கிறோம். இந்த நிலையிலிருந்து இலங்கை மீழ்வதற்கு ஏதுவானதாக இலங்கையில் முதலீட்டினை ஊக்குவித்தல் வேண்டும் என்ற குரல்கள் ஓங்கி ஒலித்தபடி இருக்க, இலங்கையை ஆளும் அரசியல்வாதிகள் இது தொடர்பான பொருத்தமானதும் தகுதியானதுமான சிந்தனைகளையோ மற்றும் நடவடிக்கைகளையோ மேற்கொள்கிறார்கள் என்பதில் ஒரு தெளிவற்ற தன்மை காணப்படுகிறது என்பது தெளிவாகப் புலப்படுகிறது. இதனை வீழ்ச்சியடைந்த இலங்கை ரூபாவினால் ஏற்பட்ட இலங்கை சொத்துக்களின் சர்வதேச பெறுமதி வீழ்ச்சி உணர்த்தி நிற்கிறது.

சர்வதேச முதலீட்டினை மேம்படுத்துவதற்கு தேவையான ஒரு கணியம் உள்நாட்டுச் சொத்துக்களின் சர்வதேச பெறுமதி தளம்பாமல் அதிகரித்து செல்ல வேண்டிய நிலையில் இருப்பதுவாகும். இந்த வகையில், கடந்த காலங்களில் அரசாங்கம் அமைத்தோர் எந்த அளவிற்கு தமது பொருளாதார நடவடிக்கைகள் மூலம் இலங்கை சொத்துக்களின் சர்வதேச பெறுமதியினை உயர்த்தி உள்ளார்கள் என்பதை இலங்கை நாணயத்தில் ஏற்பட்ட வீழ்ச்சிகளின் மூலம் அறிந்து கொள்ளலாம்.

சுமார் 50 வருடங்களுக்கும் மேலாக இருந்த இலங்கை ரூபாவின் பெறுமதி அமெரிக்க டொலருடன் ஒப்பிடுகையில் தொடர்ச்சியாக சுமார் 75 மடங்கு வீழ்ச்சியடைந்த நிலையில் இருப்பதனைப் புள்ளி விபரங்கள் தெளிவாக்கி பிரதிபலிக்கின்றன. இந்த நிலைமை இலங்கை அரசினைக் கையாண்ட அரசாங்கங்கள் இலங்கைச் சொத்துக்களின் குறிப்பாக அசையாச் சொத்துக்களின் சர்வதேச பெறுமதியை உயர்த்துவதில் நாட்டம் காட்டாமல் எதேச்சையான ஒரு போக்கில் பொருளாதாரத்தை நடாத்திச் சென்ற விதம் இன்று இலங்கை அனுபவிற்கும் பொருளாதார நெருக்கடிக்கு வித்திட்டிருக்கலாம் எனக் கொள்ளத் தோன்றுகிறது.

குறிப்பிட்டுச் சொல்வதாயின், 1965இல் ஆறாவது பாராளுமன்றத்தை ஐக்கிய தேசிய கட்சி அமைத்த போது, 1 டாலருக்கான ரூபாவின் பெறுமதி சுமாராக ரூ. 4.762 (ரூ. 5 இலும் குறைவு) ஆக இருந்தது. அதாவது சர்வதேச அளவில் வெளிநாட்டு முதலீட்டாளர் ஒருவர் சுமார் ரூ.100,000 பெறுமதியுடைய இலங்கைச் சொத்தினை US$ 21,000 செலவு செய்து தான் கொள்வனவு செய்திருக்க முடியும் என்பதாகும். இதனைத் தொடர்ந்து ஏற்பட்ட அரசியல் பொருளாதார நிலைமைகள் இன்றைய 1 டாலருக்கான ரூபாவின் பெறுமதியை சுமாராக ரூ. 364 ஆக மாற்றியுள்ளன (மூலம்: www.oanda.com - 28-11-2022).

அதாவது, வெளிநாட்டு முதலீட்டாளர் ஒருவர் சுமார் ரூ.100,000 பெறுமதியுடைய இலங்கைச் சொத்தினை சுமார் US$ 275 செலவு செய்தே தற்போது கொள்வனவு செய்ய முடியும் என்பதாகும். இங்கு அவதனிக்கத்தக்க விடயம் என்னவெனில், 1965 இல் சுமார் UD$ 21,000 ஆகவிருந்த இலங்கைச் சொத்தின் சர்வதேசப் பெறுமதி, தற்போது சுமார் US$ 275 ஆக வீழ்ச்சியடைந்து காணப்படுகிறது. இது இலங்கை ரூபாவின் பெறுமதி வீழ்ச்சியை மட்டுமன்றி சர்வதேச ரீதியிலமைந்த இலங்கைச் சொத்துக்களின் பெறுமதி வீழ்ச்சியினையும் பறைசாற்றி நிற்கின்றன.

இந்த மேலுள்ள நிலைமையினைக் கருத்தில் கொள்கையில், காலங்காலமாக ஆட்சியமைத்த அரசாங்கங்கள் இலங்கை அரசினை சரியான பொருளாதார நடவடிக்கைகள் மூலம் வழிநடத்தவில்லை என்பதே யதார்த்தமான ஆதாரங்களாகும். இதில் கவலை கொள்ளத்தக்க விடயம் என்னவெனில், இத்தகைய சர்வதேச அளவீட்டு முறைகளைப் பயன்படுத்துவதன் மூலம் அரசாங்கங்களை மக்கள் தெரிவு செய்வதுவே சிறந்தது என்ற கல்விமுறையினை இலங்கை மக்களுக்கு கொண்டிருக்காததும், இலங்கையை ஆட்சி செய்த அரசாங்கங்கள் நாட்டின் அரசியல் பொருளாதார செயற்பாடுகளினூடே மக்களை அந்த வகையில் சிந்திக்க அனுமதிக்காததும் கவனத்தில் கொள்ளத்தக்கதுவாகும்.

இன்று இலங்கையின் பொருளாதாரத்தைச் சீரமைத்துக் கொள்ள வெளிநாட்டு முதலீடுகளை உள்வாங்க வேண்டிய தேவை இலங்கைக்கு இன்றியமையாததாகிறது. இதன் பொருட்டு பல்வேறுபட்ட கருத்துக்கள் நிலவினாலும் கூட வெளிநாட்டு முதலீடுகளை உள்வாங்குவதிலுள்ள சாத்தியப்பாடுகள் பற்றி பல்வேறுபட்ட கருத்துக்கள் நிலவுகின்றன.

## வெளிநாட்டிலுள்ள இருப்புகளை நாட்டுக்குள் கொண்டுவர நாணய பெறுமதி வீழ்ச்சி சாதகம்

அவ்வகையில், தொடரும் இலங்கை ரூபாவின் சர்வதேச பெறுமதி, வீழ்ச்சியடையும் நிலையில் உள்ளதாக, இக்கட்டுரையும் வெளிநாட்டு முதலீடுகளை உள்நாட்டில் ஊக்குவிப்பது என்பது எந்த அளவிற்கு சாத்தியமானது என்பது பற்றி மூன்று முக்கிய தலைப்புகளில் விவாதிக்கின்றது.

**1. வெளிநாட்டு முதலீட்டாளர்கள் தாம் உள்பாச்சிய முதலீட்டினை அதே பெறுமதியில் மீள பெறுவதில் உள்ள இடர்.**

தொடர்ச்சியாக வீழ்ச்சியடையும் ஒரு இஸ்திரமற்ற இலங்கை நாட்டின் நாணயத்தை நம்பி எந்த ஒரு வெளிநாட்டு முதலீட்டாளரும் இலங்கையில் முதலிட முன்வரமாட்டார்கள். இது ஒரு யதார்த்தமான உண்மையாகும்.

## நாளைய கொள்கையில் இன்னும் தெளிவற்ற நிலையில் இலங்கை

குறிப்பிட்டுச் சொல்வதாயின், சர்வதேச ரீதியில் பெறுமதி வீழ்ச்சியடையும் சொத்துக்களை நம்பி எந்த ஒரு வெளிநாட்டு முதலீட்டாளரும் இலங்கையில் முதலிடுவற்கு முன்வரமாட்டார்.

இதனைப்பின்வறுமாறும்விளக்கலாம். ஒரு முதலீட்டாளர், 1965 இல் US$ 21000 செலவு செய்து வாங்கிய இலங்கை ரூ. 100000 பெறுமதியான சொத்தினை தற்போது மீளப்பெறுவதாயின் அம்முதலீட்டாளருக்குக் கிடைப்பது சுமார் US$ 275 மட்டுமே. இது 57 வருடங்களில் ஏற்பட்ட சுமார் 76 மடக்கிலான 75.37% இலங்கை ரூபாவின் வீழ்ச்சியாகும்.

இலங்கையை வெளிநாட்டு முதலீட்டினை மேம்படுத்தும் மற்றும் ஆதரிக்கும் முதன்மை நாடுகளில் ஜப்பானும் ஒன்று.

ஜப்பானிலிலுள்ள நொமுரா (Nomura) என்ற நிதிசார் முதலீட்டுக் கம்பெனி, இலங்கை நாணயத்தின் சர்வதேச இடர் நிலையினை 168 புள்ளிகளாய் கணிப்பீடு செய்துள்ளது (Reuters & London, 2022/11/22). இது சர்வதேச ரீதியில் குறிப்பிடப்பட்ட இலங்கை ரூபாவிற்கான மற்றும் இலங்கைமேல் மேற்கொள்ளவிருக்கும் சர்வதேச முதலீட்டாளர்களுக்கான இடர்சார் முதலீட்டு எச்சரிக்கையாகும்.

இலங்கை ரூபாவின் வரலாற்று ரீதியிலான பெறுமதியை மதிப்பிடும் எந்தவொரு முதலீட்டாளரும் இலங்கையில் முதலீடு செய்வதற்கு முன்வரமாட்டார். இத்தகைய தாம் இட்ட முதலினை இழக்கும் நிலையில் அதற்கான இடரினை முகம் கொடுக்கும் எந்த ஒரு முதலீட்டாளனும் ஒரு பகுத்தறிவாளனாக இலங்கையில் முதலிடுவதற்கு முன்வரமாட்டார் என்பதே யதார்த்தமான தெரிகிறது. இதுவே உண்மையுமாகும்.

**2. நாட்டில் உள்ள சட்ட திட்டங்களும் அவை தொடர்பான வரைபுகளும் வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்கு போதிய பாதுகாப்பினைக் கொண்டிருக்காமை.**

இலங்கையில் உள்ள சட்ட வரைபுகள் சர்வதேசநியமங்களுக்கு ஏற்றவாறு இடம்பெறாமை, சர்வதேச முதலீட்டாளர்களைக் கவர்வதில் முரண்பட்டு நிற்கிறது. சர்வதேச முதலீட்டாளர்களை கவர்வதில் இத்தகைய சட்ட முரண்பாடுகள் களையப்பட்டு மக்களின் ஜனநாயக எண்ணங்களும் அபிலாசைகளும் பூர்த்தி செய்யப்படும் வகையிலானசட்ட வரைபுகள் இடம்பெறுதல் வேண்டும். உதாரணமாக, சாதாரண மக்கள் அரசாங்கம் தவறான பாதையில் செல்வதனை எடுத்துக்காட்டி அஹிம்சை முறையில் போராடுவதை பயங்கரவாதம் என சுட்டிக் காட்ட முயல்வது சர்வதேச முதலீட்டாளர்களை சிந்திக்க வைக்கும்.

தமக்குத் தேவையானதை மக்கள் (குறிப்பாக உள்நாட்டு முதலீட்டாளர்கள் உள்ளடங்கலாக) அரசாங்கத்திடம் பெற்றுக் கொள்ள ஆயுதமற்ற அஹிம்சை போராட்டத்தினை சமூக ரீதியாக மேற்கொள்ளும்போது அதனை மதிக்காது பயங்கரவாதம் என ஒரு அரசாங்கம் பெயர் கொடுக்க முனைவது, ஒரு பிற நாட்டு முதலீட்டாளரின் சாதாரண தேவைகளைப் பெற்றுக்கொள்ள எடுக்கப்படும் முயற்சிகள் கூட பயங்கரவாதம் என அரசாங்கம் பெயர் கொடுக்க முன்வரலாம் என்ற ஐயப்பாடு ஏற்படுத்தப்படுகிறது. இது நேர்மையான சர்வதேச முதலீட்டாளர்களை இலங்கைக்குக் கொண்டு வருவதில் பெரும் பின்னடைவை ஏற்படுத்திவிடும். இத்தகைய தன்மைகள் முதலீட்டாளர்களின் முதலீட்டிற்கான பாதுகாப்பின்மையையும் அது சார்ந்த முதலீட்டு இடரினை அதிகரிப்பதாகவும் ஏற்படுத்திவிடுகிறது. இது தொடர்பில் உள்நாட்டு முதலீட்டாளர்களுக்கே பாதுகாப்பற்ற நிலையில், பிற நாட்டு முதலீட்டாளர்களைக் கவர்வதில் போதிய பாதுகாப்பினைக் கொண்டிருக்காமை இங்கு கவனத்தில் கொள்ளத்தக்கதுவாகும்.

தொடர்ச்சி 8 ஆம் பக்கம்...

# எதிர்பார்ப்புகளுடன் உதயமாகும் 2023

முயலகன்



அடுத்தது அத்தியாவசிய பொருட்களின் அதிகரித்த விலை, செலவினங்களோடு ஒப்பிடுகையில் சற்றும் கிட்டத்தில் கூட வைத்துப் பார்க்க

2023 உலகில் உள்ள அனைத்து மக்களுக்கும் மகிழ்ச்சியளிக்கும் ஆண்டாக பிறக்கட்டும் என்பதே அனைத்து உள்ளங்களினதும் பிரார்த்தனையாகும்.

மிகவும் கஷ்டமான, நெருக்கடியான ஒரு ஆண்டைக் கடந்து வந்துள்ளோம். புதிய ஆண்டில் கால் பதிக்கும் நம் ஒவ்வொருவருக்கும் இந்த ஆண்டு அனைத்து எதிர்பார்ப்புகளையும் நிறைவேற்றும் ஆண்டாகட்டும் என்ற வாழ்த்துதலோடு புதிய ஆண்டினை வரவேற்போம்.

உலகெங்கிலும் மிக மோசமான அரசியல், சமூக, பொருளாதார நெருக்கடிகள், யுத்தங்கள், மோதல்கள், கொரோனா பெரும் தொற்றின் பாதிப்புகள் என கடந்த வருடத்தில் பெரும் கஷ்டங்களை எதிர் நோக்க நேர்ந்தது.

குறிப்பாக கடந்த இரண்டு ஆண்டுகளிலும் முழு உலகத்தையும் கொரோனா வைரஸ் தொற்று ஒரு உலுக்கு உலுக்கி விட்டது என்றே சொல்லலாம். அதன் பாதிப்பினால் பல்வேறு நாடுகள் பொருளாதாரத்தில் பின் தள்ளப்பட்டு பல இலட்சம் உயிர்கள் காவு கொள்ளப்பட்டன.

விஞ்ஞானம் இந்தளவு வளர்ச்சி பெற்று சுகாதாரத்துறை எத்தனையோ புதிய கண்டுபிடிப்புகளை வசமாக்கிக் கொண்டுள்ள நிலையிலும் பல இலட்சம் உயிர்களை காப்பாற்ற முடியாமல் போனமை பெரும் துயரமும் துரதிஷ்டவசமும் என்றே சொல்லலாம்.

எவ்வாறெனினும் இத்தகைய பெரும் பாதிப்புகளிலிருந்து விடுபட்டு ஓரளவு நிலைமைகள் நிவர்த்தி செய்யப்பட்டு வரும் சூழ்நிலையில் இன்று உலகம் புதிய ஆண்டில் அடியெடுத்து வைக்கின்றது.

குறிப்பாக எமது நாட்டில் இந்த வருடத்தில் மேற்கொள்ளப்பட வேண்டிய அனேக செயற்பாடுகளை குறிப்பிட முடியும்.

முதலில் வீழ்ச்சியடைந்துள்ள பொருளாதாரத்தை மீளக் கட்டியெழுப்புவது.

முடியாத சம்பளம் அல்லது வருமானம், இந்த நிலையினால் பாதிக்கப்பட்டுள்ள மக்களை வாழ்க்கைச் சுமையிலிருந்து மீட்டு இயல்பு வாழ்க்கையை மீண்டும் தோற்றுவிக்க வேண்டி தலையாய கடமை, நாட்டில் நீண்ட காலம் புரையோடிப் போயுள்ள இனப் பிரச்சனைக்கான தீர்வு, அரசியல் கைதிகளின் விடுதலை, காணாமற் போனோர் பிரச்சனைகள் தொடர்பான தீர்வு, ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ள மிக முக்கியமான அபிவிருத்தி திட்டங்களை நிறைவு செய்தல் என அடுக்கிக் கொண்டே போகலாம்.

ஆட்சிக் கலைப்பு அதனுடன் சம்பந்தப்பட்ட வன்முறை சூழ்நிலைகள், ஸ்திரமற்ற அரசியல் நிலை, அதனைத் தொடர்ந்து ஏற்பட்ட மாற்றங்கள், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் அமைக்கப்பட்டுள்ள புதிய அரசாங்கம் என கடந்த வருடத்தில் அரசியலில் ஏற்பட்டுள்ள மாற்றங்களோடு தான் இந்த புதிய ஆண்டும் பிறந்துள்ளது.

என்றாலும் நிலைமைகளை சரிக் கட்டுவதற்கு பல்வேறு சவால்களுக்கு மத்தியிலும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க முன்னெடுத்து வரும் நடவடிக்கைகள் அர்த்தபுஷ்டியானவை என்பதை நாம் மறுப்பதற்கு இல்லை.

நாட்டில் நிலவிய அத்தியாவசிய பொருட்களின் தட்டுப்பாடு நீக்கப்பட்டு வரிசை யுகத்திற்கு முற்றுப்புள்ளி வைத்து விலை அதிகரிப்பை தடுக்க முடியாவிட்டாலும் அத்தியாவசியப் பொருட்களை தேவையான போது பெற்றுக்கொள்ளக் கூடிய வாய்ப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளமை ஓரளவு திருப்தி அளிக்கிறது.

அதேவேளை, புதிய அரசியலமைப்பு திருத்தம், நாட்டில் நீண்ட காலம் தீர்க்கப்படாமல் புரையோடிப் போயுள்ள இனப்பிரச்சனைக்கு தீர்வு காண்பதில் அவர் முன்னெடுத்துள்ள ஆரம்பம் இவை குறிப்பிடத்தக்கவை.

பேச்சு வார்த்தைகள் ஆரம்பிக்கப்பட்டு இனப்பிரச்சினைக்கு தீர்வு காணப்பட்டாலே நாட்டில் அரைவாசிக்கும் மேற்பட்ட பிரச்சினைகளுக்கு தீர்வு பெற்றுக் கொள்ள முடியும். நாட்டின் பொருளாதார மேம்பாட்டிற்கும் அதில் முக்கிய பங்கு உண்டு.

பிறக்கும் இப்புத்தாண்டு இந்த அனைத்து எதிர்பார்ப்புகளையும் நிறைவேற்றும் என்று நம்பிக்கையுடன் அதற்கு அரசியல் ரீதியில் மட்டுமன்றி ஒவ்வொருவரும் எத்தகைய பங்களிப்பை செய்ய முடியும் என்பதையும் அனைவரும் உணர்ந்தால் இந்த ஆண்டு எமது நாட்டுக்கு மிகவும் பிரகாசமான ஆண்டாக அமையும்என்பதில் எந்த ஐயமும் கிடையாது.

அனைவருக்கும் இனிய புத்தாண்டு வாழ்த்துக்கள்.

# உண்மை நிலையை வெளியிடுங்கள்: சீனாவுக்கு WHO எச்சரிக்கை

ஜெனிவா:




சீனாவில் நிலவும் கரோனா பாதிப்பு குறித்த தகவல்களை வெளியிடுமாறு உலக சுகாதார நிறுவனம் அந்நாட்டை மீண்டும் வலியுறுத்தியுள்ளது.

சீனாவில் நிலவும் கரோனா பாதிப்பு தொடர்பானஉயர்மட்டஆய்வுக்கூட்டம் ஸ்விட்சர்லாந்தின் ஜெனிவாவில் உள்ள உலக சுகாதார அமைப்பின் தலைமையகத்தில் நடைபெற்றது. உலக சுகாதார அமைப்பின் தலைவர் டெட்ரோஸ் அதானம், சீனாவின் தேசிய சுகாதார ஆணையம், தேசிய தொற்று கட்டுப்பாட்டு அமைப்பு ஆகியவற்றின் பிரதிநிதிகள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். இந்த கூட்டத்தில், சீனாவில் கரோனா தொற்றை கட்டுப்படுத்த மேற்கொள்ளப்பட்டு வரும் நடவடிக்கைகள், கரோனா தொற்று பாதித்த பகுதிகள், கண்காணிப்புப் பணிகள், தடுப்பூசி, மருத்துவ சிகிச்சைகள், தொடர்பு வசதிகள் ஆகியவை குறித்து, சீன நிபுணர்கள், உலக சுகாதார அமைப்பிடம் விவரித்தனர்.

இவற்றைக் கேட்டுக்கொண்ட உலக சுகாதார அமைப்பு, கரோனா தொற்றில் மரபணுக்களின் பங்கு குறித்த தகவல்கள், தொற்றால் பாதிக்கப்பட்டுள்ளவர்களின் எண்ணிக்கை, தீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளவர்களின் எண்ணிக்கை, உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை, தடுப்பூசி எத்தனை பேருக்கு போடப்பட்டுள்ளது, குறிப்பாக 60 வயதுக்கு மேற்பட்டவர்களில் எவ்வளவு பேர் தடுப்பூசி போட்டுக்கொண்டுள்ளனர் ஆகிய விவரங்களை அளிக்குமாறு சீன நிபுணர்களை வலியுறுத்தியது. எனினும், இந்த விவரங்களை அவர்கள் வழங்கவில்லை.

கோவிட் 19 விஷயத்தில் சீன நிபுணர்கள் மற்ற நிபுணர்களுடன் இன்னும் நெருங்கி வர வேண்டும் என்று வலியுறுத்தியுள்ள உலக சுகாதார அமைப்பு, வரும் ஜனவரி 3ம் தேதி நடைபெற உள்ள தொற்று நோய்களுக்கான தொழில்நுட்ப ஆலோசனைக் குழு கூட்டத்தில், இந்த விவரங்களை சமர்ப்பிக்குமாறு கேட்டுக்கொண்டுள்ளது. இத்தகைய தகவல்கள் சீனாவுக்கும் உலகிற்கும் மிகவும் முக்கியம் என்றும் உலக சுகாதார அமைப்பு தெரிவித்துள்ளது.

# பி.எப்.-7: அச்சுறுத்தும் கொரோனா சீனாவில் தீவிரம்:

## உலக நாடுகள் எச்சரிக்கை

உருமாறிய புதிய வகை கொரோனாவான பி.எப்.-7 சீனாவில் மிக வேகமாக பரவி வருவதால் உலக நாடுகள் அச்சமடைந்துள்ளன. இதையடுத்து இந்தியா, இத்தாலி, தென்கொரியா, மலேசியா, அமெரிக்கா உள்ளிட்ட நாடுகளில் சீனாவில் இருந்து வரும் விமான பயணிகளுக்கு கட்டாய கொரோனா பரிசோதனை நடத்த உத்தரவிடப்பட்டு உள்ளது. இதன் தொடர்ச்சியாக பிரான்ஸ் மற்றும் ஸ்பெயின் நாடுகளும் சீன பயணிகளுக்கு கட்டாய கொரோனா பரிசோதனையை நடத்த உத்தரவிட்டுள்ளன. சீனாவிற்கு செல்வதை தவிர்க்குமாறு பிரெஞ்சு மக்களை பிரான்ஸ் அரசு வலியுறுத்தி உள்ளது. சீனாவிலிருந்து பிரான்ஸ் செல்லும் விமானங்களில் பயணிப்போர் முக கவசம் அணிவது மீண்டும் கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

புதிய கொரோனா வைரஸ் மாறுபாடுகளை அடையாளம் காண சீன பயணிகளுக்கு விமான நிலையங்களில் பிசிஆர் சோதனை நடத்தப்படுவதாக பிரான்ஸ் சுகாதார அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.



# மொட்டு – யானை கூட்டு: அதிகார இலக்கை அடைவது சாத்தியம் இல்லை

## முன்னாள் எம்பி ஶ்ரீநேசன்

யானையும் மொட்டும் பரஸ்பரம் தத்தமக்குரிய முட்டுகளாக மாறியுள்ளன என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஞானமுத்து ஸ்ரீநேசன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

“கீரியும் பாம்புமாக கடந்த ஆட்சிக் காலத்தில் காணப்பட்ட மொட்டுக் கட்சியும் யானைக் கட்சியும் பாலும் சுவையுமாக பரஸ்பர ஆட்சி அதிகார தேவைக்காக மாறியுள்ளன.

தாங்கள் ஆட்சிக்கு வந்தால் மத்திய வங்கியைக் கொள்ளையடித்த ரணில் விக்கிரமசிங்கவை சிறைக்குள் தள்ளுவோம் என்று அன்றைய எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் மகிந்தானந்த சூளுரைத்தார். அவரைப் பின்பற்றி வியாழேந்திரனும் ரணில் மீது பல குற்றச்சாட்டு களைக் கூறி மொட்டுக்குப் பலம் சேர்க்க நினைத்தார்.

தற்போது என்ன நடந்திருக்கின்றது.எல்லாம் தலைகீழாக மாறியுள்ளது. இரண்டாண்டுகளுக்குள் கோட்டாவின் இனவாத மணல் கோட்டை சரிந்துள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சியின் ஒரே ஒரு தேசியப் பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினராக நியமனம் பெற்ற ரணில் விக்கிரமசிங்கவை மொட்டுக் கட்சியினர் தம்பக்கமாக ஈர்த்துக்கொண்டதோடு மட்டுமல்லாமல், அவரைப் பிரதமர் ஆக்கியதோடு நின்று விடாமல், பகீரதப் பிரயத்தனம் செய்து நாடாளுமன்றத்தின் மூலமாக ஜனாதிபதியுமாக்கியுள்ளனர்.

ரணிலைச் சிறையில் அடைத்துத் தண்டிக்க நினைத்த மொட்டுக் கட்சியினர் தற்போது நாட்டின் அதியுயர் கௌரவமான பதவியை வழங்கித் தம்மைப் பாதுகாத்துள் ளனர். அதாவது ரணிலுக்கு அவமானமளிக்கத் திட்ட மிட்ட மொட்டுக் கட்சியினர் தற்போது வெகுமானம் அளித்துள்ளர்.

ஒருவகையில் பார்த்தால் மொட்டுக் கட்சியில் 144 நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் ஜனாதிபதியாக கோட்டாபய ராஜபக்ச ஆகியோர் காணப்பட்டனர். அவர்களில் எவரிலும் நம்பிக்கையற்ற நிலையில், தம்மைப் பொருளாதாரக் குற்றத்தில் இருந்தும் மக்களின் வெறுப்பில் இருந்தும் மீட்கக்கூடிய ஒரே தலைவராக ரணில் விக்கிரமசிங்கவை ராஜபக்ஷக்கள் உறுதியாக நினைத்துள்ளனர் அல்லது நினைக்க வேண்டிய நிர்ப்பந்தத்துக்குள் தள்ளப்பட்டுள்ளார்கள்.

அதேவேளை, தற்போதைய நிலையில் மொட்டுக் கட்சியினரும் ஐக்கிய தேசியக் கட்சியினரும் பரஸ்பர புரிதலின் அடிப்படையில் தேர்தலுக்கான கூட்டணியை அமைக்கவும் முற்பட்டுள்ளனர். அந்தவகையில் போர்க்குற்றம், பொருளாதாரக் குற்றம் என்ற இரு குற்றங்களை இழைத்த மொட்டுக் கட்சியினரை யானைக் கட்சியின் தலைவரான ரணில் பிணையெடுக்க முற்பட் டுள்ளார்.

மேலும் மக்கள் மத்தியில் செல்வாக்கு இழந்த நிலையிலுள்ள யானைக் கட்சியை மீட்க மொட்டுக் கட்சியினர் தயாராகியுள்ளனர். அதாவது ஐக்கிய மக்கள் சக்தியை உடைப்பதற்கு ஜனாதிபதி ரணில் நினைக்கின்றார். பொருளாதார நெருக்கடியில் இருந்தும் சர்வதேச நெருக்குவாரத்தில் இருந்தும் தப்பித்துக் கொள்ள ராஜபக்சக்கள் வழி தேடுகின்றார்கள்.

மொட்டுக் கட்சியோடு இணைந்து போட்டியிடுவது தற்கொலைக்கு ஒப்பானது என்று அக்கட்சியின் முன்னாள் தோழமைக் கட்சிகள் கருதுகின்றன.இந்தநிலையில் மொட்டுக்கு முட்டாக யானையும், யானைக்கு முட்டாக மொட்டும்தான் எஞ்சியுள்ளன.

### மொட்டும் யானையும் முட்டுக்கொடுத்து தப்பி பிழைப்பதற்கு முயல்கிறார்கள்

மொட்டுக் கட்சியினருக்கு அரசியல் முதலீடு சிங்கள பௌத்த அடிப்படை வாதம் மட்டுமேயுள்ளது. கடந்த தேர்தலில் அதனை உச்சமாகப் பயன்படுத்தி அமோக வெற்றியீட்டினாலும் இரண்டாண்டுகள் கூட அந்த வெற்றியைத் தக்கவைத்துக்கொள்ள முடியவில்லை.

மேலும் சஹ்ரான் தரப்பினரின் தற்கொலைக் குண்டு வெடிப்புக்கான காரணத்தைப் பேராயர் மல்கம் ரஞ்சி த் தெளிவாக விளக்கியுள்ளார். அதாவது ராஜபக்ஷக்கள் ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்துவதற்காக மேற்கொண்ட சூழ்ச்சித் திட்டம் என்பதைப் பேராயர் உள்நாட்டு மக்களுக்கும், சர்வதேசத்துக்கும் உரத்த தொனியில் கூறியுள்ளார்.

சஹ்ரான் குழுவின் குண்டுவெடிப்பு நடந்த காலத்தில் குண்டு வெடிப்புக்குக் காரணம் பாதுகாப்புப் பலவீனம் என்ற மொட்டுக் கட்சியினரின் கருத்துக்களைப் பேராயர் மல்கம் ரஞ்சித் பூரணமாக நம்பி கோட்டாபய ராஜபக்ச வுக்குச் சாதகமான நிலைப்பாட்டில் இருந்தார்.

தற்போது ஆட்சி மாற்றத்துக்கான சூழ்ச்சித் திட்டமே குண்டு வெடிப்பு என்பதைப் பேராயர் புரிந்துவிட்டார். அப்படியான நிலைமையில் இலங்கைக் கிறிஸ்தவர்கள் இந்த அரசின் மீது வெறுப்படைந்துள்ளனர்.

அதேவேளை, தமிழ், முஸ்லிம் மக்களும் மொட்டுக் கட்சியினரின் இனமத வாதத்தால் வெறுப்படைந்து விட்டனர். பொருளாதார நெருக்கடியால் ஒட்டுமொத்த சிங்கள, தமிழ், முஸ்லிம் மக்கள் மொட்டுக் கட்சியை மட்டுமல்லாமல் அவர்களைப் பாதுகாக்க வந்த ரணில் மீதும் அதிருப்தி அடைந்துள்ளனர்.

### போர் குற்றம், பொருளாதார குற்றம் புரிந்தோரை பிணையெடுக்க ரணில் முயற்சி

இந்தநிலையில்தான் மொட்டும் யானையும் பரஸ்பரம் முட்டுக்கொடுத்து அரசியலில் தப்பிப் பிழைக்க நினைக்கின்றன.

நாட்டின் பொருளாதாரம் என்பது கடன்களில்தான் தங்கியுள்ளது. எனவே, ஜனாதிபதி ரணில் சர்வதேச நாணய நிதியம், உலக வங்கி மற்றும் உலக நாடுகளில் இருந்து கடன்கள் பட்டாவது நாட்டின் பொருளாதார நெருக்கடியைத் தீர்ப்பார் என்று மொட்டுக் கட் சியினர் கருதுகின்றனர்.

அதேவேளை, ஐக்கிய தேசியக் கட்சியினருக்கு கூட்டணி அமைப்பதற்கு எவரும் இல்லாத நிலை ஏற்பட்டுள்ளது. எனவேதான் மொட்டுக் கட்சியினராகிய ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவினருக்கும் யானைச் சி ன்னக்காரர்களான ஐக்கிய தேசியக் கட்சியினருக்கும் தேர்தல் கூட்டணிக்கான இணக்கப்பாடு தெரிகின்றது. ஆனால், ஐக்கிய மக்கள் சக்தியுடன் ஐக்கிய தேசியக் கட்சியும் இணையக்கூடிய வாய்ப்புகள் ஏற்பட்டால், மொட்டுக்கட்சியுடனான ஒட்டுறவை ஜனாதிபதி ரணில் வெட்டிக்கொள்ளவும் நினைக்க வாய்ப்பு உள்ளது.

ஜனாபதி ரணில் தனிப்பட்ட முறையில் மொட்டின் உத வியுடன் பல சவாலான கட்டங்களைத் தாண்டியுள்ளார். ஆனால், மொட்டோடு தேர்தல் கூட்டணியை ஐக்கிய தேசியக் கட்சி அமைத்தால் மொட்டுக் கட்சியின் அடிப்படைவாதம், ஊழல் மோசடிகள், போர்க்குற்றம் பொருளாதாரக் குற்றம் அனைத்தையும் ஐக்கிய தேசியக் கட்சியும் சுமந்துதான் ஆகவேண்டும்.

2020 இல் சறுக்கிய யானையும், 2021 இல் சறுக்கிய மொட்டும் பரஸ்பரம் தத்தமக்குரிய முட்டுகளாக மாறியுள்ளன. முட்டுகளால் ஆறுதல் பரிசுகள் கிடைத்து ள்ளன. ஆனால், எதிர்காலத்தில் அதிகார இலக்கை அடைவதற்குச் சாத்தியமில்லை” என கூறியுள்ளார்.

# தீர்வுகளைப் பெற்றுக் கொடுக்கும் ஆண்டாக புதிய ஆண்டு மலரட்டும்

## அமைச்சர் டக்ளஸ்

நமது நிருபர்

தமிழ் மக்கள் சுமந்து நிற்கும் தீராப் பிரச்சனைகளுக்கு தீர்வுகளைப் பெற்றுக் கொடுக்கும் தீர்க்கமான ஆண்டாக புதிய ஆண்டு மலரட்டும் என்று கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா விடுத்துள்ள புதுவருடச் செய்தியில் தெரிவித்துள்ளார். அவர் மேலும் அந்தச் செய்தியில் தெரித்திருப்பதாவது,

"மக்களை தோற்கடித்து அதில் சுயலாப அரசியல் செய்வோர் இன்னும் மாறவே இல்லை. ஒற்றுமை என்கிறார்கள் அக்கணமே உள் முரண்பாடுகள் என்கிறார்கள், மக்களை மறந்து மறுகணமே மத்தியஸ்தம் என்றும் மாற்றுத் திட்டம் என்றும் புலம்பித் தள்ளுகிறார்கள். அவர்களை இனியும் நம்பினால் தமிழ் மக்களுக்கு நன்மை ஏதும் நடந்தேறாது என்பது மீண்டும் வெளிப்படுத் தப்பட்டுள்ளது.

தமக்கான அரசியல் இலாபம் தவிர தமிழ் மக்களுக்கு தொடர் தோல்விகளை மட்டுமே பரிசளிக்கும் அவ்வழியை மறந்து, பிறக்கும் புத்தாண்டிலாவது நடைமுறைச் சாத்தியம் எனும் நல் வழி நடந்திட தமிழ் மக்கள் உறுதி ஏற்றிட வேண்டும். பொருளாதார நெருக்கடிகளுக்கும், வேரோடிவிட்ட அரசியல் பிரச்சினைக்கும் நிலையான தீர்வொன்றை கண்டுவிட வேண்டுமென்ற தீர்மானம் ஏற்றிருக்கும் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் விருப்பமும் முயற்சிகளும் நாட்டிற்கு விடிவொன்றை கண்டு தரும் என்று நம்புவோம்.

பல தசாப்த கால பிச்சினையான தமிழ் மக்களின் அரசியல் பிரச்சினைக்கு தீர்வொன்றை தருவதென்பது இலகுவான காரியமல்ல. அதற்கு ஜனாதிபதி தென் இலங்கையில் பல தடைகளை கடக்கும் பலம்பெற வேண்டும்.அதற்கு தமிழ் மக்களும் தமது நேசக்கரம் நீட்டி புதிய நம்பிக்கையை வெளிப் படுத்த வேண்டும்.

இத்தகைய தீர்க்கமான காலச்சூழலில் ஆரம்பமாகும் புதிய வருடமானது தீர்வுகளைத் தரும் ஆண்டாக அமைய வேண்டும் என்பதே எமது எதிர்பார்ப்பும் விருப்பமுமாகும்" என்று அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தனது வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

ஒற்றுமைக்கு குந்தகம்;... 3 ஆம் பக்க தொடர்ச்சி...

இந்த விவகாரம் தொடர்பில் செல்வம் அடைக்கலநாதன் (ரெலோ), தர்மலிங்கம் சித்தார்த்தன் (புளொட்) ஆகியோர் என்னை வந்து சந்தித்துப் பேசியுள்ளார்கள். அதேவேளை, நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரனும் இந்த விவகாரம் தொடர்பில் என்னுடன் வந்து பேசியுள்ளார்.

யாழ்ப்பாணத்தில் விக்னேஸ்வரனின் வீட்டில் நடைபெற்ற தமிழ்த் தேசியக் கட்சிகளின் சந்திப்பின் போதும் தேர்தல் உடன்பாடு தொடர்பில் பேசியுள்ளோம். எனினும், தமிழரசுக் கட்சியின் மத்திய செயற்குழுக் கூட்டத்தில்தான் தேர்தல் உடன்பாடு தொடர்பில் முடிவு எடுப்போம் என்று மேற்படி மூன்று சந்திப்புக்களிலும் நான் திட்டவட்டமாகத் தெரிவித்தேன். இந்த விவகாரத்தை நாம் மிகவும் பக்குவமாகக் கையாள வேண்டும். அவசரப்பட்டு கருத்துக்களை எவரும் வெளியிடக்கூடாது" என்றார்.

# ஆங் சான் சூகி மீது மேலும் ஊழல் குற்றச்சாட்டுகள்: 7 வருட சிறைத்தண்டனை

## இது வரை அவர் மீது 33 வருட சிறைத் தண்டனை விதிப்பு

இராணுவ ஆட்சியில் உள்ள மியன்மார் நீதிமன்றத்தினால், அந்நாட்டின் பதவி நீக்கம் செய்யப்பட்ட தலைவரான ஆங் சான் சூகி மீது மேலும் ஊழல் குற்றச்சாட்டுகள் தொடர்பில், 7 வருட சிறைத்தண்டனை விதிக்கப்பட் டுள்ளது.

அதற்கமைய பதவியிலிருந்து நீக்கப்பட்ட மியன்மார் நாட்டின் தலைவி ஆங் சான் சூகிக்கு (Aung San Suu Kyi) இதுவரை 33 வருட சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளதாக, சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட் டுள்ளன.

மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசாங்கத்தை இராணுவம் பதவி கவிழ்ப்பு செய்து கடந்த 2021 பெப்ரவரியில் ஆங் சான் சூகி உள்ளிட்ட அந்நாட்டு தலைவர்களை சிறையில் வைத்துள்ள இராணுவம், இதற்கு முன்னர் இடம்பெற்ற வழக்குகளில் அவர் மீது தேசத்துரோகம், ஊழல் உள்ளிட்ட குற்றச்சாட்டுகளை சுமத்தி அவருக்கு ஏற்கனவே 26 ஆண்டுகள் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

2021 இல் ஒரு ஆட்சிக் கவிழ்ப்பில் இராணுவம் அவரது அரசாங்கத்தை அகற்றியதிலிருந்து நாட்டின் முன்னாள் ஜனநாயக ரீதியாக தேர்ந்தெடுக்கப்பட்ட அவர் வீட்டுக் காவலில் வைக்கப்பட்டுள்ளார்.

அப்போதிருந்து, அவர் 18 மாதங்கள் 19 குற்றச்சாட்டுகளை எதிர்கொண்டார். இது ஒரு போலி குற்றச்சாட்டு என சமூக உரிமைக் குழுக்கள் தெரிவிக்கின்றன.

அவரை விடுதலை செய்யுமாறு ஐநா பாதுகாப்பு கவுன்சில் கடந்த வாரம் அழைப்பு விடுத்திருந்தது.

நேற்று (30) அவர் எதிர்கொண்ட கடைசி ஐந்து குற்றச்சாட்டுகளுக்கு இவ்வாறு தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. அரசாங்க அமைச்சர் ஒருவர் ஹெலிகொப்டரை வாடகைக்கு எடுக்கும் போது பின்பற்ற வேண்டிய விதிமுறைகளை அவர் பின்பற்றாததால், அவர் ஊழல் செய்ததாக நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

கொவிட் பொது பாதுகாப்பு விதிகளை மீறியமை, வாக்கி-டாக்கிகளை இறக்குமதி செய்தமை, உத்தியோகபூர்வ இரகசிய சட்டத்தை மீறியமை உள்ளிட்ட 14 வெவ்வேறு குற்றங்களுக்காக அவருக்கு ஏற்கனவே 26 வருட சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

இந்த வருடம் ஊடகங்கள், பொதுமக்கள் உள்ளிட்ட எந்தவொரு நபரும் அனுமதிக் கப்படாமல் இடம்பெற்ற இவ்வழக்கு விசாரணையின்போது இடம்பெற்ற விபரங்களை வெளியில் சொல்வதற்கு சூகியின் சட்டத்தரணிகளுக்கும் அனுமதி மறுக்கப்பட்டுள்ளது.

ஆயினும் தன் மீது சுமத்தப்பட்ட அனைத்து குற்றச்சாட்டுகளையும் அவர் மறுத்துள்ளார்.

77 வயதான நோபல் பரிசு பெற்ற ஆங் சான் சூகி, தலைநகர் நே பை தாவில் (Nay Pyi Taw) வீட்டுக் காவலில் வைக்கப்பட்டுள்ளார்.

அரசியல் கைதிகளுக்கான உதவி சங்கத்தின் (பர்மா) கூற்றுப்படி, ஆட்சியைக் கைப்பற்றியதில் இருந்து இராணுவ ஆட்சிக் குழுவால் கைது செய்யப்பட்ட 16,600 இற்கும் மேற்பட்டவர்களில் ஆங் சான் சூகி மற்றும் அவரது கட்சியைச் சேர்ந்த 13,000 பேர் சிறையில் உள்ளனர்.

கடந்த வாரம் ஐ.நா. பாதுகாப்பு கவுன்சில், மியான்மரில் வன்முறையை நிறுத்த வேண்டும் என்றும், அனைத்து அரசியல் கைதிகளையும் விடுவிக்க வேண்டும் என்றும் கூறியது. சீனாவும் ரஷ்யாவும் வாக்கெடுப்பில் இருந்து விலகியதோடு, தீர்மானத்தின் வார்த்தைகளில் திருத்தங்களைத் தொடர்ந்து அந்நாடுகள் தமது வீட்டோ அதிகாரத்தைப் பயன்படுத்தவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

ஆங் சான் சூகி மீதான "இடைவிடாத சட்ட ரீதியான தாக்குதல்", "எதிரிகளுக்கு எதிராக அரசியல் ரீதியாக தூண்டப்பட்ட அல்லது கேலிக் கூத்தான குற்றச்சாட்டுகளை கொண்டு வருவதற்கு இராணுவம் நீதிமன்றங்களை எவ்வாறு ஆயுதமாக்கியுள்ளது" என்பதைக் காட்டுகிறது என்று சர்வதேச பொதுமன்னிப்பு சபை தெரிவித்திருந்தது.

கடந்த பெப்ரவரியில் இராணுவத்தால் மியன்மார் அதிகாரத்தை வன்முறையாகக் கைப்பற்றியதை தொடர்ந்து அதற்கு எதிராக பொதுமக்களால் பரவலான ஆர்ப்பாட்டங்கள் முன்னெடுக்கப்பட்டிருந்தது. அதன் விளைவாக மியன்மர் இராணுவம், ஜனநாயக சார்பு எதிர்ப்பாளர்கள் மற்றும் ஆர்வலர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்க ஆரம்பித்தது.

இது இராணுவம் மற்றும் இராணுவ ஆட்சியாளர்களை எதிர்க்கும் சிவிலியன் படையான தனி இன கிளர்ச்சிக் குழுக்களுக்கு இடையே புதிய உள்நாட்டு சண்டையையும் தூண்டியது.

சட்டத்திற்கு புறம்பான கொலைகள் மற்றும் பொதுமக்கள் தங்கியுள்ள கிராமங்கள் மீது வான்வழி தாக்குதல்களை நடத்தியதாக இராணுவ ஆட்சிக்குழு மீது குற்றம் சாட்டப்பட்டுள்ளது. இதுவரையில் கருத்து வேறுபாடுகளுக்கு எதிராக அந்நாட்டு இராணுவம் நடத்திய அடக்குமுறையில் 2,600 இற்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

# அமைச்சர் சந்திரகாந்தனால் பல மில்லியன் பெறுமதியில் வாழ்வாதார உதவிகள்








கிராமிய வீதிகள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சரும் மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவருமான சிவநேசத்துரை சந்திரகாந்தன் தலைமையில் மண்முனை வடக்கு பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்கு வாழ்வாதாரத்தினை மேம்படுத்துவதற்கான உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு நேற்று (30) மண்முனை வடக்கு பிரதேச செயலக டேபா மண்டபத்தில் இடம்பெற்றது.

"கமசமகபிலிசந்தர" எனும் தேசியவேலைத் திட்டத்தின் கிராமத்துடன் உரையாடல் மூலம் தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்கு 3 ஆம் கட்டமாக வாழ்வாதார உதவிகள் வழங்கி வைக்கப்பட்டது.

வட்டார ரீதியில் 4 மில்லியனையும், கிராம சேவையாளர் பிரிவுகளிற்கு 3 மில்லியன் பெறுமதியான நிதியில் இருந்து வாழ்வாதார உதவிப் பொருட்கள் வழக்கி வைக்கப்பட்டது.

கொடிய கொவிற் தொற்றின் பாதிப்பு மற்றும் ரஷ்யா உக்ரைன் போரின் தாக்கத்தினாலும் எமது நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு சவாலாக உள்ளதாக தெரிவித்த இராஜாங்க அமைச்சர் விவசாயிகள் எதிர் கொண்ட உரப் பிரச்சினைகளுக்கு தீர்வுகள் வழங்கப்பட்டதைத் தொடர்ந்து இம் முறை சிறந்த அறுவடையை பெற்றுக்கொள்ள முடியும் என்பதுடன் வெளிநாட்டு சுற்றுலா பயணிகளின் வருகை அதிகரித்து இருப்பதால் அந்நிய செலவாணியை அதிகரிக்க வாய்ப்பு ஏற்பட் டுள்ளதாகவும் இதன்போது தெரிவித்தார்.

அத்தோடு மாவட்ட மக்களின் கல்வி செயற்பாட்டை அதிகரிப்பதற்கு கலைக் களஞ்சியமாக விளங்கும் நூலகத்தினை மிக விரைவில் அமைத்து மக்கள் பாவனைக்கு வழங்குவதற்கு அயராது முயற்சி செய்து வருவதாகவும் இதன்போது மேலும் தெரிவித் தார்.

பயனாளிகளுடன் கலந்துரையாடிய இராஜாங்க அமைச்சர் அவர்களின் வாழ்வாதாரத்தை உயர்த்தவும் சுயதொழில் முயற்சியில் ஈடுபட்டு தமது அன்றாட தேவைகளை பூர்த்தி செய்ய வேண்டும் எனவும் தெரிவித்தார்.

இதன் போது இராஜாங்க அமைச்சரினால் பெறுமதியானமின்கருவிகள், தொனிகள், கைத்தறி நெசவு உபகரணங்கள், குளிர்சாதன பெட்டிகள், தையல் இயந்திரங்கள் என வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் பெறுமதி வாய்ந்த பல்வேறுபட்ட சாதனங்கள் வழங்கி வைக்கப்பட்டது.

இந் நிகழ்வின் போது மண்முனை வடக்கு பிரதேச செயலாளர் வி.வாசுதேவன், பிரதேச செயலக உதவி திட்டமிடல் பணிப்பாளர் ஏ.சுதர்சன், மாநகரசபை உறுப்பினர்கள், மாவட்ட ஒருங்கிணைப்பு குழு தலைவரின் தனிப்பட்ட செயளாலர் த.தஜிவரன், பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் மற்றும் உயரதிகாரிகள் என பலரும் கலந்து கொண்டனர்.

# உள்ளதைப் பாதுகாக்கும் உள்ளுணர்வே முஸ்லிம்களுக்கு அவசியம்

**நிப்ராஸ்**

நாட்டின் அரசியல் நிலவரங்கள் தேர்தலொன்றுக்கு தயாராகி வருவதையே புலப்படுத்துகிறது. புது வருடத்தில், (2024) ஏதாவதொரு தேர்தலை எதிர்கொள்வதிலிருந்து தப்பும் நிலை எந்தத் தரப்புக்கும் ஏற்படாது. இவ்வாறு, எதிர்கொள்ள நேரும் தேர்தலில் எவ்வாறு நடந்து கொள்வது என்று எல்லாக் கட்சிகளும் சிந்திக்கின்றன.

பொதுவாக, ஜனாதிபதித் தேர்தல் மற்றும் பொதுத் தேர்தலில் வகுக்கும் வியூகங்கள் சமூகம், உரிமை, மற்றும் இருப்பு உள்ளிட்டவற்றுக்கு முக்கியத்து வமளிக்கும். பாரிய கூட்டணிகள் அமைப்பது, எதிரிகளை வீழ்த்துவது உள்ளிட்ட வியூகங்கள்தேசிய அரசியலையே புரட்டிப் போடுவதுமுண்டு. ஆனால், உள்ளூராட்சி தேர்தலில் இவ்வாறான வியூகங்கள் அவசியப்படுவதில்லை. கட்சிகளின் உட்கட்டமைப்புகளைப் பரீட்சிக்கும் தேர்தலாகவே இது அமைவதுண்டு. இருந்தும், அண்மைக்காலமாக இந்நிலைமைகள் மாறி, பலத்த போட்டிகளைச் சந்திக்கும் கள நிலவரங்களையே இந்த உள்ளூராட்சி தேர்தலும் ஏற்படுத்தி வருகிறது.

கட்சிகள் அதிகரித்து தலைமைத்துவ போட்டிகள் ஏற்பட்டமையும் இதற்கான காரணமாகும். தேசிய அரசியலில் நிபந்தனை விதிக்கவும், தேசியப் பட்டியலைப் பேரம்பேசவும் இன்னும் ஏக பிரதிநிதிகள் என்பதை நிரூபிக்கவும் இந்தத் தேர்தலே வாய்ப்பாக அமைகிறது. இதனால், உள்ளூராட்சித் தேர்தல் களம் அண்மைக் காலமாக கனதியாகி வருகிறது.

ஒருவேளை, அதிகமாக எதிர்பார்க்கப்படும் உள்ளூராட்சி தேர்தல் நடைபெறுமாக இருந்தால், முஸ்லிம் தலைமைகள் என்ன செய்யப்போகின்றன. இன்றைய நிலையில், பாராளுமன்றத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் மூன்று முஸ்லிம் தலைமைகள் உள்ளன. இத் தலைமைகளுக்குள் ஏகபிரதிநிதிகள் போட்டி என்று கூறுமளவில் எதுவுமில்லைதான். அதுபோல, உரிமை முழக்கம் என்றும் எதுவும் இல்லாதளவு இத்தலைமைகளின் இருப்புக்கள், நலிவடைவதையும் காண முடிகிறது. எதைச் சொல்லி முஸ்லிம்களை ஒற்றுமைப்படுத்துவது என்பதில், இவர்களுக்கு எதுவுமில்லாதுமுள்ளது. பெரும்பான்மைச் சமூகத்துடன் பொருந்திப் போக முயலுமளவுக்கு, தமிழ் சமூகத்துடன் புரிந்துபோகும் போக்குகள் இத்தலைமைகளிடம் குறைவாகவே உள்ளன. இதை, இத்தலைமைகளின் பலவீனம் என்பதா? அல்லது அவசியமானதுதான் என்பதா? தூரத்தில் வாழும் உறவுகளுடன் பகை ஏற்படுவதில்லை. அயலவர்களுடன் தானே அடிக்கடி முரண்பட நேரிடுகிறது.

இந்நிலையிலா, இந்நிலைமையைப் பார்ப்பது. வடக்கு, கிழக்கு மாகாணங்களில் ஒரே தாய் மொழியைப் பேசும் இரண்டு சமூகங்களும் ஒரு தாய் பிள்ளைகள்தானா? அவ்வாறானால், தாய், பிள்ளைச் சண்டைகள் தண்ணீரில் எழுத்து என்பார்களே! இதுவோ, கல்லறைச் சுவரில் எழுதிய கல்வெட்டுக்களாக உள்ளதே!

இப்போது இவையல்ல விடயம். உள்ளூராட்சி தேர்தல் நடைபெறுமானால், இந்தப்பகைகளை மேலும் கூர்மையாக்கும் பிரச்சாரங்கள் தமிழ், முஸ்லிம் தரப்பு மேடைகளில் மேடையேறக்கூடாது. கிராமிய மட்டங்களில் அபிவிருத்தி, அதிகாரங்களைப் பகிர்ந்தளிக்கும் இந்தச் சிறிய தேர்தலில், பொது எதிரி, எதிரி என்பதை விட, இனிப் பெரும்பான்மை சமூகத்தை எஜமான் என்றும் அழைக்கும் நிலையும் ஏற்படலாம்.

நமது சமூகங்களின் மோதல்கள் கூர்மையடைந்தால் இந்நிலையே ஏற்படும். கையெடுத்து கேட்கும் நமது அதிகாரங்களை, கையேந்திக் கேட்கும் நிலைமைக்கு உள்ளூராட்சித் தேர்தல் மேடைகள், போக்குகள் ஏற்படுத்தி விடக்கூடாது. ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் போக்குகளில் ஓரளவு மென்மை, மெதுமைப் போக்குகள் இருந்தாலும், இதே மெத்தனங்களை தமிழ் தேசிய கூட்டமைப்பு அக்கட்சிக்கு காட்டுகிறதா?கல்முனை விடயத்தில், எத்தனை சந்திப்புக்களை நடாத்தியுள்ளன. வடக்கு, கிழக்கு விவகாரங்களில் நடாத்தப்பட்ட பேச்சுக்களை முஸ்லிம்களுக்கு ஏன் பகிரங்கப்படுத்தாமல் இருக்கின்றனர். இந்த அச்சங்கள் ஏனைய முஸ்லிம் தலைமைகளால் கிளறப்படுவதற்கு முன்னர், தெளிவுபடுத்தப்படுவதே சிறந்தது.

## பகையும் போட்டியும் உள்ளதையும் இழக்கும் நிலையை ஏற்படத்தக்கூடாது

ஐக்கிய மக்கள் சக்தியுடன் இருப்பதற்காக, ஆளும் கட்சியை விமர்சிப்பதோ, ஆளும் கட்சி அணி என்பதற்காக ஐக்கிய மக்கள் சக்தியை விமர்சிப்பதோ, எதிர்கால தேசிய அரசியலுக்கு ஆராக்கியமாகாது. உள்ளூராட்சி மேடை முழக்கங்கள் கிராமியக் கட்டமைப்பு மற்றும் கட்சியின் கட்டுக்கோப்புக்கு வித்திடுவதே சிறந்தது.

அதிலும் விஷேடமாக தொகுதிப் பங்கீடுகள், விட்டுக் கொடுப்புக்களில், உள்ள உறவுகளையே உடைத்துக் கொள்ளாமல் முஸ்லிம் தலைமைகள் நடக்க வேண்டியுள்ளது. கழுத்தறுப்பு அரசியலுக்கு இந்த உள்ளூர் தேர்தல் களம் அமைப்பது, சில இடங்களில் கிராமிய கட்டமைப்பு அதிகாரங்களும் பறிபோகும் நிலையை ஏற்படுத்தும். சுய அடையாளத்தை தேசிய அரசியலில் இழந்து நிற்கும் முஸ்லிம் தலைமைகள், கிராம மட்ட அரசியலிலும் சுயத்தை இழப்பது, பாரிய துரதிஷ்டமாகவே இருக்கும்.

அதிலும், எல்லை நிர்ணயங்கள் விடயத்தில், இருப்புக்களை இழக்காமல் பாதுகாக்கும் பொறுப்புக்கள் இத்தலைமைகளின் தலையில் சுமத்தப்பட்டுள்ளன. இத்தேர்தலில், உள்ளூர ஏற்படும் பகையும், போட்டியும் உள்ளதையும் இழக்கும் நிலையை ஏற்படத்தக்கூடாது.

4 ஆம் பக்க தொடர்ச்சி...

# இலங்கை நாணய ...

**3. இலங்கை ரூபாவின்மூலம் டொலருக்காக வெளிப்பாய்ச்சலை ஏற்படுத்தியவர்கள் அதனை உள்நாட்டிற்குள் கொண்டுவர விரும்பாமை.**

அண்மைக் காலங்களில் எதிரொலிக்கும் குரல்கள், தற்போதைய பொருளாதார நெருக்கடிக்கு தற்போது இலங்கை அரசினை ஆளும் அரசாங்க அரசியல்வாதிகள் செய்த மோசடிகளும் அவர்களில் சிலரால் மேற்கொள்ளப்பட்ட அவர்களது வெளிநாட்டு நாணய இருப்புகளும் காரணமாக கொள்ளப்படுகின்றன. இதில் எந்த அளவிற்கு உண்மை உள்ளதோ புரியவில்லை. ஆனால், இலங்கையை துர்முகாமை செய்ததும், அதிகார துஷ்பிரயோகம் மற்றும் தகுதியற்ற சில தலைமைகளை நிறுவனங்களில் (உயர் கல்வி நிறுவனங்கள் மற்றும் பல்கலைகழகங்கள் உட்பட) அமர்த்தியமை போன்றன காரணகளாக இருப்பது புலப்படுகிறது.

அரசியல்வாதிகள் உண்மையிலேயே தமது வெளிநாட்டு நாணய இருப்புகளை மோசடி மூலம் கொண்டிருப்பார்களானால், அத்தகைய வெளிநாட்டிலுள்ள அந்நிய நாணய இருப்புப்புக்களை மீண்டும் அவர்களாகவே இலங்கைக்குள் கொண்டு வருவதற்கு இலங்கை ரூபாவின் சர்வதேச பெறுமதி வீழ்ச்சியடையும் நிலையிலேயே இருத்தல் வேண்டும். உதாரணமாக, மோசடி செய்த ஒரு அரசியல்வாதி, தன் வெளிநாட்டு நாணய இருப்பினை மேற்கொள்ளும்போது அண்ணளவாக *US$ 1 = LKR 183.85 (01-01-2021* இன்படி) ஆக இருந்திருக்கலாம். இந்த நிலையில் இவ்வரசியல்வாதி அந்த க்கு÷ மீண்டும் இலங்கையினுள்ளே கொண்டுவருவதாயின் அதன் உள்நாட்டுமுகப் பெறுமதி *LKR 183.85* யிலும் அதிகமானதாகவே இருக்க விரும்புவார். இத்தகைய ஒருவர் இலங்கை ரூபாவின் முகப்பெறுமதி *LKR 183.85* யிலும் குறைவடைவதை விரும்பமாட்டார். இதற்குரிய அடிப்படைக் காரணம் குறித்த அவ்வரசியல்வாதிக்கு இதுபற்றிய பொருளாதார விளக்க அறிவின்மையாகும்.

குறிப்பிட்டுச் சொல்வதாயின், இத்தகைய அரசியல்வாதிகளின் ஆட்சி முறைமை எக்காரணம் கொண்டும் இலங்கை ரூபாவின் பெறுமதியை சர்வதேச அளவில் பெறுமதி ஏற்றம் கொள்ள அனுமதிக்காது. இது இலங்கைச் சொத்துக்களின் சர்வதேசப் பெறுமதியை மேலும் வீழ்ச்சியடையும் நிலைக்குக் கொண்டு செல்லும். இது, மறுபுறத்தில் சர்வதேச முதலீட்டாளர்களை உள்நாட்டில் முதலிடுவதை ஒருபோதும் ஊக்கப்படுத்தாது. மாறாக, சர்வதேச முதலீட்டாளர்கள் உள்நாட்டில் முதலிடுவதை அதிகரிக்க வேண்டுமாயின், இலங்கை நாணயத்தின் பெறுமதியை ஒரு இஸ்திரமான நிலையில் அல்லது ஏற்றம் கொள்ளத்தக்க வகையில் கொண்டிருக்க வேண்டும். இதற்கு நடைமுறை அரசியல்வாதிகளும் அரசாட்சி முறைகளும் இடம் கொடுக்குமா என்பது கேள்விக்குறியாகவே இருக்கிறது.

## ரூபாவின் பெறுமதி அதிகரிப்பதை ஊழல் பேர்வழிகள் விரும்பவில்லை

மறுபுறம், இலங்கையின் ஏற்றுமதிக்கான உள்நாட்டு உற்பத்தி குறைவாகவுள்ள நிலையில் இறக்குமதியிலும் சுற்றுலாத்துறையிலும் இலங்கை வெளிநாட்டு வருவாய்க்காகத் தங்கியிருப்பதனால், இலங்கை ரூபாவிற்கான சர்வதேச கேள்வியினை ஏற்படுத்த வேண்டும் என்பதை புரிந்து கொள்ள வேண்டும். இது தொடர்பில், ஆரம்பக்கட்ட நடவடிக்கையாக சர்வதேச விமான நிலையத்தில் உள்ள இறக்குமதித் தீர்வையற்ற வியாபார நிலையங்களில் தற்போதுள்ள *US$* மூல கொள்வனவு முறையினை மாற்றியமைத்து அந்த வியாபார நிலையங்களில் இலங்கை ரூபாயில் கொள்வனவு செய்வதற்கான நடைமுறையினைக் கொள்ளல் வேண்டும்.

குறிப்பாக, தற்போதைய நடைமுறையில்,. இலங்கை ரூபாவிற்கு இலங்கையிலேயே பெறுமதியற்ற இடமாக காணப்படுவது விமான நிலையத்தில் உள்ள இறக்குமதித் தீர்வையற்ற வியாபார நிலையங்கள்தான். இது ஒரு வெட்கக்கேடான நிலைமையாகும். இலங்கையிலேயே இலங்கை ரூபாவிற்கான பெறுமதியற்ற நிலையில் தான் எமது அரசியல்வாதிகள் நாட்டை வழிநடாத்துகிறார்கள் என்பதுவே இங்கு புலப்படும் உண்மையுமாகும். அதாவது, நாமே (இலங்கையை ஆட்சி செய்வோர்) நமது இலங்கை ரூபா நாணயத்தை சர்வதேச அளவில் மதிப்பிடாதபோது, நாமே (இலங்கையை ஆட்சி செய்வோர்) இலங்கை ரூபாவிற்கான சர்வதேச கேள்வியை ஏற்படுத்தாது அதனை மறுத்து நிற்கிறோம். இது கள்ளச்சந்தையில் *US$* மற்றும் இலங்கை ரூபாவிற்கான பரிவர்த்தனையைத் தூண்டுவதாகக் கூட இருக்கலாம். இதற்கும் நாட்டை ஆளும் அரசியல்வாதிகளே காரணமாகத் திகழ்கிறார்கள்.

ஒரு நாட்டில், அதன் நாணயம் சர்வதேசமயப்படுத்தப்படாதபோதும், ஏற்றுமதிக்கான உள்நாட்டு உற்பத்தியற்ற நிலையில் இறக்குமதியில் தங்கியிருக்கும்போதும் அந்நாட்டின் நாணயம், சர்வதேசப் பெறுமதியை இழக்கும் என்பதுவே உண்மையாகும்.

இன்றைய பொருளாதார பிரச்சினைக்கு உடனடி தீர்வாக கொள்ளக் கூடியது உள்நாட்டில் வெளிநாட்டு முதலீடுகளை ஊக்குவிப்பதாகும். இதற்கு ஒரு இலகுவான வழி புலம்பெயர் தமிழர்களை இலங்கையில் முதலிடுவற்கு தூண்டுவதாகும். இது தொடர்பில் புலம்பெயர் தமிழர்கள் இலங்கைக்குள் முதலிடுவதில் உள்ள இடர்களையும் தடுப்புக்களையும் நீக்குவதற்கு வேண்டிய தேவைப்பாடுகளை சர்வதேச நியமங்களுக்கேற்ப அரசாங்கம் முன்னெடுக்க வேண்டும்.

மேலும் சொல்லப் போனால், நாம் படித்தவர்கள் என்ற மமதையுடன் இனமுரண்பாடுகளை பேண விரும்புபவர்கள் என்ற முத்திரைகளைப் பதிக்க முயன்றால், அத்தகையோர் பின்பற்றும் வாழ்க்கை முறைமையில் அவர்கள் மற்றவரை அடிமைப் படுத்த நினைத்து தங்களைத் தாங்களே தாழ்த்துபவர்களாக தம் மதத்திற்கும் இனத்திற்கும் இழிவை ஏற்படுத்துவர்களாகவே அடையாளம் காணப்படலாம். ஆக மொத்தத்தில், "இலங்கை நாணய வீழ்ச்சி - மீண்டெழுமா இலங்கை?" என்ற வினாவிற்கு தெளிவற்ற விடையே புலப்படுகிறது.



# திருகோணமலை நல்லிணக்கத்தின் அழகிய அடையாளம்

**அ . அர்சுதன்**

திருகோணமலை மாவட்டமானது திருகோணமலை, மூதூர் மற்றும் சேருவில ஆகிய மூன்று தேர்தல் பிரிவுகளையும் 11 பிரதேச செயலகங்களையும் கொண்டு அமைந்துள்ளது.

திருகோணமலை தன்னகத்தே அழகிய ஓர் இயற்கைத் துறைமுகத்தைக் கொண்டது. பிரெட்ரிக் கோட்டையின் உயரமான குன்றானது 360 அடி (110M) உயரம் கொண்டது. அதன் உச்சியில் எல்லோராலும் மிகவும் மதிக்கப்படும் வரலாற்றுச் சிறப்பு மிக்க திருக்கோணேஸ்வரம் கோவில் அமைந்துள்ளது. பௌத்தர்களின் புனித இடங்களில் ஒன்றான சேருவில விகாரை மற்றும் வில்கம் விகாரை என்பன திருகோணமலையில் அமைந்துள்ளன.

கரிமலையூத்தில் உள்ள முஸ்லிம் மசூதி, கத்தோலிக்கர் மற்றும் ஏனைய கிறிஸ்தவ சபையினருக்கான ஆலயங்கள் அனைத்தும் இந்த மாவட்டத்தில் நிலவுகின்ற மத நல்லிணக்கத்தைக் காட்டுகின்றது.







இந்த மத நல்லிணக்கத்திற்கும் இன நல்லிணக்கத்திற்கும் திருகோணமலை எகெட்-கரித்தாஸ் நிறுவனம் திருகோணமலை மாவட்டத்தில் பல சிறப்பான வேலைத் திட்டங்களை நிறுவனத்தின் மாவட்ட பணிப்பாளர் அருட்தந்தை டன்ஸ்டன் பெட்ரிக் ஜோசப் அடிகளார் தலைமையில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

இன நல்லிணக்கத்தின் அடித்தளமாக திருகோணமலை எகெட் - கரித்தாஸ் நிறுவனத்தினால் சர்வமத குழு ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது. இக் குழு மாவட்டத்தின் பிரதான ஒரு முக்கிய சக்தியாக காணப்படுகின்றது. இக்குழுவில் மதகுருமார்கள், சர்வமத தலைவர்கள் மற்றும் பொது நிலையினர் உள்ளடக்கப்பட்டுள்ளனர். சமய சகவாழ்வைக் கட்டியெழுப்புதல், சமாதானத்தை ஏற்படுத்துதல் என்ற கருப்பொருளின் அடிப்படையில் திருகோணமலையில் பல்வேறு செயற்பாடுகளை இவர்கள் முன்னெடுத்து வருகின்றார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

குறிப்பாக இந்த சர்வமத குழு மாதாந்த கலந்துரையாடல்களை நடாத்தி திருகோணமலையில் நிலையான இன நல்லிணக்கத்தை கட்டியெழுப்புவதற்கு ஒவ்வொரு மதத்தினரது பண்டிகைகள், விழாக்கள் என்பவற்றில் கலந்து சிறப்பித்து நல்லிணக்கத்தை ஏற்படுத்துகின்றனர். இனங்களிடையே பிரச்சினைகள் ஏற்படும் போது எவ்வாறு பிரச்சினைகள் மேலும் ஏற்படாமல் எவ்வாறு தீர்வு காண்பது என்பவற்றை ஆராய்ந்து சிறப்பான தீர்வுகளை எட்டியுள்ளனர். உண்மையிலேயே திருகோணமலை எகெட்-கரித்தாஸ் நிறுவனத்தினர், இந்த சர்வமத குழுவின் மூலம் திருகோணமலையில் நிலையான சமாதானத்தை ஏற்படுத்துவதற்கும் சர்வமத கலாச்சாரங்களின் ஊடாக நிரந்தரமான தீர்வுகளை எட்டுவதற்கும் இவர்கள் பாடுபட்டு வருகின்றனர்.

சமய படிப்பினைகளுக்கு இணங்க மனித மாண்பினை எவ்வாறு பாதுகாத்தல் என்ற விடயத்தை பார்க்கின்றபோது இந்து மதம், பௌத்த மதம், கிறிஸ்தவ சமயம், இஸ்லாம் மதம் என்ற அனைத்து மதங்களின் அடிப்படையில் மனிதனுக்கு உரிய கடமைகளையும், பொறுப்புகளையும், சமத்துவத்தையும், நீதியையும் எடுத்து கூறுகின்றன.

இந்து மதம் அடிப்படையில் பல சிறப்புக்களை கொண்டு உள்ளது. ஆதியான ஒருவர் இல்லை என இந்து மதப் படிப்பினைகள் தெரிவிக்கின்றன. அத்தோடு இந்து மதத்திற்கு ஆதியோ, அந்தமோ இல்லை. இம்மதம் சதாகாலமும் வழிபடும் ஒரு மதமாக நிலைத்திருக்கிறது. இந்த மதத்தின் நம்பிக்கை ஒரே சக்தியை அடிப்படையாக கொண்டாதாகும். அச் சக்தி எந்த சொரூபமாக இருப்பினும் இருப்பது ஒரே சக்தியாகும்.

புரிந்து கொள்ளல், அதனை அமுல் படுத்தல் மற்றும் பங்கேற்றல் என்பன தொடர்பில் இந்து மதத்தின் நம்பிக்கை தங்கியுள்ளது.

பௌத்த சமய படிப்பினைகளுக்குள் சமுதாயம் நிலைத்திருப்பதற்கு தேவையான பழக்கவழக்கம் மற்றும் நன்னடத்தை பழக்க வழக்கங்கள் மற்றும் நன்னடத்தை தொடர்பான முன்னுரிமைப் படுத்தப்பட்ட சில படிப்பினைகள் பௌத்த மதப்படிப்பினைகளுக்குள் அடையாளம் காணப்பட்டது.

பௌத்த மதமானது இவ்வுலகின் சுகபோக வாழ்க்கை குறித்து மாத்திரம் கவனம் செலுத்த வில்லை. மாறாக விண்ணுலக வாழ்வினதும் அவதார பிறப்புக்களினதும் நலனுக்காக இவ்வுலக வாழ்வினை சிறப்பிக்கத் தேவையான அடிப்படைக் காரணிகளையும் எடுத்துரைக்கின்றது.

கிறிஸ்தவ சமயம் விவிலியம், அன்பு, சமாதானம், விடுதலை வாழ்க்கை மற்றும் பாதுகாப்பு பற்றி சிறப்பாக எடுத்துரைக்கப்படுகின்றது.

இவ்வுலகத்தில் அனைத்து மனிதர்களும் இறைவனுடைய சாயலாகவே படைக்கப்பட்டனர். (ஆதியாகமம் 1/26, சங்கீதம் 8/5) அத்தோடு மனிதர்களில் இவ்வுலகின் பிறப்பையும் இறைவனுடைய சாயலையும் முழு உலகிற்கும் எடுத்துக் காட்டுகிறது எனவே இறைவன் படைத்த அனைத்து படைப்புக்களிலும் மனிதன் மேலோங்கி நிற்பதோடு அவனுக்கென விசேட விதமான மாண்பு வழங்கப்பட்டுள்ளது.

இஸ்லாம் என்ற பதமானது சாந்தி மற்றும் சமாதானம் ஆகும். எனவே இஸ்லாம் மதத்தின் அடிப்படை இஸ்லாம் எனும் வார்த்தைக்கிணங்க ஒழுகுவதாகும். ஒரு குழந்தையின் பிறப்பு முதல் இறப்பு வரையிலான காலப்பகுதியில் அக்குழந்தை பழகி வாழும் சமுதாயம் எவ்வாறானதாக இருப்பினும், அச்சமுதாயத்தில் வாழவேண்டிய கோட்பாடுகள் மற்றும் படிப்பினைகள் வகுத்தெடுக்கப்பட்டுள்ளது.

எனவே, மத நல்லிணக்கத்திற்கும் இன நல்லிணக்கத்திற்கும் அடிப்படையாக அமைவது ஒவ்வொரு மதங்களைப் பற்றிய அறிவு அனைவருக்கும் இருக்கவேண்டும் என்பதாகும். இச்செயற்பாட்டை ஹரிதாஸ் நிறுவனம் முன்னெடுத்து வருகின்றது என்பது சிறப்பம்சமாகவே பார்க்க முடிகின்றது.



# இயற்கைக்கு அரண்; சிறார்களின் 2000 விதைப் பந்துகள்








வ.சக்திவேல்

“மரங்களை நடுபவன் தன்னையும் நேசிக்கின்றான், பிறரையும் நேசிக்கின்றான்” என்பது முதுமொழி, காடுகள் அழிக்கப்பட்டு வரும் இக்காலத்திலும், மேற்படி முதுமொழிக்கிணங்க சிலர் தற்காலத்தில் மரங்களை நட்டு வருகின்றமை மிகவும் மெச்சத்தக்கதாகும். அதற்கு கட்டியங்கூறுவது போன்று, இறைபணியில் மாத்திரமின்றி சுற்றுச் சூழல் பணியையும் இந்து ஸ்வயம்சேவக சங்கம் மற்றும் மட்டக்களப்பு மாவட்டம் சிவதொண்டர் திருக்கூடம், என்பன மேற்கொண்டு வருவதாக அதன் ஏற்பாட்டாளர்கள் தெரிவிக்கின்றனர்.

அந்த வகையில் பாலர் பாடசாலை முதல் உயர் வகுப்பு மாணவர்கள் வரைக்கும் மற்றும் ஏனைய பொது அமைப்புக்கள் இளைஞர் யுவதிகள் அனைவருக்கும் சுற்றுச் சூழல் தொடர்பில் விழிப்புணர்வுகளை ஏற்படுத்தப்பட்டு வருவதோடு, அதனை நடைமுறைப்படுத்தியும் வருகின்றனர். அண்மையில் மட்டக்களப்பிலுள்ள சுவாமி ஓம் காரனந்தா பாலர் பாடசாலை மாணவர்களுக்கு சுற்றுச் சூழல் தொடர்பிலும், மரம் நடுத்தல் தொடர்பிலும், விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டிருந்ததோடு, அதனை அவர்களின் பாடத்திட்டத்திலும் உள்வாங்கப்பட்டு பயிற்றுவித்துவம் வரபடுகின்றன.

இதன் ஒரு கட்டமாக அக்குறித்த சிறார்கள் ஒன்றிணைந்து அவர்களுக்கு வழங்கப்பட்ட விதைகளைக் கொண்டு களிமண்ணுடன் சேர்த்து 2000 விதைப் பந்துகளைத் தயார் செய்தனர். அவ்வாறு தாயர் செய்யப்பட்ட 2000 விதைப் பந்துகளை அண்மையில் உகந்தை, யால, குமண, உள்ளிட்ட காட்டுப் பாதைகளுடாகச் கதிர்காமத்திற்கு பாதை யாத்திரை சென்ற இந்து ஸ்வயம்சேவக சங்கத்தினரிடம் அச்சிறார்கள் ஒப்படைத்ததிருந்தனர். சிறார்களின் கைப்பட உருவாக்கப்பட்ட விதைப் பந்துகளைப் பெற்றுக் கொண்ட பாத யாத்திரிகர்கள் உகந்தை முதல் கதிர்காமம் வரையில் அமைந்துள்ள காட்டுப் பகுதியில் நட்டதோடு, விதைப் பந்துகளை நீர் நிலைகள் உள்ள இடங்களில் எறிந்தும் சென்றனர்.



ஆன்மீகத்துடன் இணைந்து பாலர் பாடசாலை ஆசிரியர்கள், அதன் நிருவாகத்தினரின் வழிகாட்டுதலில் தயாரிக்கப்பட்ட இயற்கையைப் பேணும் செயற்பாடானது மாவட்டத்தில் மிகவும் முன்மாதிரியான செயற்பாடாகும் என அனைவரும் பாராட்டி வருகின்றனர். சிறார்களின் பிஞ்சுக்கரங்களால் தாயாரிக்கப்பட்ட விதைப் பந்துகளிலிருந்து உருவாகும் விருட்சங்கள் நிட்சயமாக என்றோ ஓர்நாள் மனித சமூகத்திற்கு உதவும் என்பதில் எதுவித ஐயமுமில்லை.

பன்னெடுங் காலம் முதல் சிவபூமி என அழைக்கப்படும் இலங்கையில் கைலாயத்தின் நேரே நிற்கும் கந்த பெருமானின் கதிர்காம தலத்திற்கு இவ்வருடமும் பக்தர்கள் வடகிழக்கிலிருந்து பாதை யாத்திரை மேற்கொண்டனர். மிருகங்கள் வசிக்கும் அடர்ந்த காட்டுப் பகுதி மற்றும் ஆறுகள் முதலிய கடுமையான பாதைகளை ஐந்து





நாட்கள் தொடர்ந்து கடந்து செல்லும் யாத்திரையில் சுமார் 50,000 பக்தர்கள் ஒரு குழுவாக பங்கேற்று வருகிறார்கள்.

இப்பயணத்தில் காடுகளில் மற்றும் ஆறுகளில் யாத்திரியர்கள் பயன்படுத்திய இடங்களில் இந்து ஸ்வயம்சேவக சங்கத்தின் ஸ்வயம்சேவகர்கள் தூய்மைப் பணியிலும்; ஈடுபட்டனர். பிளாஸ்ரிக் பொருட்கள், காகிதங்கள், பொலித்தீன் பைகள், போன்ற கழிவுகளை சரியான இடத்தில் சேர்த்து தூய்மைப் பணியில் ஈடுபட்டனர். இப்பணியில் இந்து ஸ்வயம்சேவக சங்க உறுப்பினர்களுடன் ஏராளமான பாதயாத்திரை பக்தர்களும் இணைந்திருந்தனர். இயற்கை வனப்பகுதிகளில் தூய்மையைப் பேணும் ஸ்வயம்சேவகர்களின் முயற்சியை சூழலியலாளர்கள் பாராட்டுகின்றனர்.

இதன்போது பாத யாத்திரைக்காக வந்த ரஷ்யா மற்றும் உக்ரைன் நாடுகளைச் சேர்ந்த இரு பக்தர்களும் தூய்மைப் பணியில் இணைந்திருந்தனர். இந்த யாத்திரையில் கலந்துகொண்ட இரண்டரை வயது குழந்தையும் சங்கத்தின் உறுப்பினர்களின் சேவையைக் கண்டு தானாக குப்பைகளைப்





பொறுக்கி வந்து அதை எரிக்கும் இடத்தில் சேர்த்த நிகழ்வு யத்திரிகர்கள் மத்தியில் நெகிழ்ச்சியைக் கொடுத்திருந்தது.

“இயற்கை நமக்கு அன்னை, இயற்கையை வழிபடுவோம் இயற்கையைப் பாதுகாப்போம்” எமது அமைப்பினூடாக சுற்றுச் சூழலைப் பேணி, சைவம் போற்றி தமிழ் வளர்ப்போம் எனும் நோக்கில் இயற்கையைப் பேணி, மரங்களை நட்டு வருகின்றோம், அதற்காக வேண்டி பாலர் பாடசாலை மட்டத்திலேயே சிறார்களை ஊக்கப்படுத்தி வருகின்றோம். இது எமக்கு வெற்றிளித்துள்ளது. அதுபோன்று சைவ சமய சிவ சின்னமான உருத்திராக்கம் ஒவ்வொரு கிராமங்கள் தோறும் ஆலயங்கள் சென்று இது வரை 47 ஆலயங்களில் 9100 உருத்திராக்க மாலைகள் நாங்களே நேரில் சென்று அணிவித்து சைவசமய அடையாளங்களின் முக்கியத்தை மக்கள் மத்தியில் கூறி அணிவித்து வெற்றி கண்டுள்ளோம். தற்சமயம் எம்மிடம் இன்னும் பல ஆலயங்களின் பக்தர்களுக்கு அணிவிப்பதற்கு உருத்திராக்க மாலைகள் தேவை, எம்மிடம் தற்சயம் உருத்திராக்கம் மற்றும் நூல்கள் பற்றாக்குறையாக உள்ளன. எமது சிவ பணியை முன்னோக்கி கொண்டு செல்ல சிவ தொண்டர்கள் தயாராக உள்ளனர். எனவே, இந்த புனிதமான சிவ பணிக்கு, பங்களிப்பை மேற்கொண்டு சுற்றுச் சூழலைப்பேணி, சைவம் போற்றி தமிழ் வளர்க்கும் மகத்தான பணியில் இணைந்து கொண்டு சிவபெருமானது ஆசிகளை பெற்றுக் கொள்ளுமாறு பொதுமக்களிடம் வேண்டுகோள் விடுக்கின்றோம். என சிவ பணியில் செயற்படும் மட்டக்களப்பு மாவட்டம் சிவதொண்டர் திருக்கூடம் வேண்டுகோள் ஒன்றையும் விடுத்துள்ளது.

## மரம் நமக்கு என்ன தருகிறது?

மரங்கள் காற்றை சுத்தப்படுத்துகிறது, வெளியிடும் கார்பனீரொட்சைட்டை கிரகித்துக் கொண்டு மனிதருக்குத் தேவையான ஒட்சிசனை வெளியிடுகிறது. புவி வெப்பமடையும் விளைவை குறைக்கிறது. மண்ணில் வேரோடி இருப்பதால், மண்ணரிப்பைத் தடுக்கின்றன. நிலச்சரிவுகளை தடுக்கின்றன. மரத்தைச் சுற்றி நீர் சேகரிப்பதனால் நிலத்தடி நீர் அதிகரிக்கிறது. காய்ந்த சருகு இலைகள் மண்ணுக்கு உரமாகின்றன. மரங்கள் உணவைத் தருகின்றன. காய், கனி, கீரை வகைகள் போன்றவை மனிதனுக்கும், விலங்குகளுக்கும், கிடைக்கும் இயற்கைக் கொடையாகும்.

ஒரு மரம் தன்வாழ்நாளில் கிரகித்துக் கொள்ளும் கார்பனீரொக்சைடின் அளவு 1000 கிலோ என கருதப்படுகின்றது. மரங்களை மனிதர்கள் பல்வேறு வகைகளில் பயன்படுத்தி வருகிறார்கள். அவற்றை அறிந்து கொள்வதற்கு அதன் பயன்களைப் பட்டியலிட்டுப் பார்த்தால் அதனை அடக்க முடியாமல் போகும். மனிதர்கள் ஒவ்வொருவருக்கும் மரமும் இறைவன் தந்த அருட்கொடையாகும்.

## மரம் ஒரு வரம்

பூமியில் மூன்றில் ஒரு பங்கு காடுகள் இருக்க வேண்டும் என்பது இயற்கையின் விதி. இவ்வாறு இருந்தால் மனிதருக்குக் கிடைக்கும் பயன் அதிகம். காடுகள் மழையைத் தருவதுடன் நிலச்சரிவைக் கட்டுப்படுத்துகிறன. மண் அரிப்பை கட்டுப்படுத்துகின்றன. கரியமில வாயுவை நிர்ணயம் செய்யும் தன்மை மரங்களுக்கு உள்ளது. புவியின் தற்பவெப்பத் தன்மையை நிர்ணயிக்கும் காரணிகளாக காடுகள் உள்ளன. காடுகள் அழிக்கப்படுவதால் கடல் மட்டம் உயர்வு, புவி வெப்பம் ஏற்பட்டு சில பகுதிகளில் அதிக மழை, சில பகுதிகளில் வரட்சி உருவாகிறது. கடலோரப் பகுதிகளில் மரங்கள் வளர்க்கப்படும்போது, அலைகளை கட்டுப்படுத்தும் சக்தி மரங்களுக்கு உண்டாகிறன. புவியைக் பாதுகாத்தால்தான் உயிரினங்களைக் காக்க முடியும்.



# கோரத்தாண்டவமாடிய சுனாமிக்கு வயது 18

வ.சக்திவேல்

2004.12.26 அன்று யாரும் எதிர்பாராத வகையில் பல்லாயிரக்கணக்கான மக்களுக்கு வாழ்வாதாரத்தை வழங்கிய கடல் ஊருக்குள் புகுந்து அப்பாவி உயிர்களையும், சொத்துக்களையும் அழித்தொழிக்கும் என யாரும் கனவில்கூட எதிர்பார்த்திருக்கவில்லை. வெளிநாடுகளில் "சுனாமி" என்ற பதம் பரீட்சயமாக இருந்தாலும் இலங்கை மக்களுக்கு கடந்த 2004.12.26 ஆம் திகதிக்குப் பின்னர்தான் அந்தப் பதம் வாய்க்குள் நுளைய ஆரம்பித்தது எனலாம்.

அன்றையதினம் இலங்கையை மாத்திரமின்றி ஆசிய பிராந்தியங்களையே ஆழிப் பேரலை உலுக்கி விட்டதென்று கூறலாம்.

இந்தோனேசியாவின் சுமாத்திரா தீவுக்கு அருகில், கடலுக்கடியில் ஏற்பட்ட பூகம்பத்தினால், இந்த சுனாமிப் பேரலைகள் எழுந்ததாக ஆய்வுகள் மூலம் அறிவிக்கப்பட்டது. கடலுக்கு அடியில் ஏற்பட்ட பூகம்பத்தினால் ஏற்பட்ட அதிர்வு சுமார் 9.0 ரிச்டர் அளவு என கணிப்பிடப்பட்டுள்ளது.

இந்தோனேசியாவின் சுமாத்திரா கடல் பிராந்தியத்தில் இருந்து உருவான இந்த கடற்பேரலைகள், சுனாமி பேரலைகளாக உருவெடுத்து இலங்கை கரையை தாக்கியது.

காலை 8.50 அளவில் கிழக்கு கரையை தாக்கிய இந்த பேரலைகள், யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை, காலி, ஹம்பாந்தோட்டை பிரதேசங்களை தொடர்ச்சியாக தாக்கின. இதன் மூலம் கரையோரப் பிரதேசங்கள் சுனாமி பேரலைகளால் துவம்சம் செய்யப்பட்டன. இந்த பேரழிவில் சிக்கி 36,594 பேர் இலங்கையில் உயிரிழந்ததாக உத்தியோபூர்வமாக பதிவாகி இருக்கிறது.

சுமாத்ரா தீவில் ஏற்பட்ட இந்த இந்தப் பேரலைகளால் ஆசிய பிராந்தியத்தில், 1,74,000 பேர் காவுகொள்ளப்பட்டுள்ளதாக சர்வதேச தரவுகள் தெரிவிக்கின்றன. இந்தோனேஷியா அதிக அளவில் இந்த சுனாமி அனர்த்தினால் பாதிக்கப்பட்டிருந்தது. அந்நாட்டில் 126,473 பேரும் இந்தியாவில் 10,749 பேரும் தாய்லாந்தில் 5,595 பேரும் சுனாமியால் காவுகொள்ளப்பட்டுள்ளார்கள்.



இதுபோன்றுதான் இலங்கைத் தீவையும் சுனாமி 2004 ஆம் ஆண்டு விட்டு வைக்கவில்லை. வடக்கு, கிழக்கு மற்றும் தென்மேல், வடமேல், உள்ளிட்ட மாகாணங்களின் கரையோரப் பிரதேசங்களையும் சுனாமித் தாக்கம் புரட்டிப்போட்டு விட்டது. இலங்கையில் இத்தாக்கத்தினால் 36,594 பேர் உயிரிழந்தும் காணாமல் போயும் உள்ளதாக பதிவிடப்பட்டுள்ளது..

அந்த வகையில், காலி மாவட்டத்தில் 1785 பேரும் ஹம்பாந்தோட்டை மாவட்டத்தில் 1102 போரும் மாத்தறை மாவட்டத்தில் 1153 பேரும் யாழ்ப்பாண மாவட்டத்தில் 901 பேரும் கிளிநொச்சி மாவட்டத்தில் 06 பேரும் முல்லைத்தீவு மாவட்டத்தில் 2652 பேரும் மட்டக்களப்பு மாவட்டத்தில் 1756 பேரும் திருகோணமலை மாவட்டத்தில் 761 பேரும் அம்பாறை மாவட்டத்தில் 4216 பேரும் பலியாகியும் காணாமலும் போயிருந்தனர். இலங்கையில் சுனாமியால் பாதிக்கப்பட்ட மாவட்டங்களில் அம்பாறை மாவட்டமே அதிக உயிரிழப்புக்களைச் சந்தித்திருந்ததாகும்.

### சுனாமி என்றால் என்ன?

சுனாமி அல்லது கடற்கோள் அல்லது ஆழிப்பேரலை என்று அழைக்கிறார்கள். சுனாமி என்பது ஜப்பானிய மொழியாகும். "துறைமுக அலை" என்பது கடல் அல்லது பெரிய ஏரி போன்ற பெரிய நீர்ப் பரப்புகளில் சடுதியாகப் பெருமளவு நீர் இடம்பெயர்க்கப்படும் போது ஏற்படும் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட அலைத் தொடர்களைக் குறிக்கும். நிலநடுக்கம் (பூமி அதிர்ச்சி), மண்சரிவுகள், எரிமலை வெடிப்பு, விண்பொருட்களின் மோதுகை போன்றவை சுனாமி அலைகளை ஏற்படுத்தக் கூடிய மூலக் காரணிகளாகும்.

சுனாமி இலங்கையை தாக்கியதும் அரசாங்கமும் உள்ளூர், மற்றும் வெளிநாட்டு அரச சார்பற்ற அமைப்புக்களும், ஓடோடி பாதிக்கப்பட்ட மக்களுக்கு உணவு மற்றும் இதர பாவனைப் பொருட்களையும் வழங்கின. பாதிப்புற்ற மக்களுக்கு பாதிப்பின் தன்மைகளுக்கு ஏற்ப இழப்பீடுகளும், ஏனைய மலசல கூட வசதி உள்ளிட்ட வீட்டுத் திட்டங்களும், அமைக்கப்பட்டுக் கொடுக்கப்பட்டுள்ளன.

## இன்னும் மீள முடியாத சோகம்

ஆனாலும், 18 வருடங்கள் கழிந்தாலும் எதிர்பாராத விதமாக கடலலையில் அள்ளுண்டுபோன தமது உறவுகளின் புகைப்படங்களை வைத்து வருடாந்தம், உயிர் நீர்த்தவர்களுக்காக ஆங்காங்கே கட்டப்பட்டுள்ள நினைவுத் தூபியில் வைத்து அஞ்சலி நிகழ்வுகளையும் நடாத்தி நினைவு கூர்ந்து அஞ்சலி செலுத்தி வருகின்றனர்.



## கரையோரம் மரநடுகையில் கவனம் தேவை

கரையோரப் பிரதேசங்களில் குறிப்பாக கடற்கரை ஓரங்களில் ஓங்கி வளர்ந்த சவுக்கு மரங்கள், பனைமரங்கள், உள்ளிட்ட மரங்கள் அடர்த்தியாக வளர்ந்த பகுதிகளில் சுனாமி ஏற்பட்ட போது கிராமங்களுக்குள் கடலலை அள்ளுண்டு வந்ததன் தாக்கம் குறைவாக இருந்துள்ளன. இதனால் அப்போது அப்பகுதியில் அப்பாவி உயிர்களும், சொத்துக்களும், பாதுகாக்கப்பட்டிருந்தன.

இதுபோன்று கடந்த வருடம் மட்டக்களப்பு மாவட்டத்தில் பல இடங்களில் காடு வளர்ப்புத் திட்டங்கள் அமுல்படுத்தப்பட்டு, அது நடைமுறைப்படுத்தப்பட்டு வருவதை அவதானிக்க முடிகின்றது.

இது இவ்வாறு அமைந்தாலும், சிலரது பொறுப்பற்ற செயற்பாடுகளால், கடற்கரைப் பகுதியில் அமைந்துள்ள மரங்கள் வெட்டப்படுவதுவும் சிறிய பற்றைக் காடுகளை அழித்து சமூகவிரோத செயற்பாடுகளை மேற்கொள்வதையும் முற்றாகத் தடை செய்ய வேண்டும். அதுபோல் கிராம மட்டம் முதல் செயற்படுகின்ற பொது அமைப்புக்களும், சமூகப் பொறுப்புகளுடன் செயற்பட்டு கடற்கரை ஓரங்கள் தோறும் மரங்களை நடுவதற்கும் அவ்வாறு நடப்படும் மரங்களை பேணிப் பாதுகாப்பதற்கும் மரங்களை மிகவும் சூட்சுமமான முறையில் வெட்டி அழித்து வருபவர்களையும் கண்டு பிடித்து அவர்களைச் சட்டத்தின்முன் நிறுத்திதண்டனைபெற்றுக்கொடுப்பதற்கும் முன்னின்று செயற்பட வேண்டும் என அனைவரும் எதிர்பார்க்கின்றனர்.

கடலோர கிராமங்களுக்குள் உட்புகாமலிருக்க கடற்கரை ஓரங்களில் மரங்களை நடுவதோடு, அதனைப் பாதுகாப்பதுவும், கடந்த சுனாமி அனர்த்தத்தில் உயிரிழந்த குடும்பங்களுக்கும் ஆறுதல் வழங்குவவும், ஒவ்வாருவரினதும் தலையாய கடமையாகும்.



# தைப்பொங்கல்

## இயற்கையை மகிழ்விக்கும் தமிழர் திருநாள்

சந்திரலிங்கம்

இயற்கையோடு இணைந்து வாழ்க்கை நடத்தி வரும் தமிழர்கள் இயற்கையை மகிழ்விக்கும் நோக்குடன் கொண்டாடப்படும் விழாவாக இப் பொங்கல் விழா காணப்படுகின்றது. இந்தியா, சிங்கப்பூர், மலேசியா, நேபாளம், இந்தோனேசியா, மொரிசியஸ்,இலங்கை போன்ற நாடுகளில் மட்டுமல்லாமல் தமிழர்கள் பரந்து வாழும் உலக நாடுகள் அனைத்திலுமே இவ்விழா கொண்டாடப்படுவதிலிருந்து இதை சிறப்பை நாம் உணரலாம்.

விவசாயிகள் வயல்களில் விளைந்த நெல்லை வீடுகளுக்கு கொண்டு சென்று அதனை உணவாக மாற்றும் போது தங்களுக்கு உதவிய இயற்கை மற்றும் கால்நடைகளுக்கும் நன்றி செலுத்தும் நோக்கில் கொண்டாடப்படும் இவ்விழா சங்க காலம் தொடக்கம் இன்று வரை தொடர்ச்சியாக கொண்டாடப்பட்டு வருகின்றது. போகி விழா, பொங்கல் விழா, பட்டிப் பொங்கல் விழா, காணும் பொங்கல் விழா என நான்கு நாட்கள் கொண்டாடப்பட்டு வரும் இவ்விழா சமயம் சார்ந்த விழாவாக அன்று பண்பாட்டு விழாவாகவே கருதப்படுகின்றது. பொங்கலுக்கு முதல் நாள் கொண்டாடப்படும் போகிவிழா அக்காலத்தில் இந்திர விழாவாக கூறப்பட்டது. போகி என்பது இந்திரனை குறிக்கும் சொல் என்பதும் இங்கு நோக்கத்தக்கது. சிலர் போக்கி என்னும் சொல் மருவிய வடிவமே போகி என்று கூறப்படுகின்றதெனவும் போக்குதல் என்பது பழையனவற்றை போக்குதல் எனவும் மனதில் உள்ள கெட்ட எண்ணங்களையும், வேதனையான அனுபவங்களையும் நீக்கி நடைபெற்ற நல்ல விடயங்களுக்கு நன்றி கூறுவதாகவும் அமையும்.

போகிப் பண்டிகை தைப்பொங்கலுக்கு முதல் நாள் கொண்டாடப்படுவதால் வீடு தொடக்கம் வீட்டில் உள்ள பொருட்களை எல்லாம் துப்புரவு செய்து, வீட்டை புனிதப்படுத்தி, தோரணம் கட்டி, சாமியறை நிலைக்கு மஞ்சள், விபூதி பூசி பொட்டு வைத்து, அலங்கரித்து வடை, பாயசம், கடலை, பயறு போன்றவைகளை கடவுளுக்கு படையலாக வைத்து உண்டு மகிழும் நாளாகவும் வீட்டு தலைவியினால் செய்யப்படும் சாந்தி விழாவாகவும் கருதப்படுகின்றது.



உழவர்களின் திருநாளாக கருதப்படும் பொங்கல் விழா இயற்கை தெய்வமாகிய சூரியனுக்கு நன்றி தெரிவிக்கும் விழாவாக கொண்டாடப்படுகின்றது, சிறுவர்கள் தொடக்கம் பெரியவர்கள் வரை அதிகாலையில் எழுந்து நீராடி புத்தாடை அணிந்து கோயிலுக்கு சென்று இறையருள் பெற்று சூரியன் உதயமாகும் கிழக்குப் பக்கம் பொங்கல் பானை வைத்து பொங்குவர். பானையின் கழுத்துப் பகுதியில் மூன்று விரல்களால் விபூதி பூசி; சந்தன திலகமிட்டு பக்தியோடு சூரிய பகவானை மனதில் நினைத்து சிலர் பசு மாட்டு பாலை சிலர் தேங்காய் பாலை பானையின் முக்கால் பகுதியை நிறைத்து அடுப்பில் வைத்து பால் பொங்கி வரும் போது பயறு கலந்த அரிசியை அகப்பையினால் பால் கொதித்து பொங்கி வழிய வரும் வேளையில் பானைக்குள் போடும்போது பால் வெளியில் வழியும் இதை நல்ல சகுனமாக அவர்கள் கருதுகின்றார்கள். பொங்கி முடிந்தபின் பொங்கலை இறைவனுக்கு படைத்து காகத்துக்கும் இடுவர். அயலவருக்கும் கொடுத்து தாங்களும் உண்டு மகிழ்வர். பெரும்பாலும் மட்டக்களப்பு பிரதேசத்தில் இம்முறையிலேயே பொங்கலை பொங்கி கொண்டாடுகிறார்கள்.

தைப்பொங்கல் விழாவின் நோக்கம் ஒன்றாக இருந்த பொழுதிலும் இலங்கையை பொறுத்தவரையில் வடக்கு,மலையகம், கொழும்பு போன்ற இடங்களில் வாழும் தமிழர்கள் வெவ்வேறு விதமாக பொங்கல் விழாவை கொண்டாடுவதை காணலாம்.

வடக்கில் உள்ள பலர் தங்கள் வீட்டின் முற்றத்தில் பத்தடிக்கு பத்தடி கொண்டதான இடத்தில் அரிசி மாவில் கோலம் போட்டு நடுப்பகுதிக்கு போவதற்கு வழி விடுவதோடு நான்கு பக்கமும் நான்கு தூண்கள் நாட்டி தென்னை குருத்து ஓலையினால் தோரணங்கள் கட்டி இடையிடையே மாவிலையையும் தொங்க விட்டிருப்பர். கோலத்தின் வலது பக்கம் அரிசி மாவினால் சூரியனைப் போன்று தனியாக கோலம் போடப்பட்டு சூரியனைப் பார்த்தபடி இரண்டு குத்து விளக்கேற்றி நிறைகுடம் வைத்திருப்பார்கள்.

கோலத்தின் நடுவில் சூரியனைப் பார்த்து வைக்கப்படும் அடுப்பு செம்மண்ணினால் செய்யப்பட்ட கற்களாக காணப்படும், பொங்கலுக்கும் மண்பானையையே பயன்படுத்துவர். மண் பானையின் கழுத்துப் பகுதியில் இஞ்சி இலை, மஞ்சநிலை கட்டப்பட்டிருக்கும்.

சில இடங்களில் இவற்றோடு மா இலையையும் இணைத்துத் தொங்க விட்டிருப்பார்கள். பானையின் கழுத்து பகுதியில் மூன்று விரல்களால் விபூதி பூசி; நடுவில் சந்தன திலகமிட்டிருப்பார்கள். கற்களின் நடுவே விறகுகளை அடுக்கித் தீ மூட்டி தண்ணீர் கலந்த பசும்பாலை பானையின் முக்கால் பங்கை நிரப்பியதாக அடுப்பில் வைப்பார்கள். அடுப்பில் வைக்கப்பட்ட தண்ணீர் கலந்த பால் கொதித்து பொங்கி நுரை தள்ளி வழியப்போகும் சந்தர்ப்பத்தில் பொங்கலோ; பொங்கல் என மகிழ்ச்சி ததும்ப கோஷமிட்டு பானைக்குள் பயறு கலந்த அரிசியை போடுவார்கள். இங்கு உள்ள மக்கள் புத்தாடை அணிவதை வழக்கமாகக் கொள்ளவில்லை.

கொழும்பில் பெரும்பாலும் மக்கள் மாடி வீடுகளில் வசிப்பதால் அவர்களிடம் முற்றம் இல்லாத நிலை காணப்படுகிறது. இதனால் எரி வாயு அடுப்புகளை பயன்படுத்தி பொங்கல் பொங்கி சூரியனை நினைத்து படைத்து புத்தாடை புனைந்து ஆலயங்களுக்கு சென்று இறைவனை வழிபட்டு மகிழ்ச்சியுடன் பொங்கலைக் கொண்டாடுகிறார்கள்.

மலையகத்தை பொறுத்தவரையில் பொங்கல் என்பது அவர்களுக்கு விஷேட விழாவாக கருதப்படுகிறது. மக்கள் வீட்டு முற்றத்தில் கோலம் போட்டு கோலத்தை சுற்றி நான்கு புறங்களிலும் வாழை மரங்களை நாட்டி, தோரணங்கள் கட்டி, அழகுப்படுத்தி, கோலத்தின் நடுவே பொங்கலுக்காக மூன்று கற்களை வைத்து,கற்களை சுற்றி நீலம் சிவப்பு வர்ணம் கலந்த அரிசி மாவினால் கோடு போட்டு வைத்திருப்பர்.

மறுநாள் பட்டி பொங்கல் இடம்பெறும். தங்களோடு வயலில் உழைத்த, உணவுக்கு உதவிய கால்நடைகளுக்கு நன்றி செலுத்தும் முகமாக காலங்காலமாக செய்யப்பட்டு வந்த பொங்கலாகும். பொங்கிய பின் எச்சில் தண்ணீர் தெளித்தல் நிகழ்வு இடம்பெறும். மாடுகளால் உண்ணப்பட்டு குடித்த நீரின் மீதியை தொழுவத்தில் 'பொங்கலோ! பொங்கல்!மாட்டுப் பொங்கல்!பட்டி பெருக? பால் பானை பொங்க!நோயும் பிணியும் தெருவோடு ஓட 'என்று கூறி அந்நீரை மாட்டுத் தொழுவத்தில் தெளிப்பார்கள். தற்போதைய காலகட்டத்தில் வயல்களில் மாடுகளை பயன்படுத்தாவிட்டாலும் வீட்டில் மாடு வளர்ப்பவர்கள் இதனை தொடர்ந்து கடைபிடித்து வருகின்றார்கள்.

காணும் பொங்கல் என்பது நான்காம் நாள் தங்கள் உறவினர்களின் வீடுகளுக்கு சென்று பலகார வகைகளை கொடுத்து மனம் திறந்து கலந்துரையாடி மகிழ்ச்சியோடு இருக்கும் நாளாக இந்நாள் காணப்படுகின்றது. இதனால் மன அழுத்தம் நீங்கி மன அமைதி உண்டாகி அன்பு, ஒற்றுமை, நல்லிணக்கம், பரஸ்பர உறவு பெருகும் நாளாக இந்நாள் காணப்படுகிறது.

இவ் வகையான விழாக்கள் தமிழர் வாழ்வில் நல்ல பண்புகளையும், நல்ல பழக்க வழக்கங்களையும், நல்ல எண்ணங்களையும், உளப்பாங்கையும் வளர்ப்பதோடு வருடம் முழுவதும் நாம் மகிழ்ச்சியாக இருப்போம் என்ற உணர்வு எம் மத்தியிலே ஏற்படுகிறது.



இளம் கலைஞர் அறிமுகம்
கு. கிலசன்

# சினிமா காதலில் மூழ்கிய நடிகை நயோமி

மலையக மண்ணின் எழில் நிறைந்த கண்டியில் பிறந்து தெல்தோட்டையில் வசிக்கும் நயோமி கணநேஷா அவர்கள் அப்பா, அம்மா, அக்கா, தம்பி என அழகிய சிறிய குடும்பத்தில் இரண்டாவது மகளாக பிறந்தவர். தன்னுடைய கல்வியை கண்டி மலைமகள் இந்து மத்திய கல்லூரியில் கற்றார். பின்னர் தேசிய இளைஞர் படையில் *National Youth Corps* இல் இரு கட்ட பயிற்சிகளை முடித்தார்.




இதனை தொடர்ந்து 2017ஆம் ஆண்டில் *IDM in national diploma* முடித்தார். அதன் பின்னர் ஊடகத்துறையில் ஆர்வம் ஏற்பட்டதால் ஹட்டனில் இயங்கும் ஹில் கல்லூரியில் அறிவிப்பு மற்றும் ஊடகத்துறைசார் சான்றிதழ் கற்கைநெறியை பூர்த்தி செய்தார்.

மாவனல்லையில் இயங்கி வரும் ஜே.எம். மீடியா தயாரிப்பு நிறுவனத்தில் ஊடகத்துறை பட்டமுன் கற்கையை முடித்தார். இதைவிட *Lacsdo Media network Srilanka, RK Media Sri lanka, Uva community Radio, Tamil Mirror Malaygam* மற்றும் *capital FM* போன்றவை நடாத்திய ஊடகத்துறை சார் பாடநெறிகளிலும் கலந்து கொண்டார். அதன் பின்னர் தீ தொலைக்காட்சியில் நிகழ்ச்சி தொகுப்பாளராக சிறிது காலம் பணியாற்றினார் ஆனாலும் ஊடகத்துறையை தாண்டி சினிமாத்துறை மீதான காதலே மேலோங்கியது.

தன் எண்ணம் போலவே 2019 ஆம் ஆண்டில் தன்னுடைய கலைப் பயணத்தை ஆரம்பித்தார்.

"உயிர் எழுதும் மடல்" என்ற குறுந்திரைப்படமே இவரது முதலாவது சினிமா பிரதேசத்திற்கு வித்திட்டது. இதில் அம்மா கதாபாத்திரத்தில் துணை நடிகையாக அறிமுகமானார்.

அதற்காக திறமைக்கான தேடல் கௌரவ விருதினை பெற்றுக்கொண்டார். அதே ஆண்டில் நவம்பர் மாதம் திறமைக்கான தேடல் பல்துறை சார்ந்தோருக்கான விருதையும் பெற்றுள்ளார்.

அத்தோடு கல்வி, கலை, இலக்கியம், ஊடகத்துறை மற்றும் சமூக சேவை போன்றவற்றுக்காக சமூக தீபம், கலை முத்து, சமூக ஜோதி, கலைத் தீபம் போன்ற பட்டங்களையும் அத்தோடு கலைச் சுடர் என்ற விருதையும் தனதாக்கிக் கொண்டார்.

எழுத்து துறையிலும் ஆர்வம் கொண்ட இவர் *Sun start* என்ற நூலிற்கு கண்டி தலதாமாளிகை என்ற தலைப்பில் ஒரு படைப்பினையும் எழுதியுள்ளார். இதைவிட விருது பெற்ற "வெண்பா" எனும் குறுந்திரைப்படத்தில் கதாநாயகியாக நடித்துள்ளார். தன் நடிப்பினால் ரசிகரகளிடம் நல்ல வரவேற்பைப் பெற்றார்.

இக் குறுந்திரைப்படம் நம் நாட்டு குறுந்திரைப்பட வரிசையில் முதன் முதலாக திருநங்கைகளின் வாழ்க்கை பற்றி கூறும் விழிப்புணர்வு குறுந்திரைப்படமாக அமைந்துள்ளது.

அதன் பின்னர் சுஜிதரன் இயக்கத்தில் மலையக மகன் தயாரித்த "வாங்கி வந்த ரோசுடி என் கூட பேசுடி" என்ற காணொளிப் பாடலில் கதாநாயகியாக நடித்துள்ளார்.

"கொழுந்து கூடைக்காரி" என்ற பாடலில் கதாநாயகியாக நடிக்கவும் ஒப்பந்தம் ஆகியுள்ளார். இப் பாடலின் படப்பிடிப்பு மிக விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளது. மேலும் இரண்டு பாடல்களை அடுத்தது கைவசம் வைத்துள்ளார்.

அத்தோடு சகோதர மொழியிலும் தனது கலை பயணத்தை ஆரம்பித்துள்ள இவர் தற்போது பசன் சந்ரசேகர *FMAC* குழுவினருடன் இணைந்து பயணிக்கின்றார் .

தன்னுடைய கனவுகளை அடையும் வரை கலைத்துறையில் பயணிக்கும் தன்னம்பிக்கையோடு சினிமாதான் வாழ்க்கை என கலைக் காதல் புரியும் நயோமியின் இலக்குகள் விரைவில் கைகூட எமது வாழ்த்துகள்.





# சோலைக்கிளி ஓர் அபூர்வ கலவை

## எழுத்தாளர் உமா வரதராஜன்

சோலைக்கிளியின் **'தண்ணீருக்குள் எத்தனை கண்கள்'** கவிதை நூல் வெளியீட்டு விழா அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் எழுத்தாளர் உமா வரதராஜன் அவர்கள் **'சோலைக்கிளி ஓர் அபூர்வ கலவை'** எனக் குறிப்பிட்டிருந்தார். சுவாரஸ்யமாகவும் கலகலப்பாகவும் அவர் ஆற்றிய உரையிலிருந்து சில குறிப்புகள்...

'சின்னச் சின்ன குச்சி மிட்டாய்' என்ற தலைப்பின் கீழ் உரையாற்றுவதற்கு நண்பர் சோலைக்கிளி என்னை இங்கே அழைத்திருக்கிறார்.

முதலிலேயே சொல்லி விட வேண்டும். நான் மிட்டாய்ப் பிரியனல்ல. நண்பரும் மிட்டாயில் நாட்டம் கொண்டவரல்ல. மிட்டாய்ப் பக்கம் நாங்கள் போகாததற்கான காரணம் என்னவென எங்கள் வைத்தியர் திருமதி.புஷ்பலதா லோகநாதனும் நன்கறிவார்.

நண்பர் சோலைக்கிளியின் அழைப்பிதழில் உள்ள இந்த 'சின்னச் சின்ன குச்சி மிட்டாய் உரை' என்பது இனிமையையும் சுருக்கத்தையும் விரும்பும் அவருடைய எதிர்பார்ப்பைக் குறிக்கிறது. ஆனாலும் கூடிய வரை என்னுடைய உரையை குச்சி மிட்டாயிலும் சிறிதாக்கி பல்லி மிட்டாயாய் ஆக்கிக் கொள்வேன் என உறுதியளிக்கிறேன்.

இந்த நூலின் உருவாக்கத்திலிருந்து, இன்றைய வெளியீட்டு நிகழ்வு வரை அவரும் நானும் சேர்ந்து பெற்ற அனுபவங்கள் ஏராளம். ஒரே வேளையில் அவருடைய இந்தக் கவிதைத் தொகுப்பும் என்னுடைய கட்டுரைத் தொகுதியும் கிழக்கு மாகாணப் பண்பாட்டலுவல்கள் திணைக்களத்துக்கு நூலாக்கத்துக்காகச் சென்றன.

இந்த நூல்கள் வர வேண்டுமென்பதில் கிழக்கு மாகாணப் பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் முன்னாள் பணிப்பாளர் தம்பி சரவணமுத்து நவநீதன் மிகவும் அக்கறை காட்டினார். இந்தப் பணியை அவர் மிகவும் காதலித்தார் என்று சொல்வது மிகையாகாது. அவர் தன் காலத்தில் பதித்துச் சென்ற பொற் தடங்கள் ஏராளம். அந்தத் தடங்களில் நண்பரின் இந்தத் 'தண்ணீருக்கு எத்தனை கண்கள்' தொகுப்பும் ஒன்று.



இந்த நூலாக்கத்தில் நாங்கள் சந்தித்த கசப்பான அனுபவங்கள் ஏராளம். அச்சகம் ஒன்றில் எங்கள் நூல்கள் தயாராகிக் கொண்டிருந்தன. எங்களுக்கும் அந்த அச்சகத்துக்கும் முன் ஜென்மத்தில் ஏதோ விரோதம் இருந்திருக்க வேண்டும். அவர்கள் மாதிரிப் பிரதிகளை அச்சிட்டு எமது பார்வைக்கு அனுப்பி வைத்தார்கள். எவ்வளவு அழகான சட்டைகளை அணிந்தவர்கள், அணிவித்தவர்கள் நாங்கள்! எங்களுக்கு வெறும் பனியனை அனுப்பி வைத்தால் எப்படி இருக்கும்?

அவற்றைப் பார்த்த நண்பர் சோலைக்கிளி "இந்தப் புத்தகங்களை இறுதி அஞ்சலிக்காக பொரளை மலர்ச்சாலை ஒன்றில் வைத்து விடுவோமா" என்று கேட்டார். (சபையில் சிரிப்பொலி...)

நான் அதனை மறுத்து, "அதற்கு செலவாகும்.. யாருக்கும் காண்பிக்காமல் நீங்கள் புத்தகங்களைக் கழியோடைப் பாலத்திலிருந்து வீசி விடுங்கள்.. நான் கல்லடிப் பாலத்திலிருந்து எறிந்து விடுகிறேன்" என்றேன். (மீண்டும் சிரிப்பொலி..)

நல்லவேளையாக அப்படியெதுவும் நடக்காமல் மட்டக்களப்பு வணசிங்ஹ அச்சகத்தினர் எம்மைத் தடுத்தாட் கொண்டு, தேவையான சத்திர சிகிச்சை செய்து முண்டங்களுக்கு மூக்கு முழி வைத்து நாலு பேர் பார்க்கும்படி ஆக்கி விட்டார்கள்.

நண்பனும் ஒரு பெரும் கவிஞனுமான சோலைக்கிளியின் இந்தக் கவிதை நூல் வெளியீட்டு நிகழ்வில் கலந்து கொள்வதையிட்டுப் பெரிதும் மகிழ்ச்சியடைகிறேன். அவருடைய முதல் கவிதைத் தொகுப்பான 'நானும் ஒரு பூனை' வெளியாகி 37 வருடங்கள் ஆகின்றன. எங்கள் நட்பின் வயதும் அதுதான். இன்று அவருடைய 13 வது கவிதைத் தொகுப்பு வெளியாகின்றது.




படைப்பிலக்கியம் என்பதை அவருடைய வாழ்வின் ஒரு பகுதியாக மாத்திரம் காண்பது பொருத்தமாகாது. படைப்புக்காகத் தன்னை அர்ப்பணித்து அதில் அப்படியே தோய்ந்து கிடப்பவர் அவர். அவரே கூறுவது போல, அவருக்கும் கவிதைக்குமான உறவு தேங்காய்க்கும் அதனுள்ளிருக்கும் தண்ணீருக்குமான உறவு. அல்லது அலைக்கும் கடலுக்குமான உறவு.. நாட்டார் மரபும், சித்தர் மரபும் கலந்த ஓர் அபூர்வ கலவையாகவே அவரை நான் அடையாளம் காண்கின்றேன்.

ஏராளமாக எழுதுவது ஒருவரின் மன ஊற்றைப் பொறுத்த விஷயம். சுமார் மூன்று ஆண்டுகளில் அவரால் எழுதப்பட்ட 178 கவிதைகளைக் கொண்ட ஒரு தொகுப்பு இது. கிட்டத்தட்ட வாரம் ஒரு கவிதை என்ற கணக்கில் இந்தத் தொகை வருகின்றது. இதில் அனுகூலமும் உண்டு. பிரதிகூலமும் உண்டு. காலத்துடன் ஒரு கலைஞன் நிகழ்த்தும் பந்தயத்தில் சில தொய்வுகள் அல்லது ஒன்றுகொன்று அண்மித்த தன்மைகள் இருக்க வாய்ப்புண்டு. இவ்வுலகின் பெருங் கலைஞர்களுக்கெல்லாம் இவ்வித அனுபவங்கள் நேர்ந்திருக்கின்றன.



## சிறுகதை

# தீட்டு 2

எஸ். ஜோன்ராஜனின்

கடந்த மாத தொடர்ச்சி..

சுவாமியார் இந்த அட்டூழியத்தைக் கண்டு எள்ளளவும் மனங் கலங்கினவராகத் தெரியவில்லை.

அவர் விக்கித்து நிற்கும் விசுவாசிகளுக்கு ஆறுதலளிக்கும் முகமாக, தம் கண்முன்னே நிகழ்கிற எந்தச் சம்பவத்துக்குமான காரண காரியங்களை வேதாந்தத்தோடு தொடர்பு படுத்தி ஆராய்வதில் தாம் பெற்றிருந்த ஆழ்ந்த சிந்தனைப் பயிற்சியைப் பிரயோகித்து ஒரு குட்டிப் பிரசங்கமே நிகழ்த்துகிறார்.

“முக்தியை நோக்கி அடியெடுத்து வைக்கும் நமக்கு, பாதை ஒளிமயமானதாய் இருக்காது; அங்கு கல்லும் முள்ளும் நிறைந்திருக்கும். பாவமென்ற அந்தகார இருள் கப்பியிருக்கும். உலக மாயை என்னும் பாவமென்ற அந்தகார இருள் கப்பியிருக்கும். உலக மாயை என்ற சூறாவளி பேய்த்தனமாய் வீசிக் கொண்டிருக்கும். நம்பிக்கையைத் துணை கொண்டு, விசுவாசம் என்ற அகல்விளக்கை ஏற்றிக் கொண்டு தட்டுத் தடுமாறித்தான் செல்ல வேண்டியிருக்கும். இடையிலே குறுகிடும் அனர்த்தங்கள், நம்மை நரகப் படுகுழியில் விழுத்தாட்டும் சோதனைகள். அவற்றை உறுதியுடன் எதிர்த்து வெல்லவேண்டும். தீபாலங்காரம் இல்லாவிட்டாலென்ன? காட்சி ஜோடனைகள் இல்லாவிட்டாலென்ன? நமது இருதயங்களிலே ‘தேவநேசம்’ சுவாலைவிட்டு எரிந்து கொண்டிருக்கிறது. அதற்கு எடுத்துக் காட்டாக உங்கள் கரங்களிலே மெழுகுவர்த்திகள் சுடர்விடுகின்றன. அவற்றைக் கொண்டே சுற்றுப் பிரகாரத்தையும் ஆராதனையையும் பங்கமில்லாமல் முடிப்போம்! என்னுடைய பங்கில் இந்த அசம்பாவிதம் நடந்ததற்காக எல்லோரும் என்னை மன்னிப்பீர்களாக...!”

சுவாமியார் உருக்கமாகப் பேச்சை முடிக்கிறார். ஊர்வலத்தில் ஒழுங்கு ஏற்படுகிறது... இழந்துவிட்ட ஒளி வெள்ளத்தை ஈடுசெய்வனபோல் அங்கு மென்மேலும் ஏற்றப்பட்ட பல்லாயிரக்கணக்கான மெழுகுவர்த்திகள் பக்தியைப் பாங்குற விளக்குகின்றன. இடைநடுவே நின்றுவிட்ட செபமும் பாடலும் புது உத்வேகத்துடன் இன்னிசையாக எழுகின்றன. சுற்றுப் பிரகாரமும் ஆராதனையும் எவ்வித ஆடம்பரமுமின்றி எளிமையாக நடந்தேறுகின்றன.

சரியான சமயத்தில் - சரியான மாதிரி சுவாமியாரின் முகத்தில் கரியைப் பூசி விட்டதாகவும் தங்களின் ஒத்துழைப்பின்றி ஒன்றுமே நடைபெறாதென்றும் நடைபெறவும் முடியாதென்றும் இறுமாந்திருந்த அண்ணாவிக் குழுவினரின் நெஞ்சங்கள் இதைக் கண்டு பொறாமையால் வேகின்றன. அதன் விளைவாக, அன்றிரவு சொரூபம் சுமந்த இளைஞர்களான தேவசகாயம், ஆரோக்கியம் ஆகியோரது இல்லங்கள் அண்ணாவிக் குழுவினரால் உடைத்துச் சின்னாபின்னமாக்கப்பட்டன. அது காரணமாக அவர்கள் பொலீசில் உதைபட்டதும் கட்டளைக் குருவானவரின் தயவால் சிறைபுகாமல் தப்பிக் கொண்டதும் பெரிய கதை.

அரையாண்டு காலம் கரைந்து மறைந்தது.

இப்பொழுதெல்லாம் அண்ணாவியாரும் குழுவினரும் தங்கள் தவறை உணர்ந்தவர்கள் போல சுவாமியாருடனும் சவரத் தொழிலாளர்களுடனும் வலியச் சென்று சமாதானமாகி விட்டார்கள்.

இதைக் காரணமாகக் கொண்டு காலத்தை அனுசரித்துப் போகும் மனோபாவம் அவர்களுக்கு ஏற்பட்டு விட்டதாகவோ, சமரச ஞானோதயம் அவர்களது மனக் குருட்டாட்டங்களைப் போக்கி விட்டதாகவோ எண்ணி மகிழ்பவர்கள் நிச்சயம் ஏமாறித்தான் போவார்கள். அவர்களுடைய இந்தக் கட்டாய சமரசத்திற்குக் காரணம், இன்னும் சிறிது நாளில் நடைபெறப் போகும் பாஸ்காலப் பண்டிகைதான்.

‘யேசுநாதரின் சிலுவை மரணக் காட்சி’ இது ஒன்றுதான் தன்னாமுனைக் கிராம மக்களின் தேவ பக்தியையும் கலைத் திறனையும் எங்கும் பிரசித்தப்படுத்தும் ஒரு முக்கிய சாதனம். தன்னாமுனை அன்று விழாக்கோலம் கொள்ளும். அண்ணாவி அருளப்புவின் ஆதிக்கம் அன்று கொடி கட்டிப் பறக்கும். இந்தப் பாஸ்காவைக் கண்டு களிப்பதற்கு சுற்றுப்புற ஊர்களிலிருந்தெல்லாம் சனங்கள் பெருந்திரளாய் வந்து கூடுவார்கள்.

மாமூல் பிரகாரம் சவரத் தொழிலாளர்களுக்கு, யேசுநாதர் சிலுவை சுமக்கும் வர்த்தமானம் கூறும் ‘பசாமி’ன் ஆறாம் பிரசங்கத்தை வாசிக்கவும் கல்வாரிப் பவனியின் போது தேவமாதா சொரூபம் சுமக்கவும் உரிமைகள் வழங்கப்பட்டன.

இவ்வளவு காலமும் குறிப்பிட்ட சிலரின் பாரம்பரிய உரிமையாயிருந்து வந்த ‘ஆசந்தி’ (யேசுநாதரின் திருச்சரிரத்தைச் சுமக்கும் பாடை) தூக்கும் உரிமை, சுவாமியாரால் இளைஞர்களின் உரிமையாக்கப்பட்டது. இம்முறை ஒரு சிறப்பம்சம், அவர்களுடன் சவரத் தொழிலாளர்களான தேவசகாயமும் ஆரோக்கியமும் தெரிவு செய்யப்பட்டது, அண்ணாவிக் குழுவினருக்கு வயிற்றெரிச்சலைக் கொடுத்த ஒரு வேண்டாத அம்சம். ஆசந்தி தூக்குபவர்களுக்குத் தன் மகன் தலைவனாக்கப்பட்டது கண்டு அருளப்பு அடைந்த மகிழ்ச்சியை, இந்த வயிற்றெரிச்சல் மென்று விழுங்கிவிட்டது. அருளப்பு தன் ஆட்களுடன் சுவாமியாரின் இருப்பிடத்துக்குப் பல நாள் நடையாய் நடந்து வாதாடிப் பார்த்தார். சுவாமியார் அசைந்து கொடுக்காமலிருக்கவே ஊர் ஜனங்களைக் கிளப்பி விட்டார். ஊரின் எதிர்ப்பைக் கண்ட சுவாமியார், பாஸ்காக் காட்சி காண்பிப்பதை நிறுத்தப் போவதாகச் சொல்லவே சகலரும் பெட்டிப் பாம்பாய் அடங்கினர்.

பார்வையாளரின் இதயங்களைப் பண்டைக்காலத்திற்கே அழைத்துச்செல்லும் வண்ணம், பாஸ்காக் காட்சி ஜோடனைகள் அமைப்பதிலும், அதற்கேற்ற ஓவியங்கள் தீட்டுவதிலும் பெயர் பெற்றவரான ‘ஜப்பான் செல்லத்தம்பி’யின் கல்வாரி மலைச் சித்திரத்தைப் பகைப்புலமாகக் கொண்டு நெடிதுயர்ந்த பாரச் சிலுவையில் கைகளும், கால்களும் இரும்பாணிகளால் அறையப்பட்டு, எந்த உலக மக்களின் இரட்சணியத்திற்காக மனிதப் பிறவி எடுத்தாரோ, அந்த உலக மக்கள் தனக்களித்த மரணப் பரிசைக் கண்டு சொல்லொணா மன வேதனைப்படுபவர் போல, முள் முடியாலும், இரத்தக் கறைகளாலும் அவலமாக்கப்பட்ட திருமுகம் மார்பில் கவிழ பரிதாப கோலத்துடன் தொங்குகிறார் யேசுபிரான்.

சிலுவையின் முன்னால் வைக்கப்பட்டிருந்த தேவமாதாவின் பிரதிமை, தன் மகனைக் கண்ணீர்க் கண்களுடன் ஏறெடுத்து நோக்கி, கரங்களை ஏந்திப் பிரபலாபிப்பது போன்ற பாவனை, செல்லத்தம்பியின் கலைநுட்பத்தால் உண்டாக்கப்பட்ட அக்காட்சி எல்லா மாதர்களுடையவும் இருதயங்களை நெக்குருக வைத்தது.

“ஐயோ மாதாவே...!” என்று சிலர் அபயமிட, பலர் உருகிக் கண்ணீர் வடிக்க...

சிலுவையின் பின்புறம் சாத்திவைக்கப்பட்டிருந்த ஏணியில், கை, கால் பதற உடல் கிடு கிடுக்க, உள்ளம் துடிதுடிக்க, வியர்வை வாய்க்காலெடுத்து கடும்பூச்சைக் கரைக்க, தட்டுத் தடுமாறி ஏறிக் கொண்டிருந்தான் அருளப்புவின் மகன் பேரின்பம். தலையிலே விசிறி மடிப்பு வைத்த வெண்ணிறத் தலைப்பாகையும், அரையங்குலக் கனத்திற்கு முகத்தில் அப்பியிருந்த செந்தூரப் பொடியும், உடலைஅலங்கரித்திருந்தவெண் பட்டாடையும் அவனை ஒரு சுந்தர புருஷனாகக் காட்டின. அந் நாளில் யேசுநாதரின் திருவுடலை நல்லடக்கம் செய்த ‘அரிமாத்தியா’ ஊரானாகிய யோசேப்பு, இப்படி அருளப்புவின் மகனைப் போல அழகனாயிருந்திருப்பானா என்பது சந்தேகமே!

அவனது பகட்டான தோற்றத்துக்கும், உடல் நடுக்கத்துக்கும் சற்றும் பொருத்தமாயில்லை.

சிலுவைக்கடியில் அவனைப் போல அழகாக உடைதரித்த இளைஞர்கள் நால்வர், அங்காந்த வாயுடன் அண்ணாந்து பார்த்தவாறு நின்றிருந்தனர். அவர்கள் யாவருக்கும் அருளப்புவின் மகனின் பயத்துக்கும் பதட்டத்துக்கும் காரணம் புரியும். இம்மாதிரிப் பொது விஷயங்களில் ஈடுபட்டறியாத - அதிலும் தலைமைப் பொறுப்பு வகித்தறியாத பேரின்பன், திடீரென்று ‘ஆசந்தி’ தூக்கும் தலைமைப் பொறுப்பு தன்மீது சுமத்தப் பட்டதும் அச்சத்தினாலும், ஆனந்தத்தினாலும் திக்கு முக்காடிப் போனான். ஆனந்தத்தை விட அச்சமே அவனைப் பலமாக ஆட்டி வைத்தது.

‘இத்தனை பேர் முன்னிலையில் தன்னுடைய பொறுப்பைத் திறம்பட நிறைவேற்ற முடியுமா?’ என்ற கேள்வி அவன் முன்னே பூதாகாரமாய்ப் பெருத்து நின்று பயமுறுத்தியது. போதாக்குறைக்கு அவனுடைய நண்பர்கள் வேறு அதையும், இதையும் சொல்லிப் பயம் காட்டினார்கள். இந்தப் பயங்கொள்ளித்தனத்திலிருந்து தப்பிக்க, பெரிய வெள்ளிக்கிழமையன்று தான் அமுல் நடத்தவென்று தீர்மானித்திருந்த திட்டத்தை மற்ற நால்வரிடமும் விபரித்த போது திடுக்கிட்டனர். தேவ துரோகம் என்றும் சாவான பாவமென்றும் பலவாறு சொல்லி அவனை அச்செயலைச் செய்யாதவாறு தடுக்க முயன்றனர்.

“என்ட பயமும் அதால நான் படுற அவஸ்தையும் ஆண்டவருக்கு நல்லாத் தெரியும்! நான் எண்ட கடமையைத் திறமாச் செய்து பேர் வாங்கிறதொண்டா, அதுக்கு இதத் தவிர ஒரு நல்லவழி இருக்கவே முடியாது, என்னைப் பொறுத்த மட்டில்! இதுக்காகவாவது ஆண்டவர் எண்ட பாவத்தைப் பொறுத்துக் கொள்ளுவார்!” என்று சமாதானம் சொல்லிச் சமாளித்தான் அவன். பாஸ்கா தினத்தன்றும் அவன் வழக்கம் போலக் கள்ளிறக்கும் நல்லானைச் சந்தித்த விஷயம், அவனுக்கும், ஆசந்தி தூக்குவோருக்கும் மட்டுமே தெரிந்த ‘பரம’ இரகசியம்.

பாஸ்கா அரங்கின் முன்புறமிருந்து சிலுவையிலிருந்து இறக்கும் ஒப்பாரியாகிய ‘திருப்பாடுகளின் அகவல்’ அண்ணாவிக் குழுவினரின் ஏகோபித்த குரலோசை வழியாக எழுந்து பரந்த சூழலை சோக மயமாக்கிற்று.

பேரின்பன் ஏணியின் உச்சிக்கு ஏறி, சிலுவை மரத்தைக் கெட்டியாய்க் கட்டிப் பிடித்துக் கொண்டு தலையை நிமிர்த்திப் பார்த்தான். எதிரே கண்ணுக்கெட்டிய தூரம் வரை விரவி இருந்த சனக் கும்பலையும், இமை வெட்டக் கூட மறந்து தன் மீது ஒருமுகப்படுத்தப்பட்டிருந்த அதன் பார்வையையும் காண...

வெறித்த அவன் விழிகளில் நிலைத்த ஒவ்வொருவரும் ஒருவர் இருவராகி, இருவர் மூவராகி வியாபிக்க... தலை கிர்ரெனச் சுழல, எது திகிலையகற்றித் தைரியத்தை வளர்க்குமென்று கருதி அருந்தியிருந்தானோ, அது வயிற்றைக் குமட்டிக் கொண்டு வந்து தொண்டையில் முட்டிக் கொண்டு நின்றது.

கால்கள் துவண்டு தொய்ந்தன. கைகள் கூசிக் குறண்டி, பிடியிலிருந்து நழுவின. இவனின் இக்கட்டான நிலையைக் கவனித்த நால்வரில் ஒருவன், “சும்மா பயந்து சாகாதடா பேரின்பா! அப்படிப் பயமாயிருந்தா ‘விசுவாச மந்திரத்தை’ மனதிற்குள் ஓது! எல்லாம் சரியாப் போயிடும்!” என இரகசியக் குரலில் கீழேயிருந்து கத்தினான். “எப்படியோ வேலை ஒப்பேறட்டும்! சீக்கிரம்!” என்று மற்றவர்களும் துரிதப் படுத்தினார்கள்.

பேரின்பன் மனோவல்லயச் செபமொன்றை முனகித் தன்னைத் திடப்படுத்திக் கொண்டே சிலுவையோடு பிணைக்கப்பட்டிருந்த யேசுநாதரின் கரங்களை விடுப்பதற்காகக் கீழேயிருந்து நீட்டப்பட்ட குறடு ஒன்றை ஒருகையை நீட்டி வாங்க முயன்றான். அடுத்த கணம், “ஐயோ.. எண்ட அப்புச்சோய்..!” என்ற பயங்கர அலறலுடன் தலைகுப்புறக் கீழே வந்து விழுந்தான்.

அவன் வாயாலும், மூக்காலும் உண்டவை, குடித்தவையோடு செங்குருதியும் கலந்து கக்கப்பட... மேனியின் நைந்து பிளந்த இடங்களிலெல்லாமிருந்து இரத்தம் பீறிட்டு ஆடையைத் தெப்பமாக்க... பார்த்துக் கொண்டிருந்த சனங்களிடையே பெரும் பரபரப்பு ஏற்பட்டது. திருப்பாடுகளின் அகவலின் சோகரச ஆலாபனை பட்டென்று அறுந்தது. எல்லோரும் மேடையை நோக்கி ஓடிவரத் தலைப்பட்டனர். அருளப்புவும் அனைவரையும் ஒதுக்கித் தள்ளிவிட்டு, பதறித் துடித்துக் கொண்டே ஓடிவந்தார்.

வெண்ணிற ஆடை செந்நிற ஆடையாக மாற, இரத்தம் நீராடிய கோலத்துடன் கை கால்களை அகல விரித்துக் கொண்டே தேவசகாயத்தின் மடியில் பேச்சு மூச்சற்றுப் பிரேதம் போல மல்லாந்து கிடந்த மகனைக் கண்டதும் அவருக்கு அடிவயிறு கலங்க..

“எண்ட மகனே!” என்று கதறிக் கொண்டே அவன் மேல் விழுந்து கட்டிக் கொண்டார்.

“சரி! சம்மனசு மாதிரி இருந்த பொடியனுக்கு பொல்லாத கண்தான் பட்டுட்டுது!”

கூடி நின்றோரின் அனுதாபச் சொற்பிரயோகத்தையும் மீறிக் கொண்டு அருளப்புவின் ஒப்பாரி உச்ச ஸ்தாயியில் ஒலித்தது.

“ஐயோ மகனே..! எனக்கு அப்பவே தெரியுமடா இப்படி நடக்குமெண்டு! கூடாத சாதியெல்லாம் கோயில் காரியத்தில் கைவச்சா, நாமதான் பொறுக்கிற மெண்டு கடவுளும் பொறுப்பாரா? அவர் கண்ணுக்கு முன்னால காட்டிப் போட்டாரே..? ஆண்டவரே...! ஆரோ பண்ணின கிலிசு கேட்டுக்கு எண்ட புள்ளையைப் பழி வாங்கிப் போட்டியே....!

இதைக் கேட்டு நின்ற தேவசகாயமும், ஆரோக்கியமும், திகைப்போடு ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டார்கள்.

# யோக ஆசனங்களின் மகிமை

கலாபூசணம்
யோகாசன கலாநிதி கா.சந்திரலிங்கம்

## ஜானுசிரசாசனம்



முழங்கால் மூட்டு தடை இரண்டையும் இணைக்கும் ஆசனம் ஜானு என்பதன் பொருள் முழங்கால் மூட்டு. சிரசு என்பது தலையைக் குறிக்கின்றது. எனவேதான் இதனை ஜானு சிரசாசனம் என கூறுகிறார்கள் இவ்வாசனம் ஜானுசீராசனம் எனவும் அழைக்கப்படுகிறது.

**பயன்கள்:**

நீரிழிவு நோய் அகற்றப்படுகிறது. பித்தப்பை, சிறுநீர் என்றவற்றில் கற்கள் உண்டாகாமல் தடுக்கிறது. சிறுநீ ரகம் பலம் பெற்று நன்கு தொழிற்படுகிறது. வயிற்றுக் கொழும்புத் தசைகுறையும். வயிற்றுப்போக்கு குறையும். மலச்சிக்கல் அகற்றப்படுகிறது. ஜீரண சக்தி அதிகரித்து பசி தூண்டப்படுகிறது. மூல வியாதி குணமாகிறது. வாயு தொல்லை அகல்கிறது. தொந்தி குறையும். கல்லீரல், மண்ணீரல், கணையம் நன்கு தொழிற்படும்.

**செயல்முறை:**







தரையில் விரிப்பொன்றை விரித்து விரிப்பில் இரண்டு கால்களையும் முன்னால் நீட்டி உட்காரவும். வலது காலை மடித்து இடது கால் தொடையின் அடிப்பகுதியில் வைக்கவும். கைகள் இரண்டையும் பக்கவாட்டில் தோளுக் குச்சமாந்தரமாகநீட்டவும். மூச்சைஉள்ளெடுத்துக்கொண்டு இரண்டு கைகளையும் மேலே காதை ஒட்டியபடி நன்கு தூக்கவும் எவ்வளவு தூரம் கைகளை உயர்த்த முடியுமோ அவ்வளவு தூரம் கைகளை தூக்கி உயர்த்தவும். மெதுவாக மூச்சை வெளி விட்டுக் கொண்டே முன்புறம் குனிந்து இடது முழங்காலை நெற்றியால் தொடவும். கைகள் இரண்டும் இடது கால்களின் பெருவிரல்களை பிடிக்க வேண்டும். இடது கால் மடியாது நன்கு நிமிர்ந்திருக்க வேண்டும். வயிறு, மார்பு இடது காலில் நன்கு பதிந்து இருக்க வேண்டும். இடுப்பு சதைகளை நன்கு தளர்த்தி வைத்துக் கொள்ளவும். இதே நிலையில் கூடியது இரண்டு நிமிடங்கள் இருக்கவும். சுவாசத்தை அடக்கி வைக்காது மெதுவாக சுவாசிக்கவும். பின்னர் மெதுவாக கைகளின் பிடியைத் தளர்த்தி மூச்சை உள்ளிழுத்துக் கொண்டே மேல் நோக்கி கைகளை முன்பிருந்த நிலைக்கு கொண்டு வரவும். இதனை மறுபக்கமும் செய்யவும். வயிற்றில் அறுவை சி கிச்சை செய்தவர்கள் முதுகு முள்ளந்தண்டில் பிரச்சனை உள்ளவர்கள் இவ்வாசனத்தை தவிர்ப்பது நல்லது.

## உஷ்ட்ராசனம்



இவ்வாசனம் ஒட்டகம் போன்று காட்சி அளிப்பதால் இப்பெயர் கொண்டு அழைக்கப்படுகிறது. உஷட்ரம் (ஒட்டகம்)

**பயன்கள்:**

முதுகுத்தண்டை பலப்படுத்தும். முதுகெலும்பு நன்றாக வளைவதால் கூன் வராமல் தடுக்கும். மூளைக்கு இரத்த ஓட்டத்தை அதிகரிக்கச் செய்து மூளையின் செயற்பாட்டை கூட்டும்.

கழுத்து தசைகளை வலுப்படுத்தும். சுவாசப்பையை நன்கு விரிவடையச் செய்யும். முன்னால் குனிந்து செய்யும் ஆசனங்களுக்கு மாற்றீட்டாசனமாக இவ்வாசனத்தைச் செய்யலாம்.

முதுகெலும்பிலுள்ள நரம்புகள் புத்துணர்ச்சி அடைகின்றன. வயிற்றுப் பகுதியிலுள்ள கொழுப்புகளை குறைக்கும். கண்களையும் கூர்மை அடையச் செய்யும்

சாமிபாட்டு தொகுதிகளை நன்கு இயங்கச் செய்து அஜீரணம், மலச்சிக்கல், வாயுத் தொல்லை போன்ற வற்றை அகற்றும்.

சிறுநீரகங்களும் பலப்படும். கல்லீரல், மண்ணீரல், பித்தப்பை போன்றவைகள் நன்கு தொழிற்பட உதவும்.

பங்கிரியாசை தூண்டி அதனை செயற்படச் செய்வதால் நீரழிவு நோய் அகலும். முதுகுத்தண்டை ஆரோக்கியமாக வைத்துக் கொள்ளும். கூன் விழாமல் பாதுகாக்கும்.

**செயல்முறை:**

வஜ்ராசனத்தில் அமரவும். முட்டுக்காலில் மெது வாக எழுந்து நிற்கவும். மூச்சை உள்ளே இழுத்துக் கொண்டு பின்பக்கம் சரிந்து வலது உள்ளங்கையால் வலது குதிகாலையும் இடது உள்ளங்கையால் இடது குதிகாலையும் பிடித்துக் கொள்ளவும்.

முடிந்தவரை இடுப்பை முன் தள்ளி நன்கு வளையவும். ஆசன நிலையில் இருந்து கொண்டு மெதுவாக சுவாசி க்கவும். 1 அல்லது 2 நிமிடங்கள் இருந்தால் போதுமானது.

மெதுவாக மூச்சை வெளி விட்டுக் கொண்டு முந்திய நிலைக்கு வரவும். அதாவது வஜ்ராசன நிலைக்கு வரவும். இரண்டு கால்களையும் வெளியில் எடுத்து நீட்டி உடலை தளர்த்தி ஓய்வெடுக்கவும்.

## பஸ்சிமோத்தாசனம்



பஸ்சிமம் என்றால் மேற்கு என பொருள்படும். உடலின் பின்பக்க தலையிலிருந்து குதிகால் வரையிலான பகுதியை மேற்கு என குறிப்பிடுகின்றனர். உடலின் மேற்கு பகுதியை வலுவடையச் செய்வதால் இதனை பஸ்சிமோத்தாசனம் எனக் கூறுவர்.

**பயன்கள்:**

வயிற்றில் கொழுப்பு சேருவதை தடுக்கும் சமிபாட்டுத் தொகுதிகளை நன்கு இயங்கச் செய்து அஜீரணம், மலச்சி க்கல். வாய்வுத் தொல்லை போன்றவற்றை அகற்றும்.

சிறுநீரகங்களைப் பலப்படுத்துவதோடு கல்லீரல், மண்ணீரல், பித்தப்பை போன்றவற்றையும் நன்கு தொழிற்படச் செய்யும்.

பங்கிரியாசைத் தூண்டி அதனை செயற்பட வைப்பதால் நீரழிவு நோய் அகலும். முதுகுத் தண்டை ஆரோக்கியமாக வைத்துக் கொள்ளும் கூன் விழாமல் தடுக்கும்.

**செயல்முறை:**

கால்களை முன்பக்கம் நீட்டி உட்காரவும். உடல் நிமிர்ந்திருக்க வேண்டும்.

கால்கள் இரண்டும் இணைந்து ஒட்டி இருக்க வேண்டும். முழங்கால்கள் மடியக்கூடாது. கைகள் இரண்டையும் பக்கவாட்டில் தோளுக்குச் சமாந்தரமாக நீட்டுக. மூச்சை உள்ளெடுத்த வண்ணம் இரண்டு கைகளையும் மேலே தூக்கவும்

கைகள் இரண்டும் காதுகளுடன் ஒட்டி இருக்க வேண்டும் இப்பொழுது மூச்சு வெளி விட்டுக் கொண்டே மெதுவாக முன்னால் குனிந்து இரண்டு கால் பெருவிரல்களையும் தொடவும்.

முடியுமானவரை முகத்தை முழங்காலைத் தொடும் வரைக்கும் கொண்டு செல்லவும் ஆரம்பத்தில் பழகுபவர்கள் முழங்கால்களை மடித்து கால் விரல்களை பிடித்துக் கொண்டு மெதுமெதுவாக முடிந்தவரை கால்களை நிமிர்த்த முயற்சிக்கவும்.

நாளடைவில் முழங்கால்களை மடிக்காமல் இரண்டு கால்களையும் தொடக் கூடியதாக இருக்கும்.



## ஆங்கிலேயர் காலப் பயணக் குறிப்புகளில்

# நற்பிட்டிமுனை

சரித்திரப் பார்வை

சஞ்சீவி சிவகுமார்

சஞ்சீவி சிவகுமார்

நற்பிட்டிமுனை நீண்டகால ஆட்சித்தள வரலாறு கொண்ட கிராமமாகும். சுற்றியுள்ள பட்டிப்பளை ஆற்றின் கிளை மற்றும் வயல்காணிகளை ஊடறுத்து **"நா"** வடிவில் நீண்டிருக்கும் முனை என்பதாக இக்கிராமத்திற்கு நற்பிட்டிமுனை என்ற பெயர் வழங்கப்பட்டது எனவும் அதுவே **"நாப்புட்டி"** என்று குறிப்பிடப்பட்டு வந்துள்ளதாகவும் வரலாற்று நூலாசிரியர்கள் குறிப்பிடுகின்றனர். தொடக்க காலத்தில் நற்பிட்டிமுனை என்பது தற்போதைய மணல்சேனை, சேனைக்குடியிருப்பு ஆகிய கிராமங்களை உள்ளடக்கியதாக கிட்டங்கித் துறை வரையான பகுதிகளை கொண்ட அகன்ற நிலப்பரப்பை குறிப்பிடப் பயன்படுத்தியமையை அறியமுடிகின்றது.

ஐக்கிய அமெரிக்க புவியியல் சபையின் நியம அலுவல்முறைப் பெயர் வழக்கு எனும் ஆவணத்தில் நற்பிட்டிமுனை *Naippattimunai* எனக் குறிக்கப்பட்டிருப்பதுடன் அது அமைந்துள்ள புவியியல் ஆள்கூறுகளாக வடக்கு அகலாங்கு 07 25 (7.417) மற்றும் கிழக்கு நெட்டாங்கு 81 45 (81.800) என்பன குறிப்பிடப்படுகின்றன. புவியியல் ஆள்கூறுகளின் அடிப்படையில் இந்த அமைவிடம் தற்போதைய கிட்டங்கி ஆற்றங்கரைக்கு அண்மித்த இடமாகும்(*Gazetteer 49, Office of Geography, Dept. of the interiors, Washington DC, June 1960*).

நற்பிட்டிமுனையின் அமைவிடம் குறித்து சைமன் காசிச்செட்டி அவர்கள் தொகுத்து வெளியிட்ட அரச ஆவணமான *The Ceylon gazetteer* இல் "மட்டக்களப்பிலிருந்து 17 மைல் தொலைவில் மட்டக்களப்பு வாவியின் ஒரு கரையில் அமைந்திருக்கும் சன அடர்த்திமிக்க நகரம்" எனக் குறிப்பிடுவார்.

***Naypattimoonè*, a large and populous village, 17 miles south east of Batticalo, situated on the banks of the lake which runs up from the above town. It has a large store-house for paddy.**

மட்டக்களப்புக்கும் நற்பிட்டிமுனைக்குமான நேரடி நீர்வழித் தொடர்பு பற்றி சைமன் காசி செட்டி அவர்கள் தமது நூலில் பின்வருமாறு மேலும் குறிப்பிடுவார். *"The lake , or arm of the sea by which it is insulated extends from the village of Nayapatemoone."*

***Batticalo*, the chief town, and seat of the collector and provincial judge of the preceding district, is situated on an island 7° 45' north latitude, and 81° 50' east longitude. It is about three miles and a half in circumference, and is called by the natives Puliantive. The lake, or arm of the sea by which it is insulated, extends from the village of Nayapattimoone, and is navigable for the country boats. It has a small square fort, built of coral stones, in which there is only a low barrack, a granary, a magazine, and a dwelling house for the commandant. The collector's house lies without the fort; and the village stands a few hundred yards from it, almost embosomed in topes of cocoanut trees. Though the streets cannot boast of regularity, nor the houses of grandeur or neatness, still the**

1858இல் சமர்ப்பிக்கப்பட்ட பெரிய பிரித்தானிய பாராளுமன்ற அறிக்கைப் பத்திரம் ஒன்றில் *"...Naypatemone - the southern extremity of the Batticaloa lake"* எனக் குறிப்பிடுவது கொண்டு நோக்கும்போது நற்பிட்டிமுனை என்பதன் ஆரம்ப எல்லைகளாக கிட்டங்கித் துறை வரையான நிலப்பகுதி கருத்தில் கொள்ளப்பட்டு இருந்தமையைப் புரிந்து கொள்ளலாம். இதே கருத்தை ஆங்கிலேயர் காலத்தில் வெளியான *Coconut planters manual* எனும் நூலும் குறிப்பிடுகின்றது.

1843இல் *J. W* பென்னட் என்பவர் எழுதிய *Ceylon and it's capabilities* என்னும் இலங்கையின் இயற்கை வளங்கள், சுதேச உற்பத்தி மற்றும் வர்த்தக வசதிகள் பற்றிய சுற்றுலாக் குறிப்புகள் அடங்கிய நூலில் நற்பிட்டிமுனையை *Naypattri - Moone* என குறிப்பிடுகிறார். அவரது குறிப்பில் மட்டக்களப்பிலிருந்து அதற்கு அடுத்த நகரமாக நற்பிட்டிமுனைக்கு பயணிப்பதான குறிப்பையும் இங்கு ஏற்றுக் கொள்ளப்படக் கூடிய தரத்திலான ஓய்வு மனை (*Rest house*) காணப்பட்டமை பற்றியும் குறிப்பிடுகிறார். இங்கு வீதியின் இருமருங்கிலும் யானை எருக்கு, எருக்கு என்பன காணப்பட்டமை பற்றியும் உள்ளூரில் இவை மருந்துக்கு பயன்படுத்தப்படும் முறைகளையும் விவரிக்கிறது இந்நூல்.

*Edward Thornton* எழுதிய *A Gazetteer of the Territories Under the Government of the Viceroy of India* (1886) எனும் நூலில் *"NAYPATTIMUNE : Village in Eastern Ceylon, seventeen miles south & east of Batticaloa, on the banks of the lake which runs up from that town"* எனக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. இவற்றின்பால் நோக்கும்போது நற்பிட்டிமுனை என்பது கிட்டங்கி ஆறுவரைநீண்ட நிலப்பரப்பாக ஒரே பெயர்கொண்டு அழைக்கப்பட்ட கிராமம் என்பது தெளிவு.

*Rev. James Cardiner* அவர்களினால் தொகுக்கப்பட்ட *A description of Ceylon* எனும் நூலின் இரண்டாம் பாகத்தில் 1800 முதல் 1803 வரை பலரது இலங்கைக்குள்ளான சுற்றுப்பயணக் குறிப்புகளை வெளியிட்டுள்ளார். 1802 ஏப்ரல் - மே மாதங்களில் பிரித்தானிய இலங்கைக்கான முதலாவது ஆளுநரான மேன்மைதங்கிய பிரெடிக் நோத் அவர்கள் திருகோணமலையில் இருந்து மட்டக்களப்பு ஊடாக மாத்தறை வரை அலுவல்முறைச் சுற்றுப்பயணம் ஒன்றை மேற்கொண்டார். இலங்கை வைத்தியசாலைகளின் மேலாளராகக் காணப்பட்ட தோமஸ் கிறிஷ்டி அவர்களும் இப்பயணத்தில் இணைந்து கொண்டிருந்தார். தோமஸ் கிறிஸ்டி அவர்களே இப்பயணக் குறிப்புகளை தனது கைப்படத் தொகுத்திருந்தார். அக்குறிப்புகளில் மே மூன்றாம் திகதி காலையில் மட்டக்களப்பிலிருந்து தொடங்கிய நீர்வழிப் பயணம் கல்லாறு ஊடாக நற்பிட்டிமுனைக்கு வருகிறது. கல்லாறு முகத்துவாரத்தில் கடல்நீர்ஆற்றுடன்கலப்பதால்விவசாயநிலங்களில்உவர்த்தன்மைஏற்படுவதைத்தடுப்பதற்காகஅமைக்கப்பட்டநீர்த்தடைச் சுவரை பார்வையிட்ட பின் இரவு 10:00 மணிக்கு நற்பிட்டிமுனை கிட்டங்கித் துறையை அடைகின்றனர். நற்பிட்டிமுனையில் அமையப்பெற்ற உயர் தரத்திலான விருந்தினர் விடுதி பற்றி இக்கட்டுரையில் குறிப்பிடப்படுகின்றது. நற்பிட்டிமுனை அரச நெற்களஞ்சியத்தை நிருமானித்தவரான பேனான்ட் அவர்களே இவ்விடுதியையும் அமைத்ததாகக் குறிப்பிடப்படுகின்றது. இவர்கள் நற்பிட்டிமுனையிலிருந்து தொடர்ந்து செல்வதற்கு தரைவழிப்பயணத்தில் உபயோகிப்பதற்கான பல்லக்கு மட்டக்களப்பிலிருந்து நற்பிட்டிமுனைக்கு வந்து சேருவது தாமதமானதால் மறுநாள் பிற்பகல் 2:00 மணிவரை பிரடிக்நோத்அவர்கள்நற்பிட்டிமுனையிலேயே தங்கியிருந்தார். நற்பிட்டிமுனை இக்குறிப்பில் *Nayapalamony* எனக் குறிப்பிடப்படுவது கவனிக்கத்தக்கது. இலங்கை ஆளுநர் மேன்மைதங்கிய பிரடிக் நோத் அவர்கள் ஏறக்குறைய ஒருநாள் முழுவதும் தங்கியிக்கும் வகையிலான விருந்தினர் விடுதி 1800களில் நற்பிட்டிமுனையில் காணப்பட்டமை இக்கிராமத்திற்குப் பெருமையே.

ஆங்கிலேயர் கால இலங்கை காலாற்படையின் 51ஆவது படைப்பிரிவின் அறுவைச் சிகிச்சை நிபுணரான தோமஸ் அன்டனி ரீடர் 1801 இல் ஜூலை 10ந் திகதி கிட்டங்கியூடாகப் பயணித்திருந்தார். இரு படகுகளை ஒன்றாக சேர்த்துக் கட்டிய அமைப்பில் இடையில் கூடார அமைப்பு செய்யப்பட்டு அதில் பல்லக்கு வைக்கப்பட்டிருந்ததாகவும் அதில் அவர் அயர்ந்து தூங்கிவிட்டதாகவும் நற்பிட்டிமுனையை அடைந்த பின்தான் கண்விழித்ததாகவும் அவர் தனது பயணக் குறிப்பில் குறிப்பிடுவார் (*James Cordinar A. M , 1817:145-146*). இக்கட்டுரையில் நற்பிட்டிமுனை மக்களின் பண்புகள் மற்றும் சூழல் என்பன பற்றி மிகவும் புகழ்வார் ரீடர்.

எந்தவிதமான பணத்தையும் வாங்க மறுத்து மக்கள் காட்டிய இன்முக உபசரிப்பும் நன்னயமும் மற்றைய ஊர்களைவிட நற்பிட்டிமுனை மீது மதிப்பை ஏற்படுத்துவதாக குறிப்பிட்டுள்ளார். நற்பிட்டிமுனை *Nayiapatamoona* என இக்கட்டுரையில் குறிப்பிடப்படுகின்றது.

10*th July*, 1801. AT half past six o'clock in the evening I left Batticaloe on a raft constructed of two large canoes joined together a considerable distance from each other, across which planks were laid; and a pandal was erected over it, under which my palanquin was placed, and I slept comfortably until we arrived at Nayiapatamoona, a distance of about thirty English miles. This place is delightfully situate at the extremity of the river, which is nearly a mile broad. The air is cool and pleasant, and the country abounds with game of all kinds. The people here are not only attentive and civil, but they wish to pay adoration to me. They insisted on supplying all my bearers and coolies with rice, and other articles, and would not accept of any money, although I endeavoured to persuade them as much as I could, and told them that I travelled at the expence

1804களில் வெளிவந்த *"The Military Panorama, Or, Officer's Companion, Volume 4"* (1814, பக்.319) எனும் இராணுவ அணியொன்றின் நகர்வு குறித்த நூற்குறிப்பில் களஞ்சியசாலை அமைந்துள்ள நற்பிட்டிமுனைக்கு எதிராக உள்ள சவளக்கடை என்னுங் குறிப்பைக் காணலாம்.

வில்லியம் ஓர் (*William Orr*) அவர்கள் 1800களில் தங்காலையில் இருந்து மட்டக்களப்பு வரை பயணித்தார். இவர் தன் பயணக் குறிப்புளை விவரமாக எழுதியுள்ளார்.

**13th. Marched at half-past five along a path way about half a mile from the river, the ground on each side low and swampy, with a jungle on the right: at half-past six halted at a deserted village, called Savul-Cudde, immediately opposite to where the Godown of Naypattemone stood, distant three miles and a half from Panemalle. This day was employed in getting the guns and stores out of the paddy-boat.**

இதில் செப்டெம்பர்16ஆந் திகதி கிட்டங்கி ஆற்றினூடாகப் பயணித்துள்ள குறிப்புகளை பதிவிடுகின்றார். மரங்கள் செறிந்ததும் நீர் நிறைந்ததும் பயிர் வளமுள்ளதுமான இடங்களாக இப்பகுதியை அவர் குறிப்பிடுகின்றார். கிட்டங்கி இவரது குறிப்புகளில் *Keetingie* எனக் குறிப்பிடப்படுகின்றது.

1857 இல் சேர். ஹென்றி வாட்ஸ் இலங்கைக்கான ஆளுநராகப் பணியாற்றிய காலத்தில் மட்டக்களப்பின் ஊடாக நற்பிட்டிமுனை, கருங்கொடி தீவு வரை பயணித்தார். இதன்போது இவர் மட்டக்களப்பு, நற்பிட்டிமுனை, கருங்கொடித்தீவு ஆகிய இடங்களில் மக்கள் முன்னிலையில் உரையாற்றினார். இந்த உரையின் போது விவசாயத்தை விருத்தி செய்வதில் அரசுக்கு உள்ள நோக்கங்களை அவர் விவரித்தார். அடுத்த ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில் நற்பிட்டிமுனைக்கும் கருங்கொடி தீவுக்குமான வீதியை செப்பனிடுவதற்கு முன்னுரிமை வழங்கப்படும் எனக் குறிப்பிட்டார். நற்பிட்டிமுனைக்கான தொடர்புகளில் மட்டக்களப்பு வாவி முக்கியமான மார்க்கம் எனவும் மட்டக்களப்பின் தெற்கில் உள்ள தென்னங் காணிகளின் அளவைக் கருதும்போது இப்பிரதேச அபிவிருத்திக்காகச் செலவிடுவது பயனுள்ளது எனவும் குறிப்பிட்டார். தனது பயணத்தின் போது இப்பிரதேசத்தில் இருந்த தென்னம் செய்கை காணிகளுக்கும் தனது களப் பயணத்தை மேற்கொண்டிருந்தார். இக்காலப்பகுதியில் கரவாகுப் பற்று வன்னிமையாக வை. வீ. சின்னத்தம்பிப் போடி அவர்கள் பதவி வகித்தார்

நற்பிட்டிமுனை வளச்செழிப்பு மிக்க நகராகவும் கேந்திர முக்கியத்துவமிக்க இடமாகவும் அக்காலத்தில் விளங்கியமையை பல்வேறு அரசியல் பிரமுகர்களின் பயணக் குறிப்புகளைக் கொண்டு தெளிவாக விளங்கலாம். பிரித்தானிய இலங்கையின் ஆளுநர்களும் படைத் தலைமைகளும் நற்பிட்டிமுனையை தங்கள் பயணங்களில் முக்கியதத்துவம் கொடுத்து வந்துள்ளனர்.

# ஊடகவியலாளர் சக்திவேலுக்கு அதி உயர் விருது



✍ ஏ.எச்.ஏ. ஹுஸைன்

“எனது மூன்று சகோதரர்களில் நான்தான் மூத்தவர். எமது வீட்டிற்கும் பாடசாலைக்கும் சுமார் ஒரு கிலோமீற்றர் தூரம் இருக்கும். பற்றைக் காடுகளைக் கடந்து நடந்தே நாம் அப்போது பாடசாலைக்குச் சென்று கல்வி கற்றோம்.

ஊடகத்துறைக்கு வந்து மக்களின் பிரச்சினைகளை உலகறியச் செய்ய வேண்டும் என்று திடசங்கற்பம் பூண்ட நாள் எனக்கு இன்னமும் நினைவில் நிறைந்திருக்கிறது.

எனக்கு அப்போது 14 வயது. அப்போது நான் 9 ஆம் தரத்தில் கல்வி கற்றுக் கொண்டிருந்தேன். அன்றொருநாள் பாடசாலை புறப்பட்டு விட்டோம் தொலை தூரத்தில் துப்பாக்கிச் சூட்டுச் சத்தங்கள் கேட்டன. அம்மா எங்கள் மூவரையும் அழைத்துக் கொண்டு பாடசாலைக்குச் செல்லும் போது வானில் விமானம் ஒன்று வட்டமிட்டுக் கொண்டிருந்தது.

அந்த விமானம் காட்டுப் பகுதியில் பரல் குண்டுகளைப் போடும் பயங்கர சத்தம் கேட்டது. அந்நிலையில் கோழி தனது குஞ்சுகளை இறக்கைக்குள் பாதுகாப்பது போன்று அம்மா எம்மை இறுகக்கட்டி அணைத்துப் பிடித்துக் கொண்டார். நாம் மூவரும் அம்மாவை இறுகக் கட்டிப் பிடித்துக் கொண்டோம்.

அப்போதிருந்தே ஆயுதங்களையும் ஆயுதம் தாங்கியோரையும் சிப்பாய்கள் அணியும் சப்பாத்துத் தடங்களையும் கண்டால் நடுக்கம் வரும். அந்நேரம் எமது பகுதிக்கு பத்திரிகைகளே வருவதில்லை, மின்சாரமில்லை. எதுவித ஊடகத் தொடர்புகளும் இல்லை. சொல்லப்போனால் வெளியுலகத் தொடர்புகளே எமது படுவான்கரைப் பிரதேசத்தில் இருந்ததில்லை.

அப்போதுதான் நினைத்தேன் நான் படித்து முடித்ததும், மக்கள்படும் வேதனைகளை வெளி உலகிற்கு வெளிப்படுத்த வேண்டும் என்ற உணர்வலை என் உள்ளத்தில் எழுந்தது.

அந்த சிந்தனையிலேயே வளர்ந்த நிலையில்தான் நான் ஊடகத்துறையைத் தேர்வு செய்தேன்.

ஊடகத்துறையில் ஆர்வம் கொண்ட என்னை இனம், மதம், பிரதேசம் என்று பாராது அனைவரும் வரவேற்றனர்.

நன்கு பயிற்சிகளையும், தெளிவுகளையும் வழங்கினர். அதன் காரணமாக நான் கிராமப் புறங்களிலுள்ள பிரச்சினைகளை தேடிச் சென்று பக்கம் பக்கமாக எழுதினேன், எனது எழுத்துக்களின் பிரதிபலிப்பாக பிரச்சினைகள் பல தீர்க்கப்பட்டிருக்கின்றன” என்கிறார் கடைசியாக இம்மாதம் 13ஆம் திகதி சிறந்த ஊடகவியலாளருக்கான “சுப்பிரமணியம் செட்டியார்” விருது பெற்ற மட்டக்களப்பு களுதாவளையைச்சேர்ந்த ஊடகவியலாளர் வடிவேல் சக்திவேல்.

இலங்கைப் பத்திரிகை ஆசிரியர்கள் சங்கம், இலங்கைப் பத்திரிகைப் பேரவையுடன் இணைந்து நடத்திய 2021ஆம் ஆண்டுக்கான அதி சிறந்த ஊடகவியலாளர்களுக்கான விருது வழங்கும் வைபவம் கொழும்பு கல்கிஸ்ஸ மௌண்ட் லவினியா விடுதியில் நடைபெற்றது.

அந்நிகழ்வில் சிறந்த ஊடகவியலாளருக்கான மக்களின் பிரச்சினைகளைக் கட்டுரைகள் வடிவில் தமிழ்மிரர் பத்திரிகையில் வெளிக்கொணர்ந்தமைக்காக “சுப்பிரமணியம் செட்டியார்” விருது வழங்கி சான்றிதழ் அளித்து ஊடகவியலாளர் சக்திவேல் கௌரவிக்கப்பட்டார்.

### களுமுந்தன்வெளி ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயத்தினால் வழங்கப்பட்ட கௌரவம் 2022

மட்டக்களப்பு களுமுந்தன்வெளி ஸ்ரீ முத்துமாரியம்மனை வருணித்து பாடலாசிரியரும், சிரேஷ்ட சுதந்திர ஊடகவியலாளருமான வடிவேல் சக்திவேல் எழுதிய பாமாலை இறுவெட்டு வெளியீட்டு விழா கடந்த 07.07.2022 இடம்பெற்றது. இதன்போது ஆலய நிருவாகத்தினர், மற்றும் பொது அமைப்புக்களால் சக்திவேல் அவர்கள் பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டார்..

ஆர்வமுடன் முன்னேறத் துடிப்போருக்கு, குறைந்த வளங்களுடன் கூடிய சேவை செய்துவரும் சுதந்திர ஊடகவியலாளர் வடிவேல் சக்திவேலின் அனுபவப் பின்னணிகள் ஊக்கமளிக்கக் கூடியவை.

மட்டக்களப்பு - படுவான்கரை, களுமுந்தன்வெளி எனும் சிறியதொரு

## மக்களின் பிரச்சினைகளை வெளிக்கொணர்வதில் கிடைத்த சமூக அங்கீகாரம்

செய்தியாளர், ஊடகவியலாளர், கட்டுரையாளர், பாடலாசிரியர், கவிஞர், விவசாயி, சமூக சேவையாளர் என பல்வேறுபட்ட திறமைகளைத் தன்னகத்தே கொண்டுள்ள சக்திவேல் இது போன்று இதற்கு முன்னரும் பல விருதுகளைத் தக்க வைத்துக் கொண்டுள்ளார்.

### “சிறந்த மக்கள் சேவை ஊடக விருது 2008”

விமானங்கள் குண்டு வீசிய அதிர்வு 14 வயதில் அம்மாவைக் கட்டிப் பிடித்து அழுது கொண்டு இருந்தபோது எழுந்த உந்துதலே மக்களின் பிரச்சினைகளை வெளியுலகிற்கு கட்டுரைகள் வடிவில் வெளிக் கொண்டு வர உதவி விருதைப் பெற்றுத் தந்தது.

அந்நிகழ்வில் யுத்தத்திற்குப் பின்னர் பெண்கள் எதிர்கொள்ளும் இன்னல்கள் தொடர்பில் பத்திரிகை வாயிலாக கட்டுரை வடிவில் கருத்துக்களையும் தகவல்களையும் வெளிக்கொணர்ந்தமைக்காக “சிறந்த கட்டுரையாளருக்கான (தமிழ்) விருதும்” பெறுமதிவாய்ந்த பசில்களும், வழங்கிக் கௌரவம்.

கிராமத்தில் பிறந்து வளர்ந்து தற்போது களுதாவளைக் கிராமத்தில் வசித்து நவருகின்றார் சக்திவேல். தனது ஆரம்பக் கல்வியை களுமுந்தன்வெளி கஜமுகன் வித்தியாலயத்திலும், உயர் கல்வியை திருப்பழுகாமம் கண்டுமணி மகாவித்தியாலயத்திலும் (தற்போது தேசியப் பாடசாலை), மதுரை காமராசர் பல்கலைக்கழகத்தில் அரசியல் விஞ்ஞானத்துறையில் தனது பி.ஏ. பட்டப்படிப்பையும் பூர்த்தி செய்துள்ளார்.

விவசாயக் குடும்பத்தைப் பின்னணியாகக் கொண்ட அவர் பள்ளி மாணவனாக இருக்கும் காலத்திலேயே ஒருங்கிணைந்த பீடைக்கட்டுப்பாடு எனும் விவசாயப் பயிற்சியையும் பூர்த்தி செய்துள்ளார்.

பள்ளிப் படிப்பு முடித்ததும், மாவட்டத்தின் டேர்பா எனும் வறுமை ஒழிப்பு திட்டத்தில் இணைந்து சுமார் 4 வருடங்கள் கடமையாற்றி பின்னர் அந்நிறுவனத்தினூடாக 2004ஆம் ஆண்டு இந்தியா சென்று எம்.எஸ். சுவாமிநாதன் ஆராய்ச்சி பவுண்டேசனில் சமூக உணர்வூட்டல் பயிற்சி பெற்று இந்திய வேளாண் விஞ்ஞானி பேராசிரியர் எம்.எஸ். சுவாமிநாதன் அவர்களிடமிருந்து சான்றிதழையும் பெற்றுள்ளார்.

யுத்த சூழலுக்குள் தமது பாடசாலைக் கல்வியைத் தொடரும் காலத்திலேயே தாம் அனுபவிக்கும் வேதனைகளை வெளி உலகிற்கு எடுத்துரைக்க வேண்டும் என்ற எண்ணம் சக்திவேலுக்கு இருந்தது.

பாடசாலைக் காலத்தில் மட்டக்களப்பிலிருந்து வெளிவந்த தினக்கதிர் பத்திரிகைக்கு கவிதை ஆக்கங்களையும் இலங்கை வானொலி தென்றல் சேவையில் இசையும் கதையும் கவிதைக்கு ஏற்ற கானம், போன்ற நிகழ்ச்சிகளுக்கு ஆக்கங்களை அவர் எழுதி வந்தார்.

பாடசாலைக் கல்வியை முடித்ததும் கொக்கட்டிச்சோலையிலிருந்து வெளிவந்த ஈழநாதம் பத்திரிகையில் ஒப்புநோக்குனராக இணைந்து கொண்ட சக்திவேல் அங்கு கடமையாற்றிக் கொண்டிருக்கும் நிலையில் அந்த பத்திரிகை நிறுவனம் யுத்தம் காரணமாக தொடர்ந்து வெளிவர முடியாத நிலையில் மூடப்பட்டது.

பின்னாட்களில் நெக்டெப் திட்டத்தில் இணைந்து கடமையாற்றிக் கொண்டிருக்கும் நிலையில் இன்ர நியூஸ் எனப்படும் சர்வதேச ஊடக அபிவிருத்தி நிறுவனத்தில் ஊடகப் பயிற்சிக்கு விண்ணப்பித்து அதில் தேர்ந்தெடுக்கப்பட்ட அவர் அந்நிறுவனத்தினால் நாட்டின் பல பாகங்களிலும் நடைபெற்ற அச்சு மற்றும், இலத்திரனியல் வானொலி நாடகம், குறும்படத் தயாரிப்பு, உள்ளிட்ட ஊடக பயிற்சிகளையும், பெற்றுக் கொண்டார்.

இன்ர நியூஸ் நிறுவனத்தின் கீழ் உருவாக்கப்பட்ட கிழக்கு ஊடக இல்லத்தில் ஊடகவியலாளராக இணைந்து கொண்டு கிழக்கு, தெற்கு மற்றும் மலையகம், உள்ளிட்ட பகுதிகளுக்கும் நேரில் சென்று மக்களின் பிரச்சினைளைப் பெட்டக வடிவில் தயாரித்து, அதனை பிறை எவ்.எம், சூரியன் எப்.எம். ஊவா சமூக வானொலி, இலங்கை வானொலி தென்றல் சேவை ஆகியற்றில் ஒலிபரப்பப்பட்டு வந்தன.

தொடர்ந்து தனது ஊடக வாழ்வை விஸ்தரித்துக் கொண்ட அவர் இலங்கையிலுள்ள தேசியப் பத்திரிகைகளுக்கும், வானொலி, தொலைக்காட்சி, இணையத்தளங்கள், மற்றும் சர்வதேச ஊடகங்களுக்கு மட்டக்களப்பு பிராந்தியத்திலிருந்து செய்திகளையும், ஆய்வுக் கட்டுரைகளையும், இன்றுவரை வழங்கி வருகின்றார்.

சக்திவேல் அவர்கள் ஊடகத்துறையோடு மாத்திரமல்லாது, தனது தந்தை காட்டிய விவசாயத்தையும் அதனைத் திறம்பட மேற்கொண்டு வருவதோடு பல சமூக மட்ட அமைப்புக்களிலும் இணைந்து பணியாற்றி வருகின்றார்.

குறிப்பாக இலங்கைச் செஞ்சிலுவைச் மட்டக்களப்பு மாவட்டக் கிளையின் பொருளாளராகவும் சேவையாற்றுகிறார்.

பல சமூக சேவைகளைச் செய்துவரும் பிரபல சமூகசேவையாளரான சக்திவேல் அவர்கள் யோகா பயிற்றுவிப்பாளராகவும், முதலுவியாளராகவும், செற்பட்டு வருகின்றார்.

இவ்வாறு சமூகத்திலும், ஊடகத்திலும் தனக்கென ஆரவாரம் இல்லாமல் ஓர் தனி இடத்தைப் பிடித்துக் கொண்டு திகழும் வடிவேல் சக்திவேல் அவர்கள் பல்வேறுபட்ட விருதுகளையும் தன்னகத்தே பெற்றுள்ளமை அவருக்குக் கிடைத்த மாபெரும் அங்கீகாரமாகத் திகழ்கின்றது.

# மனமது செம்மையானால்

# நினைத்தது நிகழும்..!



உடலின் வலிமையைவிட, உள்ளத்தின் வலிமையே ஆற்றல் மிக்கது என்பது அனைத்து வெற்றியாளர்கள், மகான்கள், சித்தர்கள் சொல்லி வைத்த விடயம்.

மனதினை திறம்பட செய்யும் போது அதன் அபரிதமான ஆற்றல்களினால் உங்களை நீங்களே உயர்த்திக் கொண்டே இருக்க முடியும்.

தறிகெட்டு திரியும் மனதினை கடிவாளம் இட்டு உன்பக்கம் திருப்புகையில் அதன் ஆற்றலை கண்டு நாமே ஆச்சர்யபடும் நிலை ஏற்படும்.

**"சிந்தை தெளிய வல்லார்க்கு சிந்தையுள்ளே சிவன் இருந்தானே"**

**மனம் போக்குதான் எல்லாமே..!**

ஒரு நாளில் ஓர் சாதாரண மனிதனின் மனதில் 80,000 - 90,000 வரையான எண்ணங்கள் தோன்றி மறைகின்றன. அதில் 85,000 எண்ணங்கள் எதிர்மையான எண்ணங்களும், நினைவுகளும், கற்பனைகளுமே தோன்றுகின்றன என்று உளவியல் ஆய்வாளர்களின் கருத்து. இவ் எதிர்மறையான எண்ணங்களின் காரணமாகவே ஒருவரின் வாழ்க்கை நிலை எதிர்மறையை எதிர்கொள்ள வேண்டியிருக்கின்றது.

இது எவ்வாறு சாத்தியம் என்று ஆய்வு செய்கையில் எதிர்மறையான எண்ணங்களை ஒருவர் மனதில் சுமந்து கொண்டு ஓர் செயலை செய்யும் போது அதன் விளைவுகளும் எதிர்மறையாகவே ஏற்படுகின்றன. தோல்வி, விரக்தி, கவலை போன்ற நிலை ஏற்படுகின்றது.

**"தீதும் நன்றும் பிறர் தர வாரா"** என்பது புறநானூற்று பாடல்களில் ஒன்று.

பிறரை குறைகூறமால் தன் எண்ண போக்கினை மாற்றி அமைத்தால் வெற்றிகள் தன வசப்படும்.

எண்ணங்களை கட்டுப்படுத்துவது என்பது ஓர் சாதாரண மனிதனுக்கு பெரும் சவாலான விடயம் தான். நிகழ்கால வணிக உலகில் சவால்கள் என்பது மிகவும் மலிந்தே இருக்கின்றன. இவை ஓர் மனிதனின் மனதில், எண்ணங்களில் எதிர் விசையை இலகுவில் ஏற்படுத்தும்.

இந்த எதிர் விசைகளை எவர் வெற்றிகரமாக எதிர்கொள்கின்றாரோ நிச்சயம் அவரின் மனம் ஆனந்தம் அடையும் வாழ்க்கையும் அர்த்தமாகமாறும்.

**"உலகம் மிகப்பெரியது, வாழ்க்கை மிக சிறியது"**

ஆய்வுகளின் படி உலகில் அதிகமானோர் தங்களின் கடந்த காலங்களை நினைத்து கொண்டும், எதிர்காலத்தை அதிகளவில் திட்டமிட்டு கொண்டும், தங்களின் நிகழ்காலத்தை இழந்து விடுகின்றனர்.

"இந்த நிமிடம் இந்த நாளினை வாழ்ந்து முடி நண்பா..! பின்னர் நாளை பொழுதினையும், எதிர்காலதையும் பற்றி சிந்திக்காலாம்" என்பது வெற்றியாளர்களின் மகுட வாக்கியம்.

எதிர்காலம் பற்றி அதிகம் சிந்திக்கும் போது பல எதிர்மறையான விசைகள் உள்வாங்கும் இதனால் பல எதிர்மறை எண்ணங்கள் தோன்றும் மனம் அமைதியை இழக்கும்.

இப்படி ஒவ்வொருவரின் எதிர்மறையான எண்ணங்களே ஒவ்வொருவரின் வாழ்கையை புரட்டி போடுகின்றது.

வேக வேகமாக செல்லும் அறிவியலுக்கு ஈடு கொடுக்க முடியாமல் மனம் உழைச்சல் அடைகிறன்றது இதனால் உடல் பாதிப்பு அடைகின்றது.

எண்ணங்களின் வழியே தான் எல்லாம்..

உங்களின் ஆனந்தமான வாழ்க்கை உங்களின் மனதில் தோன்றும் நேர்மறையான எண்ணங்களும், நேர்மறையான வார்த்தைகளும் தான்.

நேர்மறை எண்ணங்களை நம்மில் உருவாக்க, அதிகரிக்க செய்யும் இரகசியம் சில உங்களுக்காக...

**"ஆன்மிகமும் அறிவியலும் இணைந்த ரகசியம்"**

01. சுவாசம் / பிராணன் / *kapal-vathya*

*"Connections bet been breath & the mind"*

மனிதனின் ஒவ்வொரு உணர்வுகளுடன் சுவாசம் கொண்டுள்ளது.

நன்றாக அவதானித்து பார்த்தால் மனித உணர்வுகள் ஒவ்வொன்றும் சுவாசத்துடன் தொடர்பு கொண்டவை.



*"When you inhale your breath feel that your taking in positives*

*When you exhale your breath feel that your releasing the negativity"*

கோபம் உணர்வு வரும்போது சுவாசம் உங்களை அறியாமல் அதிகம் செயற்படும்.

ஆனந்தமாக / மகிழ்வாக இருக்கும் போது சுவாசம் சீராக செயற்படும்.

அதிக யோசனை / சிந்தனை / குழப்பமான சூழல் / மன அழுத்தத்தில் இருக்கும் போது சுவாசம் நிலைமாறி இயங்கும்.

02. பிறருடன் உங்களை ஒப்பிடுபதனை நிறுத்துங்கள்.

மனிதன் ஒவ்வொருவருக்கும் ஒரு தனித்துவம் இருக்கின்றது அதில் ஒவ்வொருவரும் சிறப்பியல்பு கொண்டவர்களே..!

பிறருடன் ஒப்பிட்டு பார்க்கும் போது தேவை அற்ற மன குழப்பங்கள் ஏற்படும்.

03. அதிகாலையில் எழுந்து கொள்ளுங்கள்...

பெரும் செல்வந்தர்கள், வெற்றியாளர்களின் பெரும் ரகசியங்களில் ஒன்று.

குறைந்தது 4.30 - 5.30 வரையான நேரதில் எழுந்து கொள்ளுதல். அதில் முதல் 100 நிமிடங்கள் உங்களுக்காக ஒதுக்கி கொள்ளுதல்...

- 1வது 20 நிமிடம் - உடல் கழிவுகளை வெளியேற்றல்.
- 2வது 20 நிமிடம் - சுவாசம், உடல் உறுப்புகளை செயற்படுத்த. ( *yoga* / வர்மக்கலை )
- 3வது 20 நிமிடம் - ஆழ்மனதில் நேர்மறை எண்ணங்களை பதிவு செய்தல்.
- 4வது 20 நிமிடம் - குறிப்பிட்ட நாளை திட்டமிடல்.
- 5வது 20 நிமிடம் - குடும்பதுடன் செலவிடல்.

04. ஆழ் நிலை தியானம் / *Alpha mind meditations.*

05. இயற்கையோடு இணைந்து இருங்கள்.

வாரத்தில் / மாதத்தில் ஒரு முறையேனும் இயற்கையான இடங்களுக்கு சென்று வாருங்கள். சுத்தமான காற்றை சுவாசிக்க கூடிய இடங்களுக்கு செல்லுங்கள்.

உங்கள் மனம் அமைதி அடையும், மகிழ்வான மன நிலை உண்டாகும்.

06. அதிக நேரம் சமுக ஊடகளில் உலாவருபதை தவிர்த்தல்.

இன்றையகாலத்தில்அதிக நேரம் சமுக ஊடகங்களில் செலவு செய்பதனால் அதில் பல எதிர்மறையான விடயங்களே பகிரப்படும், அதனை பார்பவர்களுக்கு எதிர்மறையான சிந்தனைகள் அவர்களை அறியாமலே உள்வாங்கி கொள்கின்றனர்.

மேற் கூறிய விடயங்கள் எல்லாம் மனதினை திறம் படுத்த கூடிய, செயற்படுத்த கூடிய ஒரு சில விடயங்களே..!

நிகழ்கால நவீன உலகில் (*modern world*) சுற்றிவர எதிர்மறை விசைகளே அதிகம் உள்ளன, இது பெரும் சவாலான விடயம் தான்..

உங்களின் மனதில்,உங்களின் உள் உணர்வு என்ன சொல்கின்றதோ அதை திட்டமிட்டு சரியாக செயற்படுத்தே சிறந்தது..

ஒரு காரியம் செய்ய முற்படும் போது பல எதிர்மறையான கருத்துக்கள் பலர் முன்வைப்பர், எதிர் விசைகள் தாக்க கூடும்..

இருப்பினும் உங்களின் உள் உணர்வு எது சரி என கூறுகின்றதோ அதனை சரியான முறையில் செயற்படுத்துங்கள்...

வெற்றி உங்களை தொடரட்டும்...!

சிந்தையது என்னச் சிவனென்ன வேறில்லை
சிந்தையின் உள்ளே சிவனும் வெளிப்படும்
சிந்தை தெளியத் தெளியவல் லார்கட்குச்
சிந்தையின் உள்ளே சிவனிருந்தானே.

திரு மந்திரம் - 2853

**"நல்லது நடக்கும், நன்மைகள் பெருகும்"**





# முதன்முறையாக வெளிநாட்டு லீக்கில் யாழ் மைந்தன் வியாஸ்காந்த்!



லங்கா பிரீமியர் லீக்கில் (LPL) ஜப்னா கிங்ஸ் அணிக்காக விளையாடிய யாழ். வீரர் விஜயகாந்த் வியாஸ்காந்த் பங்களாதேஷில் நடைபெறவுள்ள பங்களாதேஷ் பிரீமியர் லீக்கில் (BPL) விளையாடவுள்ளார்.

LPL தொடரில் 8 இன்னிங்ஸ்களில் 13 விக்கெட்டுகளை சாய்த்து ஜப்னா கிங்ஸ் அணி ஹெட்ரிக் கிண்ணம் வெல்வதற்கு உதவியாக இருந்ததுடன், சிறந்த வளர்ந்து வரும் வீரருக்கான விருதையும் வென்றிருந்தார்.

இந்தநிலையில் வியாஸ்காந்த் தற்போது BPL தொடரில் செட்டகிராம் செலஞ்சரங்ஸ் அணிக்காக ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளதாக அவருடைய முகாமையாளர் ஷியாம் தெரிவித்துள்ளார்.



இது தொடர்பில் ஷியாம் குறிப்பிடுகையில், “இளம் வீரருக்கு இதுவொரு சிறந்த வாய்ப்பு. இந்த வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்த அணிக்கு நன்றியாக உள்ளோம். அங்கு கிடைக்கும் அனுபவம் வியாஸ்காந்திற்கு அதிகமாக உதவும்” என்றார்.

LPL தொடரில் வாய்ப்பினை சரியாக பயன்படுத்திக்கொண்ட வியாஸ்காந்திற்கு வெளிநாட்டு தொடர் ஒன்றில் விளையாட கிடைக்கும் முதல் வாய்ப்பு இதுவாகும். வியாஸ்காந்திற்கு வாய்ப்பு கிடைத்துள்ளபோதும், தொடருக்கு செல்வதற்கான அனுமதி இலங்கை கிரிக்கெட் சபையிடமிருந்து இதுவரை கிடைக்கவில்லை.

செட்டகிராம் செலஞ்சர்ஸ் அணியில் விஜயகாந்த் வியாஸ்காந்த் மாத்திரமின்றி இலங்கை வீரர்களான விஷ்வ பெர்னாண்டோ மற்றும் அஷான் பிரியன்ஜன் ஆகியவர்கள் ஏற்கனவே இடம்பெற்றுள்ளனர். அதுமாத்திரமின்றி வியாஸ்காந்த் உட்பட மொத்தமாக 14 இலங்கை வீரர்கள் BPL தொடரில் விளையாடவுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

### BPL தொடரில் விளையாடவுள்ள இலங்கை வீரர்கள்

**செட்டகிறொம் செலஞ்சர்ஸ்** – விஷ்வ பெர்னாண்டோ, அஷான் பிரியன்ஜன், விஜயகாந்த் வியாஸ்காந்த்

**டாக்கா டொமினேட்டர்ஸ்** – சாமிக்க கருணாரத்ன, டில்ஷான் முனவீர

**குல்னா டைட்டன்ஸ்** – அவிஷ்க பெர்னாண்டோ, தசுன் ஷானக

**ராங்பூர் ரைடர்ஸ்** – ஜெப்ரி வெண்டர்சே, பெதும் நிஸ்ஸங்க

**சில்ஹெட் ஸ்ரைக்கர்ஸ்** – கமிந்து மெண்டிஸ், திசர பெரேரா, தனன்ஜய டி சில்வா

**போர்ச்சுன் பரிஷல்** – குசல் ஜனித் பெரேரா, சதுரங்க டி சில்வா

### தனது சுழல்பந்து பாணியை மேம்படுத்த யாழ். நட்சத்திரம் வியாஸ்காந்த் திட்டம்

தனது பந்துவீச்சு பாணியை மேலும் மேம்படுத்தி சுழற்பந்து வீச்சாளராக சர்வதேச மட்டத்தில் இலங்கைக்கு பெருமை சேர்க்க எதிர்பார்ப்பதாக குறிப்பிட்டுள்ளார்.

லங்கா பிரீமியர் லீக் தொடரின் போதே இவ்வாறு குறிப்பிட்டார்.

“நான் யாழ்ப்பாணத்திலும், கொழும்பிலும், இங்கிலாந்திலும் சுழற்பந்து வீச அதிகம் பாடுபட்டு உச்ச அர்ப்பணிப்புடன் பயிற்சி பெற்றிருக்கிறேன். அதே போன்று எதிர்காலத்தில் கழகங்களுக்கு இடையே தேசிய மட்டப் போட்டிகளில் பங்கேற்று உச்ச திறமையை காண்பிப்பது எனது எதிர்பார்ப்பாகும். அதன்மூலம் நாட்டுக்கு பெருமை சேர்க்க வாய்ப்புக் கிடைக்கும் என்று நம்புகிறேன்” என்று வியாஸ்காந்த் குறிப்பிட்டார்.

இதில் அவர் மேலும் கூறும்போது, “யாழ்ப்பாணத்தில் பல பயிற்சியாளர்கள் இருக்கிறார்கள். நான் அங்கு இன்னும் பயிற்சி பெறுகிறேன். ஆனால் கொழும்பில் பயிற்சி பெறும்போது இங்கு இருக்கின்ற வசதிகள் அதிகம் பயன் தருகிறது. எதிர்வரும் கழகங்களுக்கு இடையிலான போட்டிகளில் தமிழ் யூனியன் அணிக்காக மீண்டும் பங்கேற்று திறமையை வெளிப்படுத்த நான் எதிர்பார்த்துள்ளேன்” என்றார்.

தேசிய மற்றும் சர்வதேச மட்டத்திலான வீரர் ஆவதற்கு அதிக அர்ப்பணிப்பு மற்றும் கடுமையாக பயிற்சிகளை பெற வேண்டி இருப்பதாகக் குறிப்பிடும் வியாஸ்காந்த் அவை அனைத்தையும் வெற்றி கொள்வதற்கு தாம் எதிர்பார்ப்பதாகவும் நம்பிக்கை தெரிவித்தார்.

யாழ். மத்திய கல்லூரியைச் சேர்ந்த 21 வயதான விஜயகாந்த் வியாஸ்காந்த் லங்கா பிரீதியர் லீக் தொடரில் ஜப்னா அணிக்காக கடந்த மூன்று தொடர்களிலும் ஆடி வருகிறார்.



# உலகிற்கு விடை கொடுத்தார் ஜாம்பவான் பீலே

தென்அமெரிக்கநாடானபிரேசில் நாட்டின் பிரபல உதைபந்து வீரர் பீலேவுக்கு (வயது 82). கடந்த ஆண்டு பெருங்குடலில் அறுவை சிகிச்சை செய்யப்பட்டு புற்றுநோய் கட்டி அகற்றப்பட்டது. இதன்பின்னர், அவருக்கு கடந்த 2021-ம் ஆண்டு செப்டம்பரில் இருந்து கீமோதெரபி சிகிச்சை அளிக்கப்பட்டு வந்தது.

இதனையடுத்து, பிரேசிலின் சாவ் பொல்ஹொ பகுதியில் உள்ள மருத்துவமனையில் கடந்த மாதம் இறுதியில் பீலே அனுமதிக்கப்பட்டார். அவருக்கு வைத்தியர்கள் தொடந்து சிகிச்சை அளித்து வந்தனர். புற்றுநோய் மிகவும் முன்னேறி உடலின் சில பாகங்களுக்கு பரவியது.

மேலும், நுரையீரல், இதய செயல் இழப்பு தொடர்பான சிகிச்சைகளுக்கான அதிநவீன பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ள பீலேவை வைத்தியர்கள் 24 மணி நேரமும் கண்காணித்து வந்தனர்.

இந்நிலையில் இதயம் மற்றும் சிறுநீரகம் கடுமையாக பாதிக்கப்பட்ட நிலையில் சிகிச்சை பலனின்றி கால்பந்துஜாம்பவான்பீலேஉயிரிழந்ததாக அவரது மகள் தனது இண்ஸ்டாகிராம் பக்கத்தில் தெரிவித்துள்ளார்.

முன்னதாக எல்லா காலத்திலும் சிறந்த கால்பந்து வீரர்களில் ஒருவராக கருதப்படும் பீலே மூன்று முறை உலகக் கோப்பையை வென்றவர். அவரது முதல் உலகக் கோப்பை வெற்றி 1958 இல் ஸ்வீடனில் கிடைத்தது. அரையிறுதியில் ஹாட்ரிக் கோல் அடித்தார். பிரேசிலின் 1962 உலகக் கோப்பையின் போது அவர் காயமடைந்தார்.

தொடர்ந்து பீலே 1970 ஆம் ஆண்டில் மூன்றாவது முறையாக உலகக் கோப்பை கோப்பையை தனது கைகளில் பெற்றார் மற்றும் தங்கப் பந்தை வென்றார். போட்டியில் 4 கோல்கள் அடித்தார். பிபா (FIFA) உலகக் கோப்பைகளில் அதிக வெற்றிகளைப் பெற்ற வீரர் என்ற கின்னஸ் புத்தகத்தில் பீலே இடம்பெற்றிருந்தார். 16 வயதில் பிரேசில் அணியில் அறிமுகமான பீலே, தனது நாட்டு அணியில் 1971 ஆம் ஆண்டு வரை இடம்பெற்றிருந்தார்.



இந்நிலையில் பீலே மறைவுக்கு உலகெங்கும் உள்ள கால்பந்து ரசிகர்கள், தங்களது இரங்கல்களை தெரிவித்து வருகின்றனர்.

Published by Kalmunainet Media Network (Pvt) Ltd. at Boundary Road, Kalmunai 01. on Saturday, 31. 12. 2022


Sun Energy
SHINE OF LIFE
Kalmunai Akkaraipattu
மின் தடைகளுக்கு உடனடித் தீர்வு....
உங்கள்
இல்லங்கள், தொழிலகங்கள்,
ஆலயங்கள், தேவாலயங்கள் மற்றும் பள்ளிவாசல்களில்
ஏற்படும் மின்தடைகளின் போதும் தடையின்றி மின்சாரத்தைப்
பெற்றுக் கொள்ளவும் மின் கட்டணங்களை குறைப்பதற்கும்
Sun Energy
SHINE OF LIFE
இடமிருந்து சிறந்த தீர்வுகள்
Solar penal
Inverter
Solar Battery
போன்றவற்றையும் எம்மிடம்
பெற முடியும்
OKAYA
SOLAR
தொடர்புக்கு
0752905850
Sun Energy
SHINE OF LIFE
Kalmunai – Akkaraipattu